
# கலைமன்றம்

4-6-55

AUG 1956
OFFICE OF THE ... GISTRA...
3 - JUN...
MADRA...





கண்ணாடி போன்ற நீரில்—நடனமா, நீச்சலா?

பிரசுரம்

தீ. முத்து, கரூர்

# கலைமன்றம்

மலர் 2 — 4 ஜூன் '55 — இதழ் 23





## பொருளடக்கம்



கார்ட்டூன் 2
தீனக்குரல் . . . (தலையங்கம்) 3
கண்ணோட்டம் 5
வெட்டும், ஒட்டும் 7
காதலும் கண்ணீரும் 8
எரிமலை 14
கேளுங்கள், கொடுக்கப்படும் 15
இல்லறத்திலே 17
கலைமன்றம் பார்லிமெண்ட் 25
மவராசன் 26
பாரதிதாசன் கவிதை அரங்கம் 30
புன்னகை 33
புகைப் படக் கலைப்பகுதி 42
பூனை புலியானால் 43
அழகுத் தீவு 46
எப்போது காண்பேன் 49
அழகு எரிந்தது 59
ஏன்......? 67
இதயப் புண் 74


பிரசுரமாகும் எழுத்தோவியங்களி லுள்ள பெயர்கள், நிகழ்ச்சிகள் யாவும் கற்பனை.



"ஐயோ! அமெரிக்க நெய்யா"

—சங்கர்ஸ் வீக்லி



"நாட்டிலும் பாதி—ஏட்டிலும் பாதியா?" இந்தியா ஹவுஸ் நூல்களை, இந்தியாவும் பாகிஸ்தானும் பங்கு போட்டுக் கொள்ளப்போகிறுர்கள்.

—சங்கர்ஸ் வீக்லி

விருப்புடன் வருக என வாழ்த்துபவர் வாழ்த்தட்டும்.
வெறுப்புடன் வேண்டாமென்போர் விருந்துண்டு வாழட்டும்.

7 AUG 1956

# தமிழ்மன்றம்

சென்னை | 4—6—55 | சனி

# ஈனக் குரல்

அன்னிய நாட்டாரின் ஆதிக்கம் தமது தாயகத்தின் எந்தவொரு சிறு பகுதியிலும் இருத்தல் கூடாது என்று கருதுவது—ஆதிக்கத்தை அடியோடொழிக்க முயலுவது—இன்னலையும் இடையூறுகளையும் ஏற்பது—இறுதியிலே இலட்சியத்தை எய்துவது—இவ்வாறு எண்ணுவது விடுதலை வேட்கை கொண்டோரின் இயல்பான இலட்சியம். ஆனல் இந்திய உபகண்டம் மட்டிலும் இவ் இயல்பான இலட்சியத்தை முழுக்கவும் நிறைவேற்றத் தவறியதின் விளைவுதான் இன்றளவும் பிறநாட்டாரின் ஆதிக்கம் இந்தியப் பூமியிலே 'பீடித்த பெரும்பிணி'யாகப் பற்றிக் கொண்டிருக்கிறது.

வெள்ளையரை வெளியேற்றிய போதே பிற ஆதிக்க வெறியர்களையும் விரட்டி யிருக்க வேண்டும். அவ்வாறு நடந்திருக்குமாயின் இந்திய உபகண்டமும் பூரண விடுதலை பெற்ற நாடாகக் கருதப்பட்டிருக்கும்—பிறராலும் மதிக்கப் பட்டிருக்கும்.

மன மருட்சியினலோ அன்றி 'இப்போது தேவையற்ற பிரச்சினை' என்ற அசட்டையான எண்ணத்தினலோ காரைக்கால்-புதுச்சேரி ஆகியவை பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலும், கோவா—டையூ—டாமன் போர்த்துக்கீசியரின் கோரப்பிடியிலுமாக அகப்பட்டுக் கொண்டன. இவை தனித்தனி நாடுகளல்ல, நகரங்கள்—இந்திய உபகண்டத்தைச் சார்ந்த சிறுசிறு பகுதிகள். இருப்பினும் அன்னியரின் 'ஆடலரங்கங்களாக' — களவாடிக் கொடுக்க இடமளிக்கும் கழனிகளாக—விளங்கின.

சாட்டை அடிகளால் சுருண்டு கீழே சாய—உடலிலிருந்து உதிரம் பாய—சற்று நேரத்தில் உயிரும் ஓயுமோ என்ற ஐயம் மேலிட்டுத் துவண்டு கிடப்பவனைப் பார்த்துப், 'பொறுத்தார் பூமி யாள்வார்' என இதோபதேசம் செய்வது ஏற்கக் கூடியதல்ல இதய மிருப்பதால், ஏளனத்திற்குரியது. இத்தகைய இக்கட்டான நிலையிலே தான் பிரஞ்சு—போர்த்துக்கீசிய ஆதிபத்யத்தில் சிக்குண்டு காரைக் கால், புதுவை, கோவா, டையூ, டாமன் மக்களும் அவதிப்பட்டனர். அப்போதும் இந்தியப் பேரவையினர் 'கவனிப்போம்' என்றே இலகுவாக ஆறுதல் கூறி வந்தனர். அவதி அதிகரிக்க அதிகரிக்க ஆற்றுவாரும் தேற்றுவாரும் இருந்தென் செய்ய? பொங்கியெழும் புரட்சிக் காட்டாற்று வெள்ளம், 'கவனிப்போம்' என்று கட்டுக்கு மீறுமல் காத்திருக்குமா? எழுந்தது எழுச்சி—எய்தினர் வெற்றி. பிரஞ்சு ஆதிக்கம் வேரோடு வீழ்ந்தது. காரைக்கால்—புதுவைப் பகுதிகள் விடுதலை பெற்று வாழ்கின்றன இப்போது.

ஆனல் கோவா, டையூ, டாமன் ஆகிய இடங்கள் மட்டும் இது காறும் போர்த்துக்கீசிய ஆணவத்தாரிடமிருந்து அகல முடியாமல் அல்லலுறுகின்றன. விடுதலைத் தாகமிக்கோர் வேகமுடன் செய லாற்றி விரைவில் வெற்றி காண விழைகின்றனர். இவ் விழைவு வெற்றி பெறுதல் வேண்டும்—அன்னியர் அகற்றப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் கருத்துவேற்றுமை இருக்க முடியாது—இருக்கக் கூடாது.

அறப்போர் ஆரம்பித்துள்ளனர்—கோவா வீரர்கள். அஹிம் சையினின்று அணுவளவேனும் பிசகாமல் உரிமைப் போர் புரியும் வீரர்களின் குருதியாறு பாய்ந்து கோவா நிலப்பரப்பு செந்நிறம் பூசப்பட்டுக் காட்சி யளிக்கிறது 'கேட்பாரில்லையா?' என்ற குமுறும் பேச்சு—'ஆதரவு காட்டமாட்டீர்களா' அபாயக் குரல்—கோவாவி லிருந்து எழும்பியவாறு இருக்கின்ற இந் நிலையிலுங் கூட இந்தியப் பேரவையினர் 'கண்காணித்துத் தான் வருகிறேம்' மென இசைப் பாணியிலே ஆலாபனம் செய்து கொண்டிருப்பது அழகல்ல. ஹைதராபாத் இந்திய யூனியனில் இணைய மறுத்து இடும்பு செய்த போது 'ஹைதராபாத் பாரத மாதாவின் ஒரு அங்கம்' என்று காரணங்காட்டி 'போலீஸ் நடவடிக்கை' எடுத்த மத்திய அரசினர் கோவாவின் தீனக்குரலைக் கேட்டும் தொல்லை தீர்க்கப் புறப்படா தது ஏன்? சர்வதேசிய நெருக்கடியை உண்டாக்குமே என்ற அச்சமா? பாண்டுங் மாநாட்டில் விடுதலை வேட்கைக்கு இலக்கணம் வகுத்துப் பேசிய நேரு இன்னும் கோவா மக்களை மீட்க முடியாதது என்?

'பொறுத்தது போதும். படமுடியாது இனித் துயரம்' என்று துடியாய்த் துடிக்கும் கோவா மக்களின் சார்பாக வேண்டுகிறேம், உடனே அவர்களுடைய தீனக்குரலைச் செவிமடுத்துத் தக்கதோர் நடவடிக்கை எடுத்து—தீயோரைத் தடுத்து—விடுதலை வீரர்களின் உள்ளங்களிலே பால் வார்க்க வாரீர் என்று.




"தமிழில் அர்ச்சனை செய்வதை எதிர்க்க எண்ணுபவர்கள், தம்மை யறியாமல் வட மொழியின் மீதும் ஒரு குறிப்பிட்ட இனத்தவர் மீதும் தமிழ் நாட்டில் வெறுப்பு ஏற்பட வழி வகுக்கிறார்கள்."

இப் பொன் மொழியை உதிர்த்த உத்தமர் பெரியாரோ, அவருடைய 'பெர்மனட்' குத்தூசியோ அல்ல—அண்ணாவோ, அவரின் தம்பிமார்களில் ஒருவரோ அல்ல. அவர்தான் எனது மதிப்புக்குரிய குன்றக்குடி அடிகளார். குன்றக்குடி அடிகளார் 'ஞானி'யாகப் பல விஷயங்களைப் பற்றிப் பேசுவதில் பலே கெட்டிக்காரர்.

சாதிகள் கூடாதென்பார்—சமயச் சச்சரவுகள் ஏன் என்பார். சர்வதேசிய நிலவரம் தருவார். இப்படியே சமூகம்—மதம்—அரசியல் ஆகியவை பற்றித் தமது கருத்தை வெளியிடுவார். இவர் மதவாதியா? இல்லை! சாதீய வாதியா? இல்லை! அரசியல் வாதியா? இல்லை. எந்தக் கோணத்தில் பார்த்தாலும் கண்டுபிடிக்க முடியாத புதிரா? யார் சொன்னது நிலைக்கண்ணாடிக்குப் பெயர் புதிர் என்று? உயர்வு நவிற்சியில் சொல்லுவதென்றால் அவர் கால தேசவர்த்தமானத்தைக் கருதிச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கரண்ட் நியூசைத் தருவார்.

அப்படி இவர் கொட்டிய பொன்மொழிதான் மேலே நான் குறிப்பிட்டது. பரமன் மீது 'பக்தி' கொண்டு இப் பொன் மொழியை விட்டுப் பார்த்தார், இன பேதமில்லாமல் எல்லா பக்த சிரோன்மணிகளும் ஏற்பார்கள் என்ற 'நல்ல' எண்ணத்தில். பாவம்! பக்தர்களுக்கும் பரமனுக்கும் இடையே இருப்பவர்களான அர்ச்சகர்கள் "ஆஹாஹா விட்டோமா அடிகளாரை" என்று அறிக்கை விட ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆண்டவனைப் பூஜிக்க வரும் பக்தர்களிடம் 'தட்சணைப் பீஸ்' எவ்வளவு வாங்கலாம், லட்சார்ச்சனைக்கு விதித்திருக்கும் 'விகிதம்' போதாதது என்று இப்படிக்கான 'சத்' காரியங்களில் இதுவரை கவனம் செலுத்தி வந்த அர்ச்சகர் சங்கங்கள் எல்லாம் கட்டுப்பாடாகக் குன்றக்குடிகளார் மீது ஆத்திரப்படுகின்றன.

'ஸ்ரீ அஹோபிலமடம் ஜீயருக்கும் அடிகளார் மடல் விடு தூது நடாத்தினர். முடிவு என்ன? 'பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம் முதலியவை மூல மந்திரங்கள்' என்று 'மடஜீயர்' திருவாய் மலர்ந்தருளிவிட்டார். தமிழில் அர்ச்சனை செய்வது முறையல்ல என்று ஆணித்தரமாக அறைந்து விட்டார். இனி அடிகளார் என்ன

செய்யப்போகிறார்? என் மனதில் அழுத்தமாக விழுந்துவிட்ட வருத்தம் மட்டும் தீரப்போவதில்லை. பல ஆண்டுகட்கு முன்பு பகுத்தறிவு வாதிகள் "அவரவர் தாய் மொழியிலே ஆண்டவனை வணங்கினால் என்ன? தமிழ் தெரியாத ஆண்டவன் இருப்பாரா?" என்று கேட்டார்கள். அப்போது அர்ச்சகர்களுக்குப் புன்மொழியாகப்பட்டது. இப்போது அடிகளார் வாயிலிருந்து வருவதால் பொன்மொழியாகக் கருதி அர்ச்சகர்கள் பின்பற்றுவார்கள் என்று நம்பி மோசம் போனேன். நான் அடைந்த மோசம் வாழட்டும் என்று அர்ச்சகர்கள் வேண்டுமானால் ஆனந்தப் படட்டும்.

ஆனால் தமிழ் நாட்டுப் பக்தர்கள், புனிதமான தமிழ் நாட்டில் பிறந்தவர்களாயிற்றே அவர்களாவது கண்டிப்பாகத் தமிழில் அர்ச்சனை செய்தால் என்ன? பன்னெடுங் காலமாகப் புரியாத மொழியில் அர்ச்சனை செய்து வாழ்நாளெல்லாம் வீணாளாக்கி விட்டார்களே!

இது ஆண்டவனுக்கும் 'அடுக்காத செயல்' எனவே குன்றக்குடி அடிகளார் எச்சரிப்பதுபோல் தென்னாட்டில் 'வடமொழியின் மீதும் ஒரு குறிப்பிட்ட இனத்தவர் மீதும் வெறுப்பு ஏற்பட' வழி வகுக்க வேண்டாம், என்று அர்ச்சகர்கட்கு நானும் நினைவூட்டுகிறேன். 'ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர் புலி வேஷம் போடுகின்றார்—பொது மக்கட்குப் புல்லளவு மதிப்பேனும் தருகின்றாரா?' என்ற மனப் புயலை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்வது அறிவுடைமையல்ல. குன்றக்குடி அடிகளார் இப பிரச்சினையில் வெற்றி பெறுவாரா? தமிழ் நாட்டுப் பக்தர்கள் யாவரும் அடிகளாருக்குப் பக்கபலமாக நின்று வெற்றிதேடித் தருவார்களா? பார்க்கலாமே 2000 ஆண்டுச் சரித்திரத்தை மாற்றி விடுவார்களா என்று.

—"பித்தன்"

---

## அடுத்த இதழிலே............

'கலைமன்றம்' 28-5-55-ம் இதழில் 'விவாத அரங்கம்' தந்த 'வேண்டாம் அத்தான்' என்ற மடலுக்கு 'ஆணித்தரமான' மறுப்பு எழுதுகிறார் ஒரு பெண்மணி. இன்னும் பெண்கள் பலரிடமிருந்து இப் பகுதிக்கேற்ற மடல்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

கலைமன்றம் 'பார்லிமெண்டில்' வாசகர்கள் — கலைஞர்கள் ஆகியோரிடமிருந்து வந்துள்ள கருத்துரைகள் இடம்பெறும்.

முகப்பின் வனப்பே வனப்பு, என்று பூரிக்கும் அளவுக்கு அழகு தவழும் அட்டைப்பட ஓவியம். தித்திக்கும் செய்திகள்—திகட்டா எழுத்தோவியங்கள்—தலைசிறந்த இலக்கியச் சுவைகள் அனைத்தும் இடம் பெறுகின்றன.

கூடிய விரைவில் பிரபல நாவலாசிரியர் : எழுதும் 'கழுகுமலைக் கைதி' என்னும் புத்தம் புதிய துப்பறியும் தொடர்கதை வெளிவரவிருக்கிறது.

—ஆசிரியர்.




சிறைகளில் அரசியல் கைதிகள் இருந்த வார்டுகள் மட்டும் காலியாகவே வைக்கப் பட்டுள்ளன. ஒருவேளை அவர்கள் மீண்டும் வருவார்களென்று ஜெயில் அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்களோ என்னமோ!

—கவர்னர் பிரகாசா

**'காலம் மாறும்' என்ற கருத்தின் விளைவுதான் அவரது இந்தப் பேச்சு என்று யாராவது நம்பினால் அதற்குக் கவர்னர் மறுப்பு விடமாட்டார் என்று எதிர்பார்க்கலாம்.**

* *

'பெலிலூ' என்ற பசிபிக் தீவில் அமெரிக்கருக்குப் பயந்துகொண்டு எந்த மறைவிடமும் கிடைக்காமல் போனதால் ஒரு நரிவளையில் நுழைந்த 'கெய்கிடோகு கோயா' என்பவர் 10 ஆண்டு காலமாக நரிவளை வாசியாக வாழ்கிறார்.

—செய்தி

**போலீஸ்காரர்களின் மிரட்டலுக்கும் சென்னைக் கார்ப்பரேஷன் காரர்களின் உருட்டலுக்கும் அன்றாடம் பயந்து வாழும் பிளாட்பாரம் வாசிகளுக்கு இச் செய்தியைத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அச்சிட்டுக் கொடுக்கலாம் என்கிறார் பங்களாவாசி ஒருவர்.**

* *

'எனது இரு பிள்ளைகளும் வாங்கும் கடன்களுக்கு, நான் பொறுப்பாளியல்ல.'

—ஹைதராபாத் நிஜாம்

**பொக்கிஷம் 'எம்டி' யாகிவிட்டதோ என்று சந்தேகப்பட்டு நிஜாமுக்கு நிதி உதவிதர அமெரிக்கா முன் வந்தாலும் வரலாம், ஹைதராபாத்திலும் கம்யூனிஸ்டுகள் இருப்பதால்.**

* *

கீழ்ப்பாக்கத்திலுள்ள இளங் குற்றவாளிகள் தங்கள் சீர்திருத்தப் பள்ளி ஆண்டு விழாவில் சம்பூர்ண ராமாயணத்தை 15 நிமிடங்களில் நடித்தார்கள். தமது பாராட்டுதலைத் தெரிவிக்கையில் முதல்வர் காமராஜர் இந்த ராமாயாணத்துக்கு எதிர்ப்பே இருக்காது என்றார்.

—செய்திச் சுருக்கம்

**இது ராதா ராமாயணத்துக்கு நாங்கள் காட்டும் எதிர்ப்பை மறைமுகமாகக் கண்டிக்கும் பேச்சு என்று, பக்தர் படையினர் செத்த பிறகுங்கூட மேலுலகிலும் உண்ணாவிரதமிருக்கத் தீர்மானித்து விட்டார்களாம்.**

* *

லட்சுமணபுரி மருத்துவ விடுதியிலுள்ள ஓநாய்ச் சிறுவனின் வரலாறுபற்றி அதிகாரிகள் புத்தகம் எழுதுவார்கள்.

—செய்தி

**கவனமாக எழுதட்டும். அது புராணமாக மாறிவிட்டால்?**

**ஓநாய்ச் சிறுவனும் ஒரு 'அவதாரமாக' ஆக்கப்பட்டுக் கோவிலுக்குள் அடைபட்டு விடுவான் என்று இப்போதே எச்சரிக்கிறார் ஒருபகுத்தறிவுவாதி.**

# காதலும் கண்ணீரும்



ஏ.வி.பி.ஆசைத்தம்பி

**முன் கதை:—**

[சாந்தா வொரு இளங் குமரி. தனது அக்கா, ரமணி திருமணமாகி, கணவனோடு புறப்பட்டுப் போனபிறகுதான் சாந்தாவுக்குப் பருவம்நெஞ்சத்தை நச்சரிக்க. தாய் தந்தையர் இருந்தும் தனியாக வாழ்வது எவ்வளவு சங்கடமாக இருக்கிறதென்பதை உணர்ந்து வருந்தினாள்; அக்காளுக்கும்—அத்தானுக்கும் விடை கொடுத்து அனுப்பி விட்டுத் தன் அறையினுள் நுழைந்தவுடன். அப்போது அவளது சிந்தனை கடந்த காலத்தை நோக்கி விரைகிறது. அக்காள் ரமணி கல்லூரி மணவி. அவளுடன் படித்து வந்த மாணவன் வடிவேலு. இருவரும் டேபிள் டென்னிஸ் விளையாட்டின் போது ஒரு நாள் அறிமுகமாகி, அதன் பின்பு 'காதல் ஜோடி' ஆகிவிட்டார்கள். இவர்களின் பேச்சைப் பற்றிச் சந்திப்பைக் குறித்துச் சர்வசதா கேட்டு அறிந்து கொள்வதில் சாந்தாவுக்கு அலாதிப் பிரியம். இதுவரை அனுபவத்தில் காதல் நோய் கண்டறியாப் பிஞ்சல்லவா! பின்னர் ரமணியும்—வடிவேலுவும் தம்பதிகளாக்கப் பட்டார்கள்.

இதுவே சாந்தா மனத்திரையில் ஓடிய சிந்தனை யோட்டம்.

துணை யில்லாமல் பொழுது போகா நிலையில் தவித்த சாந்தாவுக்கு ஒருத்தி வந்து சேர்ந்தாள். அவள் சாந்தாவின் தாய் மாமனுடைய மகள்-சாவித்திரி. அவளும் பருவப் பெண். ஆனால், நிகழ்கால நாகரிகத்தின் நேரடியான வாரீசு. அவளால் தனக்குத் தீந்த விளையு மென்பது முதலில் தெரியாது பழகினாள். இனி சாந்தாவும், சாவித்திரியும்......? மேலே படியுங்கள்...]

"நீங்கள் இஷ்டப்படும்போது நான் குறுக்கே என்ன?" என்று அம்மா ஒதுங்கிக் கொண்டாள்.

அப்பா கடிதம் மாமாவுக்கு எழுதினார்.

அவர் உடனே சாவித்திரியைத் தக்க துணையோடு அனுப்பி வைத்து விட்டார்.

மாமாவின் பெண் பெயர் தான் சாவித்திரி.

ஏறக்குறைய அவளுக்கு என் வயதுதான் இருக்கும். என்னை விட எல்லாவற்றிலும் ஒருபடி மேலாகவே இருந்தாள்.

நாங்கள் இருவரும் பக்கத்தில் பக்கத்தில் நின்றால் அவளைத் தான் அழகி என்று சொல்லுவார்கள். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள்......

படிப்பை நிறுத்தி விட்டாளாம்!

அவளைப் பார்த்தவுடன் அம்மா கேட்ட முதல் கேள்வி, "அம்மாவுக்கு என்ன உடம்புக்கு?"

என்றுதான் கேட்டாள். அதற்கு அவளால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை.

"பிறகு சொல்கிறேன்!" என்று சொல்லி விட்டாள். தாயாரைப் பற்றிக் கேட்டால் அவளுக்கு ஏதாவது மனக் கஷ்டமாக இருக்கும் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

உண்மைக் காரணம் அதல்ல!

அவள் தாயாரைப் பற்றிப் பேசவே இஷ்டப்படவில்லை! ஏனெனில் அவள் தாயார் இறக்கவேயில்லை!

இன்னும் உயிரோடுதான் இருக்கிறுளாம்!

இரண்டொரு தினங்கள் பழகியவுடன் சாவித்திரி எனக்கு மிகவும் நெருங்கியவளாகி விட்டாள்.

அதற்குப் பிறகுதான் நான் அவளிடம் கேட்டேன் அவள் தாயாரைப் பற்றி!

அவள் சொன்னுள்:

"அதைப் பற்றிச் சொல்லவே எனக்கு வெட்கமாக இருக்கிறது சாந்தா! அதனுல் தான் அத்தை கேட்டதற்குக்கூடப் பதில் சொல்லாமல் மழுப்பி விட்டேன். இம்மாதிரித் தொந்தரவுக்கெல்லாம், என் தாய் இறந்து விட்டாள் என்று கூடச் சொல்லிவிடலாம் போலிருக்கிறது ... குடும்பத்தின் பெயரையே அல்லவா கெடுத்து விட்டாள் அவள். அப்பாவுக்கு அதனுல் எவ்வளவு தலைகுனிவு பிறக்கும்?"

அதோடு நிறுத்திவிட்டாள்.

"நடந்ததைத்தான் சொல்லேன். நமக்குள் என்ன?" என்றேன்.

"பச்சையாகச் சொல்லவேண்டுமென்ருல் அம்மாவுக்கு இந்த வயதில் காதல் பிறந்து விட்டது சாந்தா! அவளுடைய காதலன் நீண்ட நாட்களுக்குப் பிறகு இப்போது அவளைத் தேடிக்கொண்டு வந்தானும்—அதனுல் அவனுடன் போய் விட்டாளாம். அப்படி ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிருள். வயது வந்த பெண் நான் வீட்டிலிருக்கிறேன் ...அதையெல்லாம் அவள் எண்ணிப் பார்க்கவில்லை." என்ருள்.

"உன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எதாவது சண்டையோ!" என்றேன்.

"அமைதியான வாழ்க்கை நடத்தி நான் பார்த்ததில்லை. எப்போது பார்த்தாலும் ரகளை தான்."

"போகட்டும்....அதைப் பற்றி இனி என்ன பேச்சு!" என்று அவ்விஷயத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தேன்.

# 4

தஞ்சையில் வடிவேலுவின் தகப்பனர் ஒரு பெரிய பங்களா வாங்கி விட்டதால், இங்கிருந்து தஞ்சைக்குக் குடியேறப் போகிருர்கள் என்பதை ரமணி அப்பாவுக்குத் தெரிவித்தாள். அதையடுத்து வடிவேலுவின் தகப்பனுரும் சொல்லி அனுப்பி யிருந்தார்.

அவர்களுக்கு ஒரு விருந்து வைத்து அனுப்ப வேண்டும் என்று அம்மா யோசனை சொன்னுள். நானும் அதை ஆமோதித்தேன். அக்காவை ஒரு நாள் இங்கு தங்க வைக்கலாமல்லவா?

என்னதான் அவள் உள்ளூரில் இருந்தாள் என்றாலும் என்னால் இன்னொருவர் வீட்டில் போய் அவளைப் பார்த்துவிட்டு வரமுடியவில்லை. மேலும் சாவித்திரியும் அக்காவைப் பார்க்கவில்லையே. அவர்கள்தான் யாரும் கல்யாணத்திற்கு வரவில்லையே?

"இந்த ஞாயிற்றுக்கிழமை உங்களுக்காக ஒரு விருந்து ஏற்பாடு செய்திருக்கிறோம்—தாங்கள் எல்லோரும் வந்திருந்து கௌரவிக்க வேண்டும்!" என்று அப்பா வடிவேலுவின் தந்தைக்குச் சொல்லி அனுப்பினார்.

வடிவேலுவும், ரமணியும் சனிக்கிழமை மாலையே வந்துவிட்டார்கள். காரின் சப்தத்தைக் கேட்டு நான் தான் முதலில் ஓடி அவர்களை வரவேற்றேன். அவர்களைத் தவிர வேறு இன்னொரு வாலிபரும் காரில் இருந்தார்! அதைக் கவனித்த நான் பின் வாங்கினேன்.

"என்ன சாந்தா பயந்துவிட்டாயா? நம்ம பயல்தான் வா?" என்றார் வடிவேலு.

அக்கா இறங்கி உள்ளே வந்தாள். அவளுடன் நானும் வந்துவிட்டேன். அந்தப் புது முகம் எனக்குக் கவர்ச்சிகரமாகத் தெரிந்தது.

அக்காவுக்கு நான் சாவித்திரியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்த அதே நேரத்தில் வடிவேலு அந்தப் புது நபரை அப்பாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார்!

"என் பிராண சிநேகிதன்.



இத்தனை நாள் மெட்ராசில் இருந்தான். இனி இங்கேதான் இருப்பான். இந்த ஊரில் தான் அவனுக்கு வேலையாகி யிருக்கிறது!'' என்றார்.

"பெயரைச் சொல்ல வில்லையே!" என்றார் அப்பா.

"ராஜா" என்றார் வடிவேலு.

"மிஸ்டர் ராஜா......அடிக்கடி இந்தப் பக்கம் வந்து கொண்டிருங்கள். இதை உங்கள் வீடு மாதிரி நினைத்துக் கொள்ளுங்கள்!" என்றார் அப்பா!

"சரிதான் நீங்கள் சொன்னது போதுமென்று அப்படியே நினைத்துக் கொண்டு விடுவான் ஜாக்கிரதை!" என்றார் வடிவேலு கிண்டலாக.

"சும்மா இருடா!" என்றார் ராஜா.

அவர் பேசுவதுகூட எனக்கு அழகாகத் தெரிந்தது.

"பயலுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை ... ... கேட்பதற்கோ யாருமில்லை...சாந்தாவுக்கு ஏற்ற மாப்பிள்ளை தான்!" என்றார் வடிவேலு சும்மா இருக்காமல்...

"அதற்கென்ன செய்து விட்டால் போச்சு......" என்றார் அப்பா சிரித்துக் கொண்டே.

அதற்குமேல் நான் அங்கே நிற்கவில்லை. என் உள்ளம் மகிழ்ச்சியினால் துள்ளி விளையாடியது. உள்ளே ஓடினேன்.



# 5

பள்ளிக் கூடத்திற்குப் போகும் வழியில் தினமும் ஆயிரம்வாலிபர்களைச் சந்திக்கிறேன். பெண்களின் கவனத்தைக் கவர வேண்டும் என்று அவ் வாலிபர்கள் தான் எவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ளுகிறார்கள். என் உள்ளத்தில் தன்னை யறியாத சந்தோஷம்—தடுமாற்றம் ஏற்பட்டதெல்லாம் ராஜாவைக் கண்டபோது தான்......அக்கா வடிவேலுவின் மீது கொண்ட அன்பைப் போன்றதா இது? எங்கோ யிருந்து வந்திருக்கும் ஒருவர் முகம், என் மன அரங்கில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தால் என் உள்ளத்தில் ஒரு விதமான மாறுதல் ஏற்பட்டு விட்டது என்று தானே அர்த்தம்?

அந்த மாறுதல்தான் காதலா?

அதுதான் ஆரம்பம்! அக்காவின வார்த்தைகளில் சொல்லப் போனல் வாழ்க்கையில் திருப்பம்!

விருந்து அமர்க்களம் ஒரு மாதிரியாக முடிந்தது. சாவித்திரி பட்டணத்துப் பெண் கூச்சமில்லாமல் அடிக்கடி ஆண்கள் மத்தியில் போய் உட்கார்ந்து பேசினள்—

"என்னடி இது?" என்று நான் ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தேன்.

"சும்மா இருடி பட்டிக்காடு" என்று சொல்லி விட்டாள்.

"என்ன சாந்தா ஓடி ஒளிகிருய்...நாங்களெல்லாம் மனுஷர்கள் தானே?" என்று கிண்டலாகக் கேட்டார் வடிவேலு.

நான் அதற்குத் தகுந்தவாறு பதில் சொல்ல வேண்டாமா?

"அப்படித்தான் தெரிகிறது!" என்றேன்.

"பின் ஏன் இந்தக் கண்ணுமூச்சு விளையாட்டு......நாலு பேரோடு கலகலப்பாகப் பழகத் தெரிந்து கொள்!" என்ருர்.

எனக்கு ராஜாவோடு பேச வேண்டும் என்ற ஆசை நிறைய இருந்தது. பேசாவிட்டால் பழக்கம் ஏற்படுமா?

உயரமாக வளர்ந்திருந்த அவரது உடலில் வாலிபத்தின் மிடுக்கு இடம் பெற்றிருந்தது. சுருள் சுருளாகத் தலையில் படிந்திருந்த கூந்தல் பார்ப்பதற்கே நன்ருக இருந்தது. கூர்மையான இரண்டு கண்கள், மற்றவர்களின் உள்ளத்தை ஊடுருவிப் பார்க்கும் சக்தியைப் பெற்றிருந்தன—கவர்ச்சியான முகம் என்னை ஆகர்ஷித்ததில் ஆச்சரியமொன்றும் இல்லை.

ஞாயிற்றுக் கிழமை சாயங்காலம் வீட்டில் பெரியவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் சினிமாவுக்குப் புறப்பட்டோம். ராஜாவும் கூடத்தான் இருந்தார்.

சாவித்திரி ராஜாவையும், வடிவேலுவையும் மாறி மாறிக் கிண்டல் செய்த வண்ணம் இருந்தாள்.

ராஜா அவளிடத்தில் சிரித்த மாதிரி பேசிக் கொண்டிருந்தது எனக்கென்னவோ கஷ்டமாகயிருந்தது.

என்னிடமும் ஏதோ பேச்சுக் கொடுத்தார்கள்!

நானும் பேசப் பழகிக் கொண்டேன்.

சினிமா விட்டு வீட்டுக்கு வரும் போது நான் ராஜாவுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

என் பள்ளித் தமிழ் வாத்திய ராக வேலை பார்க்கும் உபாத்தி யாயினி இவருக்குத் தூரத்து உறவாம்.

அதைப் பற்றித்தான் பேச்சு ஆரம்பமாகியது. பிறகு நான் கலந்து கொள்ளாமல் இருக்க முடியுமா?

நான் அதில் இன்பம் கண் டேன்.

நான் என்னமோ பலவாறாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவர் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாரோ?

போதாததற்கு எனக்குப் பக் கத்தில் இன்னொரு அழகியையும் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

அவள் பேச்சும்...நடத்தையும் எல்லோரையும் கவரும் விதத் தில் அல்லவா இருக்கிறது!

என் மனதில் எண்ணங்களை மோத விடவில்லை.

முன் பின் தெரியாத ஒருவர் திடீரென வந்தால் அவரைப் பற்றி நான் ஏன் இவ்வளவு அக் கறை எடுத்துக் கொண்டு, மனத் தைப் போட்டு அலட்டிக்கொள்ள வேண்டும்?

என் புதிய மாறுதல் அக்கா வுக்கு ஆச்சரியம் விளைவித்திருக்க வேண்டும்!

"ஏண்டி, ராஜா என்ன சொல் கிறார்? உனக்குச் சம்மதமென் றால் கல்யாணத்திற்கு நாள் பார்க் கச் சொல்கிறேன்" என்றாள்.

"சும்மா இரு...இன்னும் நான் அவ்வளவு தூரத்துக்கு முன் னேற வில்லை" என்று அவளை அடக்கிவிட்டேன்.

திங்கட்கிழமை காலை......

வந்தவர்கள் புறப்பட்டார்கள். நாங்கள் வழியனுப்பக் காத்திருந் தோம்!

"பட்டணத்துக்குப் போயிட்டா மட்டும் என்ன? அடிக்கடி லெட் டர் போட்டுக் கொண்டிருங்கள்!" என்றார் அப்பா, அக்காவையும் அத்தானையும் பார்த்து.

"ஆஹா! அவசியம்" என்று தலையாட்டி விட்டார் அத்தான்.

"ஏன் ராஜா நீ கூடவா இவர் கள் கூடப் போகிறாய்?" என்றார் அப்பா மீண்டும்.

"எனக்கு இந்த டவுனில் தானே சார் உத்தியோகம். நான் எங்கே போகிறது?" என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த் தார்.

அதன் அர்த்தம் என்ன?

"பையனைக் கொஞ்சம் கவனித் துக் கொள்ளுங்கள்!" என்றார் அத்தான்......என்னமோ ராஜா சிறு குழந்தை என்ற ஞாபகத் தில்.

"அடிக்கடி இந்தப் பக்கம் வந்து போய்க் கொண்டிருங்கள்" என்றாள் சாவித்திரி.

பொதுவாகச் சொன்னாளா இல்லை ராஜாவைப் பார்த்துச் சொன்னாளா என்று என்னால் நிர்ணயிக்க முடியவில்லை.

"வருகிறேன்!" என்றார் ராஜா.

அவர்கள் புறப்பட்டுப் போய் விட்டார்கள்.

(வளரும்)




## சிதறிய பொறி

“ ‘தூரதிருஷ்ட வச’மாக, காங்கிரஸ் நிறுவனத்திற்குள் பல சுயநலவாதிகளும், ‘விரும்பத்தகாத’வர்களும் புகுந்துகொள்ள ஆரம்பித்து விட்டார்கள்; இவர்கள் செய்துவரும் காரியங்களனைத்தும், காங்கிரசின் ‘நற்பெயரை’ அதிகப்படுத்துவதற்குப் பதிலாக மேலும் மேலும் இழுக்கையே தேடித் தருவனவாக இருக்கின்றன. அவர்களனைவரும் சுயநலத்துடன்தான் காங்கிரசில் நுழைந்திருக்கின்றனரே தவிர, நாட்டின் நலனைக் கருதி வரவில்லை; இத்தகையவர்களுக்குக் காங்கிரசில் இடமில்லை—இந்தப் பிரச்சினையில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்; எனவே, இம்மாதிரியான ‘பேர் வழி’களை உடனடியாகக் காங்கிரசிலிருந்து நீக்கிவிட வேண்டும்.”

“காங்கிரஸ் நிறுவனம் நாட்டு மக்களுக்கு உண்மையிலேயே பணியாற்ற வேண்டுமானால் ‘நல்லவர்’கள் அதில் இருந்தால்தான் முடியும்; நாம் ஆள் சேர்ப்பது முக்கியமானதல்ல; எம்மாதிரியானவர்களைச் சேர்த்துக் கொள்கிறோம் என்பதுதான் முக்கியமான பிரச்சினையாகும்.”

“சுதந்திரப் போராட்ட காலத்தில், பிரிட்டன் வீசிய துப்பாக்கிக் குண்டுகளை நாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருந்தோம்; ஆனால் இன்று, நமது நிறுவனத்திற்குள்ளேயே இருக்கிற அபாயத்தைச் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.”

“சுய விளம்பரத்திற்காகவே காங்கிரசில் சேர்ந்துள்ள பலரால் காங்கிரஸ் நிறுவனத்தின் ஐக்கியத்திற்கும் ஒற்றுமைக்கும் பெரிய அபாயம் விளையும்; எனவே, இவர்களை உடனடியாக அகற்றி விடவேண்டும்.”

—இந்திய **முதலமைச்சர் பண்டிதர் நேரு** அகில இந்திய காங்கிரஸ் குழு மாதர் இலாகா ஆர்கனைசர்களுக்கு அறிவுரை கூறுகையில் இக்கருத்தை வெளியிட்டார்.

# கேளுங்கள் கொடுக்கப்படும்

பழந. வே. புதியப்பன்,
ஏழூர்.

கே: மாற்றம் பெற்றுக்கொண்டு வந்த மனித இனம், இன்னமும் மாறிக் கொண்டுதான் வருமா?

ப: குரங்கிலிருந்து மனிதன் வந்தான—இது வரைக்கும் டார்வின் சொல்லிவிட்டார். எதிர்கால மனிதன் .........

*        *

ஆர். இராமசாமி,
மைசூர்.

கே: திருமண மில்லாமல் மனிதன் வாழ முடியாதா?

ப: முடியும். அதற்குப் பெயர் வாழ்க்கை அலல.

கே: பணமில்லை எனில் மனிதன் உலகில் வாழ முடியாதா?

ப: தானே வளர்த்த அப் "பூதத்திற்கு" மனிதன் அடிமையாக இருக்கும் வரையில் முடியாது தான.

*        *

துரை முருகேசன்,
காரைமடை.

கே: ஆண்டவன் ஆகாசமதில் தூங்கக் காரணம் என்ன?

ப: அவர் அங்கேயா தூங்குகிறார்!?

*        *

அ. இராசப்பன்,
காட்டு மன்னார்குடி.

கே: முதன் முதலில் சுதந்திரம் பெற்ற நாடு எது? எப்போது? அந்த விடுதலை வீரன் யார்? சுதந்திரம் என்ற சொல் எப்போது பிறந்தது?

ப: "மண்ணை வளைத்த அண்ணாத்தை" மாரி மிருந்து சுதந்திரம் பெற்ற நாடு எதுவுமே இல்லை. அடிமைத்தனம பெற்றடுத்த பிள்ளைதான், விடுதலைக் குழவி, எனுஞ் சொல்.

*        *

மு. செல்வராசன்,
பெங்களூர்,

கே: ஆஸ்திகம் என்றால் என்ன? நாஸ்திகம் என்றால் என்ன?

ப: முன்னது நம்பிக்கை; பின்னது சந்தேகம்.

*        *

க. வே. சு. அண்ணாதம்பி,
கல்லாவி.

கே: கும்பமேளாவைப் பற்றிய தங்கள் கருத்தென்ன?

ப: படித்தவனும், பாமரனும் கூடும் விழா.

*        *

கே. சி. முருகேசன்,
நந்தி துருக்கம்.

கே: அன்பு எத்தனை வகைப்படும்?

ப: ஆசையும் பாசமும் பெருகப் பெருக, அதற்கேற்றாற் போல எண்ணுதற்கரிய வகையாக, அணுவைப்போல் உடைவதல்லவா, அன்பு!

கே: பெண் என்பவள் எப்படி இருக்க வேண்டும்?

# இலங்கை ஏஜண்டு

இலங்கைவாழ் தமிழர்கள் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதி நம் 'கலை மன்றம்' பத்திரிகையைப் பெற்றுக் கொள்வார்களாக.

**கலைமகள் கம்பெனி**
124, செட்டியார் தெரு
**கொழும்பு—11.**


ப: கண் என்ற காமிராவுக்குள் புகுந்து கருத்து என்ற பிலிம் சுருளில் பதிந்து விடுபவளாக இருக்க வேண்டும்.

*  *

ஏ. சுப்ரமணியா,
மைசூர்.

**கே: உங்களுக்குப் பிடித்த கதைப் புத்த கங்கள் எவை?**

ப: மனிதர்களைப் பற்றி எழுதப் பட்ட கதைப் புத்தகங்கள்.

*  *

பி. கருத்தான்,
புதுப்பேட்டை.

**கே: மனிதன் விரும்புவதும், வெறுப்பதும் எதை?**

ப: பிறப்பையும், இறப்பையும்.

**கே: மனிதன் ஏன் பிறக்க வேண்டும்?**

ப: புரிபடாத இயற்கையின் உள்ளே புகுந்து உண்மையைத் தேட.

வி. சிவசாமி,
உடுமலைப்பேட்டை.

**கே: "கேளுங்கள் — கொடுக்கப்படும்"— என்றிருக்கிறதே, எதைக் கேட்கலாம்? எதைக் கொடுப்பீர்கள்?**

ப: இந்த எண்ணச் சுரங்கத்திலே, எதை வேண்டுமானாலும் கேட் டுப் பெற்றுக் கொள்ளலாம்.

*  *

அ. ஜனர்த்தனன்,
விருதுநகர்.

**கே: பாரதியாரின் வாழ்வு எதைக் காட்டு கிறது?**

ப: பேனா என்ற தீப்பந்தத்தை வீரன் ஒருவன்தான் இறுதி மூச்சுவரை உயர்த்திப் பிடிக்க முடியும் என்பதை.

*  *

சி. இராம கிருஷ்ணன்,
மதுரை.

**கே: வயிறு?**

ப: மனித நாகரிகம் பிறந்த இட மே அதுதானே?

**கே: காது?**

ப: ஒலிகளின் நிரந்தர அடிமை.

**கே வாய்?**

ப: பெரிய—அகண்ட குப்பைக் குழி.

**கே: மூளை?**

ப: கண்ணுக்குத் தெரியாத ஒன் றின் காதலி—அடிமை.

**கே: பேச்சு?**

ப: சில வேளைகளில் இசை; பல வேளைகளில் ஓசை.


# தேவை

கீழ்க்கண்ட இடங்களுக்கு, "கலைமன்றம்" "கரும்பு" "கலை அரங்கம்" ஆகிய பத்திரிகை களை விற்பனை செய்ய டிபாஸிட் கட்டக் கூடிய ஏஜண்டு தேவை:

நெல்லிக்குப்பம்
ஓரத்த நாடு
பொம்பலூர்
புளியங்குடி
ஸ்ரீமுஷ்னம்
ராசிபுரம்
ரெட்ஹில்ஸ்
செங்கற் பட்டு
சின்னச்சேலம்

விபரங்கட்கு:
**மானேஜர்**
**கலைமன்றம், சென்னை—1.**

# இல்லறத்திலே..

மூலம்:
சலாம் மச்லிஷெஹரி

தமிழாக்கம்:
முக்தார்



பர்சீஷ் எனது மதிப்பிற்குரிய நண்பன். அவனது சகவாசியான ஆஷாவும் எனக்கு அறிமுகமானவள். விவாகத்திற்கு முன்பு பர்சீஷ் "நான் தேவியர்களைப் போன்ற மனைவிகளை வரவேற்கவில்லை. நவீன நாகரிகமுள்ள மங்கையைத்தான் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளப் போகிறேன். அவள் மனைவியாக இல்லாமல் தோழியாக இருக்கவேண்டும்", என்று அடிக்கடி கூறுவான். இன்னும் எனக்கு அது மறக்கவில்லை.

பர்சீஷின் ஆசை நிறைவேறியது. நவீன நாகரிகம் பெற்ற மனைவியே அவனுக்குக் கிடைத்துவிட்டாள். விவாகமான பிறகு அவர்கள் தங்கள் உணர்ச்சிகளில் மூழ்கி, உலகத்தையே மறந்து, இன்பமாக நாட்களைக் கழித்துத் தமது மலர்ச்சி பெற்ற வாழ்விலே களித்தார்கள். ஆஷாவும் ஆனந்த கீதம் இசைத்தாள்.

காலச் சக்கரம் சுழல, நாட்கள் மாதங்களாகவும், மாதங்கள் வருடங்களாகவும் மாறின. அவர்களது நிலைமை சற்று மாறுபாடு அடைய, அமைதியின்மையும், ஆயாசமும், சச்சரவுகளும் மேலோங்கின. ஒரு புயல்வீச ஆரம்பித்தது. ஆஷா அப்புயலின் கதாநாயகியாகத் திகழ்ந்தாள்.

அன்று வெகு நேரம்வரை பர்சீஷுக்கு ஆத்திரமும், எரிச்சலும் பொங்கிக் கொண்டிருந்தன. எங்கேயோ சுற்றி அலைந்துவிட்டு ஆஷா அப்போதுதான் வீடு திரும்பினாள்—

"வெகுநேரம் கழித்து வந்தாயே."

"ஆம், நேரம் அதிகமாகி விட்டது."

"தோழியரைக் காணச் சென்றாய் போலும்."

"ஆம்! மோஹினியைச் சந்திக்கச் சென்றேன்."

"சந்திப்புகள் கவர்ச்சி மிகுந்தவை."

"உமது அபிப்பிராயம் பிழையற்றதாக இருக்கக் கூடும்."

"இன்று சஞ்சலமடைந்தவளாகக் காணப்படுகிறாயே."

"இங்ஙனமே பேசிக் கொண்டிருப்பீர்கள் போலும். ஆடைகளையும் மாற்ற அனுமதிக்காமல்—"

"மன்னிக்கவும், தவறு செய்துவிட்டேன். சிரமம் என்று கருதவில்லையென்றால் கடிகாரம் பார். 11 மணி ஆகிவிட்டது"

"ஓ! என்னைக் கட்டுப்படுத்தி அடிமையாக்க விரும்புகிறீர்கள் போலும்."

"இல்லை! நான் மனைவியை அடிமையாக்க உரிமையற்றவன்."

"உண்மை. அவனுக்கு உரிமை இல்லை."

"சரி. நீ ஆடைகள் மாற்றிக் கொள்."

"அவசியமற்ற பேச்சுக்களுக்கு என்னிடம் நேரமில்லை."

இது ஒருநாள் பதினொரு மணிக்கு நடந்த உரையாடல். இங்ஙனம்தான் புயல்வீசத் தொடங்கிற்று. ஆஷா ஆடைகள் மாற்ற அறையினுள் சென்றதும், பர்சீஷ் சமையல்காரனைப் கூப்பிட்டு, "எஜமானி வந்துவிட்டாள். சாப்பாடு கொண்டுவா" என உத்தரவிட்டான். சாப்பாடு கொண்டுவரப் பட்டது. பர்சீஷுக்குப் பசி அதிகமாக இருந்தது. ஒவ்வொரு விநாடி கழிவதும் கடினமாகத் தென்பட்டது. சற்றுநேரம் தாமதித்த அவன், "இன்னும் வரவில்லை. ஆடைகள் மாற்றிக்கொண்டே இருந்து விடுவாய் போலும்" என்றான்.

ஆஷா உள்ளிருந்தே, "நீங்கள் சாப்பிடுங்கள். எனக்குப் பசியில்லை" என பதிலளித்தாள்.

"அப்படியென்றால் நானும் சாப்பிடப் போவதில்லை."

"பிடிவாதம் செய்கிறீர்கள் இதோ நானும் வருகிறேன்" என்று கூறியவாறு, ஆஷாவும் வந்துவிட்டாள்.

பர்சீஷ் இப்போது யாது பேசுவது என யோசனை செய்தான். ஆஷாவும் அவன் மொழியப் போவதை மௌனமாக எதிர் நோக்கினாள். பர்சீஷ் மோஹினியைப்பற்றி பேச்சுத்தொடர்ந்தான். சம்பாஷணை வளர்ந்து நீண்டது. இதுவரை உரையாடல்கள் சங்கேதங்களில்தான் நடந்தன. நவீன நாகரிகமும், கல்வியறிவும் பெற்றோரின் உரையாடல் தெளிவான வாக்கியங்களில் நடைபெற்றால் அது தனது எழிலை இழந்துவிடும். ஆயினும், சங்கேதங்களும் பலவித சந்தேகங்களை எழுப்பவும் செய்கின்றன. தனது வாழ்விலே ஒரு பயங்கரமான புயல் உண்டாகும் என்பதை உணர்ந்தும், ஒரு கணவன் தனது மனைவியிடம் சம்பாஷிக்கும் விதம் காணுங்கள்:

"நீ வாழ்க்கையின் கடமைகளைப் பற்றிச் சிந்தித்து உணரவில்லை—உணர முயற்சிக்கவில்லை என நினைக்கிறேன்."

"வாழ்வைப் பற்றிச் சிந்தித்துக் கவலையுறும் வழக்கம் மனிதனை வருந்தத்தக்க நிலையில் வேதாந்தி பாக்கிவிடுகிறது என்பதே எனது அபிப்பிராயம்."

---

**ஊடல்தான் இல்லறவாழ்வுக்கு உயிர் சத்து என்பது வள்ளுவனரின் துணிபு**

**அந்த ஊடல் இந்த இல்லறத்திலே கணவன்—மனைவிக்குமிடையே பெரும் புயலைக் கிளப்பி விடுகிறது.**

**பெண்மையின் பிணக்கு உச்ச நிலை அடைகிறது. அதே சமயம் அவளுடைய 'கனத்த வயிறு' அவளைக் காட்டிக் கொடுத்து விடுகிறதே! பின்னர்? அங்கே இன்பம்! இன்பம்!**

---

இந்த வினவும் விடையும் பகர்ந்தவர்கள், எதிரிலிருப்பவன், தங்களை மேதையாக நினைக்கவேண்டும் என்ற கருத்துக் கொண்டவர்களல்ல. நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. உண்மையை விவரித்து, காரணங்களை ஆராய்ந்து நிவர்த்தி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

பர்சீஷ், இங்ஙனம் புயல்வீச ஆரம்பித்தது என விவரித்தான்—அதற்குப்பிறகு ஒவ்வொரு சந்திப்பிலும் வெறுப்புணர்ச்சி தோன்றியது. ஒவ்வொருநாளும்; ஒவ்வொரு இரவும் புயல் மிகுந்ததாக இருந்தது. ஆயினும் இருவரது படகுகளும் அலைகள்மீது மிதந்து கொண்டிருந்தன. ஒரு படகும் மூழ்கவில்லை; கரையை அடையவுமில்லை.

2

ஆஷா, பர்சீஷ் இவர்கள் மூலமாக நான் மோஹினியின் அறிமுகம் பெற்றேன். மோஹினி சிறந்த கல்வியறிவு உள்ளவளாக மட்டுமன்றி, முற்போக்குக் கொள்கையுடையவளாகவும், ஒரு செல்வந்தரின் மனைவியாகவும் விளங்கினள்.

ஆனல் ஆஷாவுக்கும் மோஹினிக்கும் இடையில் ஏதேனும் வேற்றுமை இருந்தால் அது அவர்களுடைய கொள்கை விஷயத்தில்தான் எனக்கூறலாம். அவள் தனது வாழ்க்கையின் அலுவல்களையும், கடமைகளையும் நன்கு உணர்ந்தவள். பணிவுடன் நடந்தாள். அடக்கமும், நல்லொழுக்கமும் அவளிடம் காணப்பட்டன.

அதே சமயத்தில் பர்சீஷ்வும், ஆஷாவும் [illegible]களில் உரையாடுவதைவிட்டு [illegible] திக்க முற்பட்டனர். அதாவது இருவரும் ஒருவரையொருவர் பிரிந்து விடுவது எனத் தீர்மானம் செய்தனர்.

நான் மோஹினியைப்பற்றிக் கூறினேன் அன்றே!—ஏன்? மோஹினியைப்பற்றி எதற்கு?—மோஹினி ஒருநாள் தேநீர் அருந்தும்போது ஆஷாவைத் தான் சந்தித்த செய்தியைக் கூறினள்—

"ஒன்றும் மறைக்காதே, ஆஷா! நீ இரவு முழுவதும் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தாயா?—அல்லது இன்று வெகு நேரம்வரை அழுதாயா? கண்கள் ஏன் கோவைப் பழம்போல் சிவந்து இருக்கின்றன?"

"இப்போது எனது நிலை கண்ணீர் வடிக்கவும் முடியாதவாறு இருக்கிறது, மோஹினி!"

"ஏன், உண்மையில் நடந்தது என்ன?"

"என்ன கூறவேண்டி இருக்கிறது? பேச்சுத்தான் முடிவுபெற்று விட்டதே!"

"தீர்மானமா?—ஓ! நான் புரிந்து கொண்டேன். பர்சூ அண்ணனிடம் நீ சண்டையிட்டிருப்பாய்."

"நான் ஒன்றும் சண்டை போடவில்லை. அவரேதான் எப்போதும் சினங்கொண்டு குதிக்கிறர்."

"ஆனல் அவர் கூறுவதில் ஏதேனும் உண்மை இருந்தால் அதைப் பற்றி நீ சிந்திக்க வேண்டும்."

"எனக்கேன் அந்த அக்கரை? நான் அவரது மனைவி. வேலைக்காரி யல்லவே."

"நீ அவரது வாழ்க்கைத் துணைவி. அவரது வாழ்வில் மலர்ச்சி, சிரிப்பு, இன்பம் ஆகியவைகள் [illegible] உனது ஆக்கமும் ஒத்துழைப்பும் தேவை."

## அது அங்கே!

### புதையுண்ட நகரம்

ஏழாம் நூற்றுண்டில் கான்ஸ் டாண்டிநோபிளைச் சேர்ந்த, 1000 மக்கள் வாழ்ந்து, மண்மேவிய நகரொன்று பேபோஷ் (சைப்ரஸ்) எனும் நகரின் வட கடற்கரைக்குப் பதினைந்து மைல் களுக்கப்பால் யாருமற்றுக் கிடந்த இடத் தில் தோண்டிக் கண்டு பிடிக்கப் பட்டது.

சைப்ரஸிலிருந்து தென் ஆப்பிரிக்கா விற்குக் குடிபெயர்ந்த ஒருவர் புதை பொருள் இலாகாவுக்குப் பதினைந்து பவுன் களை இரண்டாண்டு களுக்கு முன் அனுப் பியதோடு, பெயியா கிராமத்திற் கருகி லுள்ள பகுதி தோண்டி ஆராய்ச்சி செய் யப்பட வேண்டிய இடம் என்றும் குறிப் பிட்டிருந்தார். அப்புறம் அதற்கான நிதி திரட்டப்பட்டுச் சென்ற கிழமை தான் முழு வதும் தோண்டி முடிந்தது.

மூன்று பெரிய ஆலயங்களும், கிரேக்க எழுத்துக்கள் தாங்கிய பலிபீடங்களும் கண்டு பிடிக்கப் பட்டன. மாலுமிகளின் நினைவாக அவை எழுப்பப்பட்டவை என்று கிரேக்க மொழியில் எழுதப் பட்டுள்ளன.

நீண்ட நீராவிக் குளிப்பறைகளும், வெப் பக் குளிப்பறைகளும், தன்னந்தனி யாக எதையோ ஒரு சிறப்பைக் காட்டிக் கொண்டு ஆலயங்களின் அருகே நிற்கும் ஒரு கல்லறையும், வேறு கண்டு பிடிக் கப்பட்டுள்ளன. அந்தக் கல்லறையில் காணப்படும் நகைகளும், காதணிகளும் தேவலாயத்திற்கு உதவிய ஒரு வள்ளல் தன்மையுடைய பெண்ணினுடையதாய் இருக்கலாம் என்று ஊகிக்கப் படுகிறது.

"மன்னிக்க வேண்டும் மோஹினி எனக்கு உனது நற்போதனை தேவை யற்றது."

தான் விடைபெற்று வெளியேறி னதும், ஆஷா படாரென்று கதவைத் தாளிட்டுத் தன்னை அவ மதித்ததாக மோஹினி கூறினுள்.

புயல் எங்கிலேயில் இருக்கிறது என்பதை நான் எளிதில் அறிந்து கொண்டேன். ஆனல் நான் மோஹினியைப்போல் மனம் தளர்ந்துவிடவில்லை. இவ்விதப் புயல்கள் எவ்வளவு விரைவாக வீசுகின்றனவோ, அதே வேகத் துடன் தணிந்தும் விடுகின்றன என்பது எனக்குத் தெரியும். ஆயி னும் நிலைமை மிகவும் மோசமடைந் திருப்பதைக் கண்டு நானும் கல வரமடைந்தேன். ஆஷாவும், பர் சீஷும் எனக்கு நண்பர்கள். ஆஷாவின் அவமதிப்பைப் பெரிதா கக் கொள்ளாமல், அதனை மறந்து நாளையே ஆஷாவைக் கண்டிப்பா கச் சந்திக்க வேண்டும் என எடுத் துரைத்து மோஹினியிடம் வாக் குறுதியும் பெற்றுக் கொண்டேன்- மோஹினி ஆஷாவைப்பற்றி ஒரு சந்தோஷம்தரும் செய்தியை வெளியிட்டாள். எனது நம்பிக்கை யும் பலமடைந்தது. இந்தப் புயல் விரைவிலே ஒரு இனிமையான கீதமாக மாறும் என்று உறுதி கொண்டேன். ஆயினும் இருவரது வேற்றுமை மனப்பான்மை என்னை கவலை கொள்ளச் செய்தது.

3

அன்று மாலை நான் பர்சீஷைச் சந்தித்த சமயம் அவன் மிகவும் கலவரம் அடைந்திருப்பது போலத் தென்பட்டான். என்னைப் பார்த்ததும் அவன், "நண்ப! தீயது நேர்ந்துவிட்டது. இப்போது

அவள் பிறந்தகம் செல்லத் தீர்மானித்து, ஆயத்தமாகிவிட்டாள். இன்னும் சிறிதுநேரத்தில் டாக்ஸியும் வந்துவிடும்," என்ருன்.

நான் மனதிற்குள், மோஹினி ஆஷாவைப்பற்றி மொழிந்த அந்த சந்தோஷம்தரும் செய்தியைக் கூறிவிட வேண்டுமென நினைத்தேன். ஆனல் இன்னும் சற்றுப் பொறுத்து ரசிக்கவேண்டும் எனத் தீர்மானித்து, "இது மிகவும் வருந்தத்தக்கது. உம்மால் ஆஷாவைச் சமாதானப்படுத்த முடியவில்லையென்ருல் அவளைப் பிரியாவிடையேனும் கூறி அனுப்பும்" என்றேன். அதேசமயம் எனது உதடுகளில் புன்சிரிப்பும் தவழ்ந்தது. சூக்ஷ்ம அறிவும், கூர்மைப் புத்தியும் படைத்த பர்சீஷ் அதன் கருத்தை உணர விரும்பினன்.

"நீர் ஏன் புன்னகை செய்கிறீர்?" என அவனல் கேட்காமல் இருக்க முடியவில்லை. எனக்கு என் புன்சிரிப்பின்மேல் கோபம் வந்தது. எனது மடமையை நானே நொந்துகொண்டேன். எனினும் அந்த சந்தோஷம் தரும் செய்தியைக் கூறிவிடுவதே நலம் என முடிவுசெய்தேன். எனது பேச்சு முடியு முன்பே பர்சீஷ் பிள்ளைகளைப் போல குதூகலித்தவாறு ஓடினன். நானும் வேகமாக அவனைப் பின்தொடர்ந்தேன். அவன் மோஹினியின் இருப்பிடத்தை நோக்கிச் செல்வதைக்கண்டு பெரிதும் வியந்தேன்—அவன் மோஹினியிடம் அச்செய்திக்கு ஆதாரம் தேடச் சென்றிருப்பான் எனும் நினைவு பெற்றதும் வியப்புக் குறைந்தது.

கூடத்தின் கண்ணுடி வழியே உள்ளே பிரயாணத்திற்கு சாமான்கள் தயாராக இருப்பதை கண்ணுற்

# இது இங்கே!

7 - AUG 19

## தண்ணீருக்குள் நாகரிகம்

சோழர்காலத்தில் சிறப்புற்றேங்கிய காவிரிப்பூம்பட்டணம் கடலுள் மூழ்கியதாக வரலாறும், கதைகளும் சொல்கின்றன. அந்தப் பகுதிகளிலே வாழும் மக்களும், கடல் நீர் வற்றுங் காலங்களில் கோபுர விதானங்கள் தெரிவதாகவும், தரங்கம்பாடிக் கடற்கரையில் சோழநாட்டு நாணயங்கள், மூழ்கிய பட்டணத்திலிருந்து வந்து ஒதுங்குவதாகவும், கூறுகின்றனர்.

இதுபற்றிச் சின்னுட்களுக்கு முன் அரசாங்கத்திற்கு அறிவிக்கப் பட்டதாகவும், அரசாங்கம் இப்போது அந்த 'மூழ்கிய நகரத்தை'த் தோண்ட வசதியில்லை என்று கூறியதாகவும் கூறப்பட்டது.

அரசாங்கத்திற்கு வசதி எப்போது வரும்? மறைந்த நாகரிகத்தின் மாண்பு எப்போது தெரியும்?

உரோம, யவன நாகரிகங்களுக்கு முற்பட்டது—மேம்பட்டது, தமிழர் நாகரிகம் என்று ஏடு கூறுகிறது. அந்த நாகரிகம், நீரிலும், நிலத்திலும், மூழ்கி-மறைந்து கிடக்கிறது, நாதியற்ற பிணம் போல, கவனிப்பாரற்ற கைப்பிள்ளையாக, தமிழ் நாகரிகம் போய்விட்டது. "தமிழ்ச் சாதி, தள்ளப்பட்ட சாதி," என்பது, எவ்வளவு சரியாக இருக்கிறது!

"தமிழரின் நூல்களைக் கடல் கொண்டது. தமிழரின் செல்வங்களைக் கடல் கொண்டது. தமிழரின் பண்பைக் கடல் கொண்டது. தமிழரின் நாகரிகத்தை மண்ணும்கொண்டது."—இந்தப் புலம்பல் நீடிக்கத்தான் வேண்டுமா? தமிழரின் நாகரிகம் தண்ணீரை விட்டு வெளியேறவே முடியாதா?

றேன். ஆஷா டாக்ஸியின் வரவை எதிர்நோக்கியவாறு அறையில் இங்கும் அங்கும் நடைபோட்டுக்கொண்டிருந்தாள். கதவு திறந்து கிடந்தது. அவள் தனக்குள் முணுமுணுப்பதை என்னால் செவியுற முடிந்தது.

"—இப்பொழுது டாக்ஸி வருவதுதான பாக்கி. பிறகு இவருக்கு, எவ்வித மனைவியுடன் வாதாடினேம் என்பது புரிந்துவிடும். டாக்ஸி வந்ததும், ஸ்டேஷனை அடைந்து புகை வண்டியைப் பிடித்துப் பிறந்தகம் சென்றுவிடுவேன். அங்கு எனக்கு எவ்விதக் குறையுமில்லை. இவருக்குப் பணி செய்யும் அடிமைப் பெண்ணாக இருக்கவேண்டிய அவசியமில்லை. நான எனது கடமைகளை உணர்ந்துகொள்ளவில்லை என்று கூறுகிறாரே நான் இவருக்கு வேலைக்காரியா? என்னை இழிவாக நடத்த—நான் இந்த மேஜையின் மீதிருக்கும் இவரது புகைப்படத்தையும் எடுத்துக்கொள்ளமாட்டேன். தனது புருஷனின் உருவப் படத்தை மார்புடன் அணைத்துக்கொள்ளும் பழங்காலப் பெண் வர்க்கத்தைச் சேர்ந்தவளல்லவே நான். இந்த வீட்டையே விட்டுச் செல்லும்போது இந்தப் படத்தை எடுத்துச்சென்று என்ன செய்வது? ஹூம்—இந்த வேலைக்காரனும் திரும்பிவரவில்லை. சுத்தச் சோம்பேறி அவன். டாக்ஸி கொண்டுவரவும் இவ்வளவு நேரம் பிடிக்குமா?—ஓ! டாக்ஸி வந்துவிட்டது. உடனடியாக சாமான்கள் ஏற்றப்படவேண்டும். நாடகம் முடிவுற்றது. திரை விழுந்தது—ஏ மோஹன்! வெளியே என்ன செய்கிறாய்? உடனே சாமான்களை எடுத்துவை. இப்படி நீ வழிக்கு வரமாட்டாய். நானே பார்க்கிறேன் ஏது—?!!"

நான் ஒரு அடர்ந்த செடிக்குப் பின்னால் ஒளிந்துகொண்டேன். மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கும் பர்சீஷோ, கோபாவேசத்தில் வெளியேவந்த ஆஷாவோ என்னைப் பார்க்கவில்லை என்றறிந்து பெரிதும் ரசித்தேன். அப்பொழுது நடந்த சம்பாஷணை கரிசனமாக இருந்தது—

"ஓ நீங்கள் வந்துவிட்டீர்களா?"

"ஏன், நான் சரியாக இதே நேரத்திற்கு ஆபிஸிலிருந்து வருவது வழக்கமாயிற்றே."

"ஆனால் இன்று இச்சமயத்தில் உங்களது வரவை ஒரு எதிர்பாராத ஆபத்தாக நான் கருதுகிறேன்."

"இன்னும் உனது கோபம் தணியவில்லையா? புயல் அமைதி பெறவில்லையா?"

"நான் ஒன்றும் கவி இல்லை. கல்பனாக்களின்—பாணாக்களின் புயல்களைச் சிருஷ்டிக்க."

"நீ அவர்களைப்பற்றியேனும் பேசுகிறாயே."

"நான் உங்களோடு உரையாட விரும்பவில்லை."

"சரி—நீ பேசிக்கொண்டிருக்கிறாய். என்னுடன் இல்லை என்பதை ஒப்புக்கொண்டாலும், இந்தச் சுவர்களுடன் உரையாடுகிறாய் என்று நம்ப வேண்டியிருக்கிறது."

"உங்களுக்குப் பேசவும் ஒழுக்கம் தெரியவில்லை."

"நீ மொழிந்தது உண்மை. எனக்கு ஒழுக்கம் கற்றுக்கொடுத்தவளும் நீயன்றோ!"

"......சுவரிலிருக்கும் அந்தப் பெரிய கண்ணாடியில்பார் உனக்குச் சினம் பொங்கி உனது அழகு எப்



தகைய மெருகு பெறுகிறது என்பதை உணர்வாய்."

"நான் பிறந்தகம் செல்கிறேன் என்பதை நீங்கள் அறியீர் போலும்."

"சாமான்களைக் கண்டு அறிந்துகொண்டேன். ஆனால் ஒரு பொருளை மறந்துவிட்டாய்."

"எந்தப் பொருளை?"

"அதோ மேஜையின் மீதிருக்கும் எனது சோகம் நிறைந்த படத்தை............"

"ஓஹோ! இன்றைய பேச்சில் அமைதியும், அன்பும் காணப்படுகிறதே!"

"ஆம், தீயினை நீரால் தான் அணைக்க முடியும்."

"நான் எனது தீர்ப்பை அறிவித்துவிட்டேன்."

"உனது முடிவை நீ மாற்றிக் கொள்ள வேண்டும் என நான் வற்புறுத்தவில்லை."

"ஓ! நான் புரிந்துகொண்டேன்" என்று கோபம் பொங்கப் பதிலளித்துவிட்டு சாமான்களைத் தானே எடுக்க ஆரம்பித்தாள். [illegible] சாமான்களைத் தாம்எடுக்கக்கூடாது

என்பதையும், மனக்கடுப்புத் தரும் ஆத்திரத்திலே மறந்துவிட்டாள். மூச்சு மேலேற ஆரம்பித்தது. கண்கள் இருண்டன. தலை சுன்னறது. கால்கள் சக்தியை இழந்தன, பர்சீஷ் இதனைக் கண்டு ரசித்தான்' ஆஷா ஹோல்டாலை எடுத்ததும் தடுமாறித் தரையில் சாய்ந்தாள். "ஹா" என்று அவள் அலறியதும் பர்சீஷ் சமாளிக்க முடியாமல் அவளை எடுத்துத் தாங்கிக் கொண்டான்.

"விளையாட்டில் தன்னை ஏன் பலவீனப்படுத்திக் கொள்கிறாய்?"

"நான் எந்த நிலையில் இருக்கிறேன் என்பது உங்களுக்கு என்ன தெரியும்?"

"எனது பிடிவாதப் பொம்மையே! மோஹினியிடம் எல்லாம் தெரிந்துகொண்டேன்......நீ ஒரு பாப்பாவுக்கு............"

"மோஹினி--கழுதை--ஹூம்!"

புயல் வீசுவது நின்றுவிட்டது. அமைதி நிலவிற்று. நான் சிரித்தவாறு அறையினுள் நுழைந்தேன். என்னைக் கண்டதும் ஆஷா, "இது நீரும், மோஹினியும் செய்த சூது-தந்திரம்," என்று சீறினாள்.

"நான் இல்லறத்திலே புயலுக்குப் பின்னால், அலைகளின் இனிமையான கீதங்களைச் செவியுற வந்துளேன்" என்று கூறினேன் நான்—பர்சீஷ் புன்சிரிப்புடன் அறையைவிட்டு வெளியே சென்றான்.

## ஐன்ஸ்டீன் கொள்கை இலங்கையில் பரிசீலனை செய்யப்படும்

கனம் மிகுந்த ஒரு பொருளுக்குச் சமீபமாகச் செல்லும் ஒளிக்கதிர் சிறிது திசை மாறும் என்று விஞ்ஞானி ஐன்ஸ்டீன் குறிப்பிட்டுள்ள கருத்து வருகிற ஜூன் மாதம் 20 தேதி இலங்கையில் ஆராய்ச்சி செய்யப்படும். அன்று பூர்ண சூரிய கிரகணமாகும். கடந்த 1200 ஆண்டுகளில் இதனைப் போன்ற நீண்டகால சூரிய கிரகணம் ஏற்பட்டதில்லை.

அமெரிக்காவையும் மற்ற ஐந்து நாடுகளையும் சேர்ந்த வானசாஸ்திர நிபுணர்கள் இவ் ஆராய்ச்சியில் கலந்து கொள்வர்.

இந்திய மாகா சமுத்திரத்தில் தொடங்கி இலங்கை, தாய்லாந்து, பிலிப்பீன்ஸில் சில பகுதிகள், ஸாலமன் தீவுகளுக்கு வடக்காகவுள்ள பசிபிக் சமுத்திரம் ஆகியபிரதேசங்களில் தான் இந்தச் சூரிய கிரகணத்தைக் காண முடியும்.

ஐன்ஸ்டீன் கூறியுள்ள கொள்கை பல தடவைகளில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது எனினும், முழு கிரகணம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தான் ஒளிக்கதிரின் திசை மாற்றத்தை நன்கு உணர முடியுமென்று ஹார்வார்டு பல்கலைக் கழக வானிலை ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த பேராசிரியர் வில்லியம் பி. ஸின்டன் குறிப்பிட்டுள்ளார்.

# கலைமன்றம்
## ☆☆ பார்லிமெண்ட் ☆☆

பகுத்தறிவு,
சலகண்டபுரம்,
20-5-55.

அன்பு மிக்கீர்,
வணக்கம்.

"கலைமன்றம்" இதழிலே சில மாறுதல்களைக் கண்டேன்.

தலையங்கத்தில் புது நடை பளிச்சிட்டது.

"கலைமன்றம்" புதிய பாதையில் பொதுப் பணியைத் தொடர்ந்து ஆற்றுவது கண்டு மகிழ்ச்சி. வாழ்த்துக்கள்.

அன்பு மறவாத,
ப. கண்ணன்.

[நீண்ட நாள் பத்திரிகை உலகிலும், இலக்கிய உலகிலும் தொடர்புடைய தங்கள் போன்றாரின் ஆசிக்கு எங்கள் மனமார்ந்த நன்றி—ஆ—ர்.]

*     *     *

அகிலன்,
5, பட்டாபிராமபிள்ளை தெரு,
திருச்சி
14-5-55.

அன்புடையீர்,

வணக்கம். கலைமன்றம் தமிழகத்துக்கு மற்றுமொரு இலக்கிய இதழாக இருப்பதை வரவேற்கிறேன்.

கலைமகளில் தொடர் நாவல் எழுதத் தொடங்கியுள்ளேன். அதை எழுதவே ஓய்வு முழுவதும் செலவாகிறது. ஆகவே சில நாட்களுக்காவது தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். பின்பு கண்டிப்பாகக் கலைமன்றத்தில் எழுதுகிறேன். தங்கள் முயற்சி வெல்க.

தங்களன்புள்ள,
அகிலன்.

[சில நாட்கள் வாசகர்களும் பொறுத்திருங்கள். 'அகிலன்' கலைமன்றம் வாயிலாக நமக்கெல்லாம் நல்லதொரு இலக்கிய விருந்து தரப்போகிறார்.—ஆ—ர்.]

*     *     *

என். சுப்பிரமணியம்,
35, மார்செக்பேட்டை,
திருச்சி.

அன்புள்ள நண்பருக்கு,

கலைமன்றம் மாறுதல் பெறுவது அறிந்து மகிழ்ந்தேன். 'பொன்னி'யில் நான் ஒரு தொடர் கதை எழுதினேன். 'நமக்குள்ளே' என்ற பகுதியைத் தொடர்ந்து எழுதினேன். கலைமன்றம் 'நமக்குள்ளே' தொடர் பிரசுரம் செய்ய எண்ணினால் புதிய விஷயங்கள் எழுதத் திட்டமிட்டிருக்கிறேன்.

தங்கள் அன்பன்,
சுகி.

[தங்கள் ஒத்துழைப்பை எப்போதும் நாடுகிறோம். எமது எண்ணத்திற்கு இசைவு தந்தமைக்காகத் தங்கட்கு நன்றியோடியைந்த வணக்கம்—ஆ—ர்.]



# மவராசன்

ப. சோமசுந்தரம்

"ஓரிடந்தனிலே நிலைநில்லாதுல கினிலே..." என்ற பாட்டு அருகேயிருந்த சினிமாத் தியேட்டரில் ஒலிபெருக்கிக் கொண்டிருந்தது. வேடிக்கை பார்த்தவாறு வந்து கொண்டிருந்த சுந்தரேசன் இந்தப் பாட்டைக் கேட்டதும் 'டக்' கென்று நின்றான். அந்தப் பாட்டு வந்த திக்கைநோக்கிய அவன் அந்த தியேட்டருக்கு முன்னால் கட்டப் பட்டிருந்த சினிமா விளம்பர "பேனரை"ப் பார்த்தான். அதில் "கணவனின் மனைவி" என்ற எழுத்துக்கள் பொறித்து ஒரு நவநாகரிக நங்கை நாட்டியம் ஆடுவதைப்போல சித்திரம் வரையப்பட்டிருந்தது. தியேட்டருக்கு முன்னால் ஏகப்பட்ட கூட்டம். அந்தக் கூட்டத்தையும், நவநாகரிக நங்கையின் நாட்டியக்காட்சியையும் கண்ட சுந்தரேசனுக்கும் அந்த சினிமாவை அவசியம் பார்க்கவேண்டும் என்று தோன்றியது. பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். "மணிபர்ஸ்" பத்திரமாகவே இருந்தது. அதில் இன்னும் பத்து ரூபாய் இருக்கும். "பரவாயில்லை டவுனுக்கு வந்ததற்கு ஒரு சினிமாவும் பார்த்தது போல இருக்கும்" என்று எண்ணினான். கூட்டத்தோடு ஒன்றாக நின்ற சுந்தரேசன் சற்று நேரத்தில் கூட்டத்துக்கு மத்தியில் நின்றுகொண்டு தடுமாறிக்கொண்டிருந்தான். மூச்சுக்கூடவிட முடியவில்லை. வெளியில் வரவும் முடியாமல் "அய்யோ" என்று வாய்விட்டே கூவிவிட்டான். பின்னுவிருந்த கூட்டம் முட்டித் தள்ளியதில் சுந்தரேசன் டிக்கட் கொடுக்குமிடத்தில் வந்து விழுந்தான் அங்குபோய்த்தான் அவனுக்கு டிக்கட் வாங்கவேண்டுமே என்ற நினைவு வந்தது. பாக்கெட்டுக்குள் கையைவிட்ட அவனுக்கு மயக்கம் வருவதுபோலவும், உலகமே சுற்றுவதுபோலவும் தெரிந்தது கூச்சல்போட வாயைத் திறந்தான் சத்தம் வெளியே வரவில்லை. கூட்டம் வேறு நெறுக்கித் தள்ளியது. போர்ப்படையில் எதிரியின் சேனைக்கு மத்தியில் சிக்கிக் கொண்டு போராடும் தனி வீரனைப் போல இருந்தது அவன் நிலை. கூட்டத்தில் உதையும், மிதியும் வாங்கிக்கொண்டு வெற்றி வீரனைப் போல வெளியே வந்து விழுந்த சுந்தரேசனின் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கைகால்கள் எல்லாம் வெடவெடவென நடுங்கின. கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே "மணிப்பர்ஸ் போய்விட்டதே" என்றான். ஆத்திரம் அவன் நெஞ்சை அடைத்தது. இனி எப்படி ஊர்போய்ச் சேர்வது?

சேலத்தில் அவனுக்குத் தெரிந்தவர்களோ, உறவினர்களோ யாருமில்லை. சேலத்தைப் பார்த்து விட்டுப் போகவந்த சுந்தரேசன் பணத்தைப் பறிகொடுத்துவிட்டு ஏங்கி நிற்கும் காட்சியைக் கண்டால் பரிதாபமாகத்தான் இருந்தது. அவன் பரிதாப நிலையைப் பார்த்து எடுத்தவன் திருப்பியா கொடுத்துவிடுவான்!

இருண்ட உலகத்துக்கு மத்தியில் திக்குதிசை தெரியாமல் நிற்பதைப்போன்ற பிரமைதட்டியது அவனுக்கு. மெதுவாக நடந்தான். எங்கே போவது? என்ன செய்வது? என்ற நிச்சயமில்லாத நிலையிலேயே நடந்துகொண்டிருந்தான்.

இரவு மணி ஒன்பது இருக்கும். ஒரு சிறிய சந்திற்குள் நுழைந்து கொண்டிருந்தான் சுந்தரேசன். பசி அவன் வயிற்றைக் கிள்ளியது. அறிமுகம் இல்லாத ஊரில் அடையாளம் தெரியாதவர்களிடம் சென்று பசிக்கிறது என்றுசொல்ல அவனுக்கு வெட்கமாக இருந்தது. செத்தாலும் சாகலாமே ஒழிய கேட்கக்கூடாது என்று அவன் மனம் அறிவுரை கூறியது.

இப்பொழுது அவன் சந்து முனையைத்தாண்டி சிறிது மைதானமான இடத்திற்கு வந்துவிட்டான். அங்கே நாலைந்து புளிய மரங்களைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. சந்துக் கடைசியில் இருந்த மின்ஸார விளக்கின் ஒளி அங்கு லேசாகப் பரவியிருந்தது. சுந்தரேசன் மேலும் நடக்கமுடியாதவனாய் ஒரு மரத்தின் கீழே சோர்வோடு உட்கார்ந்தான். அமைதியாக உட்கார்ந்து அவன் நிலையை நினைத்துப்பார்த்தான். சிந்தனை! ஓயாத சிந்தனை! அருகிலிருந்து வந்த பேச்சுக்குரல் அவன் சிந்தனையை கலைத்தது.

"என்னா செல்வி! இன்னைக்கு எவ்வளவு கெடச்சிருக்குது?"

"இருமச்சான் எண்ணிப்பார்த்து சொல்றேன் ம்...மச்சான்! இன்னைக்கு நாம்ப நரி முகத்திலேதான் முளிச்சிருக்கோம். சரியா மூணு ரூபா, அஞ்சணா கெடச்சிருக்குது"

"ம்...எனக்குத்தான் கண்ணே இல்லியே எப்படி நரி முகத்திலே முளிக்கிறது! அது சரி, பழசு நம்ப கிட்டே எவ்வளவு இருக்குது?"

"ரெண்டு ரூவா மூணு அணா"

"சரி எல்லாத்தையும் ஒட்டுக்க முடிஞ்சிவை"

"இந்தா மச்சான், இதிலே முடிஞ்சி வச்சிருக்கேன். இந்தத் துணிய பத்திரமா வச்சுக்க. நான் போயி ரவு சோறு நாலுவூடு பாத்துக்கிட்டு வரேன்"

---

❀ **பிச்சை எடுத்து உயிர் வாழும் இரு ஜீவன்கள். ஒன்று குருடு—மற்றொன்று நடமாடும் எலும்புக் கூடு.**

❀ **இவர்களிடமும் திருடி விட்டான் பணத்தை, அந்தப் பொல்லாதவன்.**

❀ **அவனையும் நல்லவன்தான் என்று நம்புகிறார்கள். அவனை 'மவராசா' என்று மனமுருக அழைக்கிறார்கள் அப் பிச்சைக்காரத் தம்பதிகள் அவன் திருடன் என்பது தெரியுமானால்.........?**

---

## கூடான பதில்

'நான் கதைகளும் தீட்டியிருக்கிறேன். கவிதைகளும் வரைந்திருக்கிறேன். ஆனால் ஏதேனும் ஒன்றை மட்டும் இனி எழுத வேண்டுமென நினைக்கிறேன்,'—தனது நறுமணம் வீசும் சுருள் மயிர்களைக் காற்றில் பறக்கவிட்டு, ஆசிரியரின் முகத்தைக் கூர்ந்து நோக்கிய வாறு மொழிந்தார் எழுத்தாளர். 'தாங்கள் நான் எதை எழுதவேண்டும், என்கிறீர்கள்?"

'கதைகளை' என மிகவும் அலட்சியத்துடன் பதிலளித்தார் தனது சஞ்சிகையின் புருப்களை வாசித்துக் கொண்டிருந்த ஆசிரியர்.

'கதைகளா?' என்று கேட்டார் ஆர்வம் பொங்கும் குரலிலே கலைஞர். 'அப்படியென்றால் நீங்கள் என் கதைகளை வாசித்திருக்கிறீர்களா?'

'இல்லை, சில கவிதைகள் தான் படிக்க நேர்ந்தது' என்றார் சுடச்சுட, ஆசிரியர்.

—நரேஷ் குமார் ஷாந்

"ஏன் செல்வி! நான் வேண்டாமா?"

"வேண்டாம் மச்சான். என்னுத்துக்கு நீயும் தடுமாறிக்கிட்டு...... நானே போயி நாலுவூடு சீக்கிரமாப் பாத்துக்கிட்டு வந்துடரேன்."

பின்னுலிருந்து வந்த பிச்சைக்காரத் தம்பதிகளின் மேற்கண்ட உரையாடலைக் கவனித்த சுந்தரேசன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். அந்தக் குருட்டுப் பிச்சைக்காரனுக்கும் ஒரு மனைவி......... குடும்பம்...... இதை நினைக்கும் போது அவனுக்கு ஆச்சரியமாகவேயிருந்தது. சற்றுப் பொறுமையாகவும் இருந்தது. அந்த குருட்டு பிச்சைக்காரனுக்குமல்லவா பிச்சை யெடுத்தாவது அன்புடன் சோறுபோட ஒருத்தி இருக்கிறள் எல்லாவசதிகளும் நிறைந்துள்ள தனக்கு பசி காதை அடைக்கும் நேரத்தில் புசி என்று சொல்ல ஒருவரும் இல்லையே என்று அவன் மனம் ஏங்கியது.

அந்த பிச்சைக்காரப் பெண் கையில் ஒரு பிச்சைப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு "சாக்கிரதை மச்சான்" என்று மீண்டும் ஒருமுறை அந்தக் குருடனை எச்சரித்துவிட்டுப் போனள்.

இப்பொழுது சுந்தரசேனனின் மூளை வெகுதீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. அவனுடைய பசியைப் போக்கிக் கொள்ளவும். ஊருக்குப் போய்ச் சேரவும் ஒரு வழி கண்டுபிடித்து விட்டான். ஆம்; அதைத்தவிர வேறு வழியே இல்லை.

சுந்தரரேசன் மெதுவாக எழுந்து சுற்றுமுற்றும் ஒரு முறை பார்த்துக்கொண்டான். அடிமேல் அடிவைத்து சத்தம் செய்யாமல் அந்தக் குருடனுக்கு முன்னுல் போய் நின்றான். அவன் கையிலிருந்த துணி முடிச்சைக் கண்ட

# புன்னகை

ஆ. செயமதியனார் ★



நான் யார் தெரியுமா? என்னைச் சிலர் பைத்தியக்காரன் என்கின்றனர்; சிலர் ஆண்மையற்றவன் என்கின்றனர். நீங்கள் எப்படியாவது அழைத்துக் கொள்ளுங்கள்—எனக்குக் கவலையில்லை.

'நான் அப்பவே சொன்னேன், கேட்டானா? இப்போ எது எதுவோ உளறுகிறான்.'

'அட விடப்பா! அவன் அல்லல் படவே பிறந்தான்; அவஸ்தைப் படுகிறான். இருக்கிற அறிவைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியவில்லை.'

நான் நின்று கவனித்தேன். என் எதிரில் வந்த அவர்கள் இருவரும் என்னைப் பற்றித்தான் இப்படிப் பேசிக்கொண்டு சென்றனர். போகட்டும்; இருக்கிற அறிவைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாதவர்கள்,

நான் அந்தச் சந்தில் திரும்பினேன். ஒரு வீட்டின் ஒட்டுத் திண்ணையில் ஒருவன் பிளாஸ்டிக்கில் செய்த யானை, குதிரை, மாடு போன்ற விளையாட்டுச் சாமான்களையும், கண்ணாடி, சீப்பு, ரிப்பன் போன்றவற்றையும் அழகாக அடுக்கிக் கடைவைத்திருந்தான். அங்கு சில குழந்தைகள் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன. அவை என்னைக் கண்டதும் 'கா'—'கூ' என்று கூச்சலிட்டு 'பூச்சாண்டி' 'பூச்சாண்டி' என்று கத்திக் கொண்டே ஓடின.

நானா பூச்சாண்டி? நானும் என் முகத்தைக் கண்ணாடியில் பார்த்து இரண்டாண்டுகள் ஆகி விட்டன. எல்லோரும் என்னை ஏன் இப்படி வெறுக்கின்றனர். நான் அவ்வளவு அவலட்சணமாகவா இருக்கின்றேன்? அதையும் பார்த்து விடலாமே. அந்தக் கடையிலிருந்து ஒரு கண்ணாடியை எடுத்தேன், முகத்தைப் பார்க்க! என்னைக் கண்டு வெகுண்ட கடைக்காரன் சாமான்களைவாரிச்சுருட்டிக்கொண்டான். 'ஏன் நீகூட இப்படி அஞ்சுகின்றாய்?' எனக் கேட்க வாயெடுத்தேன். அதற்குள் அவன் பத்தடி தூரம் நடந்து விட்டான். 'வெறியன்களையெல்லாம் சுட்டுப் பொசுக்க வேண்டும்' என்று பேசிக் கொண்டே போனான். அட வெறியா! ஒழிந்து போகட்டும். நான் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தேன். ஐயய்யோ! 'இதென்ன முட்டாள், வெறியன் என்று என்னைப் பேசுவதே மேல். மனித முகமா அது? நீண்டு சுருண்டு சுருண்டு அலங்கோலமாகக் கிடந்த தாடி—கலைந்து கலைந்து மடிந்தும் சாய்ந்தும் இருந்த மீசை—சடை சடையான தலைமயிர்......சேச்சே! விகாரம்—விகாரம்!!

எதிர் வெய்யில் முகத்தைத் தீய்த்தது. நிழலுக்காக ஒரு வீட்டின் தாழ்வாரத்தருகில் ஒதுங்கி நின்றேன். உள்ளே இருவர் பேசியது கேட்டது.

'இன்னும் அலங்காரம் முடியவில்லையா? மணி 2-40 ஆச்சு; 3 மணிக்கு ஆட்டம் ஆரம்பம். ம்—ம்' என்றது ஒரு ஆணின் அழைப்புக் குரல்.

'வாரா வாரம் சினிமாதான்; பணம் வீணாகிறது' இது பதிலாக வந்த அக்கரைக் குரல்.

'இன்றிருப்பவர் நாளேயில்லே; இருக்கும்வரை நாளை இன்பமாகக் கழித்து விடுவோம். சீக்கிரம் புறப்படு.' பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது கொஞ்சம் அதிகாரமும் வேதாந்தமும் கலந்த அன்புக் குரல்.

'ம். சரி. எழுந்து வாருங்கள்' அதற்கு ஒத்து ஊதிய இந்தக் குரல்தான் அவர்கள் பயணத்தின் ஆரம்பத்திற்கு ஊதப்பட்ட ஊது குழல்.

கதவு திறந்தது. நான் வீதியில் இறங்கி நடந்தேன். கொஞ்சம் சென்று திரும்பிப் பார்த்தேன். அந்தக் கணவனும் மனைவியும் இன்பமுடன் பேசிக்கொண்டே நடந்தனர். அவர்கள் குழந்தை இருவர்க்கும் மத்தியில் தளர் நடை போட்டுப் போனான்.

உம்! கொடுத்து வைத்தவர்கள். குதூகலம் அவர்கள் வாழ்வில் தவழ்கின்றது. என்னவோ நானும் தான் வாழ்கின்றேன். நான் மட்டுமா? 'வேணி' வாழ்க்கையும் என்னைப் போலவே சூடும் சொரணையும் அற்றுத்தான் இருக்கிறது.

நான் பல தடவை நினைத்ததுண்டு. அந்த 'வேணி'யைப் பற்றி நினைக்கவே கூடாது என்று. என்ன செய்வது? மறுபடியும் மறுபடியும் அவளையே நினைக்கிறது மனம். எந்தத் தெருவிற்குப் போகக் கூடாது யார் முகத்தில் விழிக்கக்கூடாது என்று உறுதி செய்து கொள்வேனே அங்கே தான் போகிறேன்; வருகிறேன்—பார்க்கிறேன்—சிரிக்கிறேன், எல்லாம் செய்கிறேன். அப்படி அதனாலாவது நிம்மதியா என்றால் அதுவுமில்லை. எதிர் பார்ப்பதற்கு நேர் மாறாகவே எல்லாம் நடக்கிறது.

அடடா! அவள்......வேணி... என்ன காரியம் செய்து விட்டாள். ஒரே வார்த்தையில் சொல்லியிருக்கலாம். நீ என்னை "நினைக்காதே" என்று. என்னமோ கொஞ்சும் கிள்ளை மொழி, மருளும் மான் விழி என்பார்களே அதெல்லாம் அவளிடம் இருப்பதாக எத்தனையோ தடவை அவளிடமே சொல்லியிருக்கின்றேன். நான் பூங்காவிலே கடற்கரையிலே அவள் வீட்டிலே என் வீட்டிலே எல்லாம் அவளுடன் தனித்துத் தனித்துப் பேசிப் பழகியிருக்கிறேன். அப்போதெல்லாம் நான் 'சிரி' என்பேன்; சிரிப்பாள். 'பாடு' என்பேன்; பாடுவாள். 'படி' என்பேன்; படிப்பாள். உம் எல்லாம்தான் செய்தேன். ஆனால் ஒன்றே ஒன்று செய்ய மறந்து விட்டாள். மணவறையில் என் பக்கத்தில் உட்கார்ந்து தாலி கட்டிக்கொள்ள மறந்து விட்டாள். நான் செய்ய வேண்டியதை வேறொருவன் செய்து 'வேணி என் மனைவி' என்று கூறிக் கொண்டான். அவள் மணப் பந்தலிலேயே வடித்த கண்

ணீருடன் என் நினைவையும் கலக்கி ஓட விட்டு விட்டாள் போலும்.

வேணிக்கு இப்போதாவது சுக வாழ்வா என்றால் அதுவுமில்லை. 'நரகம்' என்பது கற்பனையோ உண்மையோ தெரியாது. ஆனல், அவள் நரகத்திற்குச் சென்ருல் அனுபவிக்க வேண்டிய அத்தனைக் கும் இங்கே பயிற்சி பெறுகிருள். நலிந்த உள்ளம்—நைந்த எண்ணம் இவற்றிடம் தான் அவளுக்கு நெருங்கிய உறவு. கணவனு—துராக்கிரம ஆத்மா, மனைவியா—அவ் ஆத்மாவுக்கு ஏவல் செய்யும் உடல், குழந்தைகளா—ஆவேசமும் சகிப்புத்தன்மையும் உராய்வதால் ஏற்படும் 'கிரீச்' சத்தங்கள், மனிதர்களா—வெண்கலக் கலத்தின்மீது மூடப்பட்ட தோல் முரசு, வாழ்க்கையா—அதில் கொட்டப்படும் தாறுமாருன அடி

பட்டு ஓடிப்போனுனே என்னவோ. அன்று வேணிகூட என்னை ஏறிட்டுப் பார்க்கவில்லை. என் உள்ளம் புழுங்கியது; இதயம் வெந்தணலில் வெந்தது. உடல் மரத்து, மூளை மரத்து, மனம் மரத்து—நானே மரத்து விட்டேன். அதன் பின் நான் நக்கீரனைக் காணவே யில்லை.

ஒரு ஆண்டு மங்கி மறைந்த பின், வேணியைக் கண்டேன் சென்னைக் கடற்கரையில் கையில் ஒரு குழந்தையுடன். அவள் மட்டும் இருந்திருந்தால் என் ஆத்திரத்தை அவள் தாங்காத அளவுக்கு அள்ளி வீசியிருக்கும் என் உலர்ந்த நாக்கு! ஆனல், அவளுடன் அவள் கணவனும் இருந்தான். அங்கே—அருகே செல்ல பேச என்ன உரிமையிருக்கிறது எனக்கு? என்ருலும் அவள் வீட்

## அட்டைப்பட எழுத்தோவியம்

யினுல் எழும் அகோரப் பேரிரைச்சல். சமூகத்தையும் தன்னையும் அவள் ஒப்பிட்டுக் கூறினுல் இப்படித்தான் கூறுவாள். அவள் பெறும் வாழ்வு அனுபவம் அப்படி. அவள் என்னை மணந்திருந்தால் இருவருமே சுகப்பட்டிருப்போம்.

'நானே முன் நின்று உங்கள் திருமணத்தை நடத்தி வைக்கின்றேன்' என்று உறுதியளித்த அவள் அண்ணன் நக்கீரன்தான் வேணி வேருெருவன் பக்கத்தில் பலர் முன்னிலையில் அமர்ந்த போது ஊரிலேயே இல்லை. நான் மட்டும் இருந்தேன். ஒருவேளை என் முகத்தில் விழிக்க வெட்கப்

டைத் தெரிந்துகொள்ளக்கொள்ளை வெறி. வீட்டையும் கண்டுபிடித்தேன், அவள் என்னைக் கண்டு கொள்ளாதவாறு. அன்று முதல் அவ் வீதியே கதி.

அவளுந்தான் என்ன வாழ்ந்து விடுகிருள்? அடி, உதை, வசவு அவளின் அன்ருட உரிமைப் பரிசுகள் இவை. என்னமோ வாழ்வு!

அவள் வீட்டு அருகே வந்து நின்றேன். சன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். அவள் பக்கத்து அறைக்குச் சென்றது நன்ருகத் தெரிந்தது. அன்று முதல் இன்று வரை அவள் முகத்தில் தவழும் அமைதியை எண்ணி வியக்கேன்.

## அங்குமா புலப்பம்!

"அனேக தொழிலாளர்கள் பொறுப்பு உணர்ச்சியை இழந்து விட்டனர். தொழில் கொள்கையிலும் நேர்மையான கண்ணோட்டம் அவர்களிடம் இல்லை. உலோக, இரசாயன தொழிற் சாலைகள் உலகின் இதர பகுதிகளில் உள்ளவைகளைக் காட்டிலும் உற்பத்தித் துறையில் பின்தங்கி விட்டன.

'எண்ணெய், நிலக்கரி, மரம், இதர தொழில்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அனேக தொழில் நிறுவனங்கள் தங்கள் கடமையை நிறைவேற்றத் தவறி விட்டன."

—ரஷ்யப் பிரதமர் புல்கானின்

அமைதியும், அடுப்புக் கரியும், வேண்டாம் இங்கே. இடுப்பு ஒடிய வேலை செய்தாலும் சரி. மணி மூன்று—உடனே இங்கே 'டிபன்' இருக்கவேண்டும்" பேரிடி ஒன்று இடித்து ஓய்ந்தது.

"நீங்க வர வர இப்படி நடந்தா குடும்பம் என்ன ஆகும்?" மின்னற் பிழம்பு ஒன்று பளிச்சிட்டது. மின்னல் மின்னுவது மற்றொரு இடிக்கு அச்சாரம்தானே?

"குட்டிச் சுவராகும்; அப்படியானால் இங்கே இருப்பவர்கள் கழுதைகள் என்கிறாய்—நல்ல கற்பனை செய்து பேசுகிறாய். சரி. சரி. என்றுவது ஒரு நாள் நான் வீட்டிற்கு வருவதுகூடப் பிடிக்கவில்லை—உம்!" சிம்ம கர்ச்சனையுடன் அம்மிருகம் எழுந்து அவளை அணுகியது.

நான் உடனே 'விர்'ரென்று உள்ளே ஓடி, அவனைத் தடுத்து 'பளார்,' 'பளார்' என்று இரண்டு கன்னங்களிலும், இரண்டு கொடுத்து, 'ஒரு பெண்ணை இப்படியா வதைக்கிறாய்' என்று கேட்டிருந்தால்கூட அவன் அவ்வளவு கடுஞ் சொல்லை வீசியிருக்க மாட்டான். அப்படித்தான் பேசினான் உக்கிரத்துடன்.

"நீலி வேஷம் வேண்டாம். என்ன நினைத்து என் மீதே பழியைப் போடுகிறாய்? நான் ஆங்கிலப் பெண் ஒருத்தியுடன் சினிமாப் பார்த்தேன்; சினிமா நடிகை ஒருத்தியுடன் ஓட்டலில் தங்கினேன் என்றெல்லாம் உளறுகிறாயே. நீ ஏன் அதைக் கேட்க வேண்டும்? பேச்சு எதற்கு? வேண்டுமானால் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடிப் போ. நான் நான்கு நாட்களை உல்லாசமாக வெளியில் கழித்தால் என் மீது சந்தேகம். அந்த நான்கு நாளை நீ மட்டும் நாணயமாகக் கழித்திருப்பாய் என்று நான் எப்படி நம்புவது?" என்று இரைந்தான் அவள் கணவன். தினமும் நடந்த ஒத்திகையில் இன்றுதான் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்தது இக் காட்சியும், வசனமும்.

"சிவ சிவா" காதைப் பொத்திக் கொண்டாள், வேணி!

"தவங்கிட; தஞ்சமளிக்க வருவான்" உறுமிக் கொண்டே வேகமாக வெளியே வந்தான், அவன். நான் சுவரோடு ஒட்டிக் கொண்டேன். அவன் வீதிக் கோடியில் சென்று மறைந்த பின் மெதுவாக மூச்சு விட்டேன். உள்ளே.........

வீறிட்ட குழந்தையை அணைத்துக் கொண்டு, தன் நெஞ்சு வேதனையை உள்ளேயே அழுத்தினாள்

வேணி. தண்ணீருக்குள்ளே விடப் படும் மூச்சு 'பட பட'வென்ற குமிழியாகப் பொறிவதைப் போல, பொறுக்க முடியாத துன்ப அலைகளின் தாக்குதலால் விம்ம ஆரம்பித்து விட்டாள். கடைசிக் காட்சி அது.

அரை மணி நேரத்திற்கு முன் பேசும் படக் காட்சிக்குப் போனார்களே தம்பதிகள்—அவர்கள் வாழ்க்கையுடன் வேணியின் குடும்பத்தை ஒப்பிட்டேன். இத்தனை நாட்கள் முடங்கிக் கிடந்த என் உணர்வெல்லாம் ஒன்று சேர்ந்து எழுந்தன். ஒரு துல்லியமான நட்சத்திரம் தோன்றி மறைந்தது. ஆம்! எப்படியும் வேணியின் வாழ்க்கையில் விளக்கேற்ற வேண்டும். வழி! நான் அவளை வைத்துக் கொண்டு வாழ வேண்டும்! இதில் துளியும் தவறேயில்லை! வந்தவளை வைத்துக்கொண்டு வாழத் தெரியாத ஒருவனுக்குப் புத்தி கற்பிக்க வேண்டும். துணிந்தேன்; உணர்வு வெறியாக மாறியது. உள்ளே ஓடினேன்.

கதி கலங்கி நின்றிருந்த அவள் தன் முகத்தில் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு, குழந்தையைக் கீழே விட்டு விட்டு, "கொஞ்சம் வெளியே நின்று கேட்கக் கூடாதா, அப்பா! இந்தா, ஐயா சாப்பிட்டு விட்டு மீதி வைத்த உப்புமா எடுத்துக் கொண்டு போ—!" என்று இரக்கத்துடன் மேசையில் கிடந்த இலையோடு சிற்றுண்டியை எடுத்து நீட்டினாள்.

என் நிலை எனக்கே வெட்கத்தை அளித்தது; என் கண்களில் நீர் ஊறி வழிந்தது. தாய்மை அன்பு பொலிந்த அவள் முகத்தைப் பார்த்த என் கண்களுக்கு வேறொன்றும் செய்யத் தோன்றவில்லை.

"ஏன் கலங்குகிறாய்; எடுத்துக் கொண்டு போ" அவள் கூறினாள்.

"வேணி" என்று என் வாய் முணு முணுத்தது.

"யார் நீ? பைத்தியமா?" என்று கோபமும் அதிர்ச்சியும் கலந்து கேட்டான்.

"ஆம். மணி ஒரு பைத்தியம் என்றே எல்லோரும் சொல்லுகிறார்கள்."

"மணியா?" அவள் கண்கள் அகல விரிந்தன. விறுவிறென்று அவள் முகத்தில் ஒளி படர்ந்தது.

"இந்தக் கோலத்திலா நீங்கள்?" இதற்குள் அவள் உள்ளத்தில் மக்கிக் கிடந்த கோர அனுபவச் சிக்கல்கள் தலை தூக்கவே அவள் தத்தித்தத்தி உளறினாள். "மணி—


## எழுத்தாளர்களுக்கு

கதைகள், கவிதைகள், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. 'புல்ஸ்கேப்' அளவுத் தாளில் ஒரேபக்கமாக எழுதி அனுப்புதல் வேண்டும். எழுத்துப் பிழைகளே இருத்தல் கூடாது. வெளியிடப்படாத கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பி அனுப்ப இயலாது. **கலைமன்றம் இதழில் பிரசுரமாகும் அனைத்தும் கலைமன்றத்தாருக்கே உரிமை பெற்றவை.** இவற்றை நினைவிற் கொண்டு எழுத்தோவியங்களை அனுப்பி வையுங்கள்.

**ஆசிரியர்**

**கலைமன்றம்,**

**சென்னை—1**

மணி—நான்...என் வாழ்க்கை...” அவ்வளவுதான். துணியால் முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள். அவளை எப்படியும் கைவிடக்கூடாது. அவளை வாழவைக்க வேண்டும். என் ஆண்மை கிளர்ந்தெழுந்தது; ஒரு சக்தி என்னுள்ளே தோன்றி, ‘தைரியமாயிரு; நினைத்ததைச் செய்’ என்று தட்டிக் கொடுத்தது. அவள் வேண்டும் ஆறுதலையளிகக வார்த்தைகள் அகப்படவில்லை. உடனே, இந்த மாதிரி கட்டத்தில் நான் ஒரு நாடகத்தில் நடித்தபோது பேசிய வசனம் ஞாபகத்திற்கு வந்தது; துணிவோடு பேசினேன்.

“வேணி! சமுதாயம் சந்தனக் காடல்ல; சாக்கடைச் சேறு. அதில் சிக்கியவர்களை மீட்கத் தைரியமுள்ளோர் தேவை. அதற்காகவே நான் வந்தேன். வந்துவிடு என்னுடன்; வாழவைக்கிறேன் உன்னை இனியாவது சமூகம் உணரும். வா வண்ண மயிலே! சிந்தை களித்து நாம் வாழ்வதைக் கண்டு சிந்தனையற்றோர் சீர் பெறட்டும்; தெளிவு பெறட்டும்.”

வசனம் சென்ற வேகத்தில் வேணியின் கையைப் பிடித்து இழுத்து விட்டேன். நாடகம் வேறு பாதையில் திரும்பி விட்டது.

“அறிவு தெரியுமுன் இருந்த நட்பை எண்ணி, மதியிழந்து, மணமான பின்னும் என்னையே நினைத்து நினைத்துப் பைத்தியமாகி விட்டவனே—நீ கெட்டதுமன்றி என்னையும் கெடச் செய்து என் கணவனுக்கும் துரோகம் செய்யச் சொல்லுகிறாயா? முதலில் நீயே சீர்படு—தெளிவு பெறு.”

‘பளீர்’ ‘பளீர்’ ‘பளீர்’ என்று வேணியின் கை என் கன்னத்தை ருசி பார்த்து விட்டது.

* * *

மணிப் பொறி ஏழு அடித்து ஓய்ந்தது. அறையினுள் இள வெய்யில் ஆட்சி புரிந்தது. எனக்கு எதுவும் நினைக்கத் தோன்றவில்லை. பேசாமல் படுத்தேன். கண்களை மூடினேன். ஆனால் நடந்த நிகழ்ச்சி என் கருத்தை மூடவில்லை. என் மனைவி ‘காந்திமதி’யின் குரல் கேட்டது.

“வா, வேணி!” வேணியா? என் மனம் அலை பாய்ந்தது. நேற்றைய மாலை நிகழ்ச்சி என் கண் முன் வந்தது.

உண்மையிலேயே நான் எவ்வளவுதான் முயன்றாலும் எனக்குத் திருமணமாகி ஒரு வயது குழந்தையிருந்தும் கூட வேணியை நான் மறக்க முடியவில்லை. என் மனைவி

## விபசாரத் திற்கான 6 காரணங்கள்

1954 வருஷம் டிசம்பர் மாத முதல் விபசார வாழ்க்கை பற்றி பலவிடங்களிலும் விசாரணை நடத்திய மிஸஸ் மைத்திரேயி போஸ் கூறுவதாவது:—பெண்கள் துன்மார்க்க வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு வறுமையே முக்கிய காரணம். வீடு கிடைப்பதிலுள்ள சிரமம், சினிமாப் பித்து, சமூகக் கண்டிப்புகள், விதவா விவாக வசதியின்மை, எதற்கும் ஆடவரை நம்பி வாழும்படியாக ஏற்பட்டுள்ள கேவலமான பொருளாதார நிலை ஆகிய 6ம்தான் அவர்கள் விபசார வாழ்கையில் ஈடுபடுவதற்கான முக்கிய காரணங்கள்.

காந்திமதி உள்ளம் நிறைந்த அன்போடு என் எதிரில் நிற்கும்போது வேணியைத்தான் நினைப்பேன். 'வேணி' 'வேணி' என்றே எண்ணினேன்; உருகினேன். கரும்பின் மீத்த மனம் லயித்து விட்டால் கற்கண்டும் கசக்கும் போலும். காந்தி எனக்குக் கசந்தாள். காரணமின்றிக் கடிந்துகொள்வேன். மூர்க்கத்தனமாக அடித்து விடுவதும் உண்டு; எங்களுக்கு அந்த ஒரு குழந்தை பிறந்தது கூட காந்திமதியின் சாந்த குணத்தால்தான் என்றே சொல்வேன்.

வேணியை எண்ணியெண்ணி வெறி ஏறிப்போன நான் ஏதோ எழுதிக் கொண்டிருந்தேன். காந்திமதி சோறு ஆக்கிக் கொண்டிருந்தாள். குழந்தை தகர டப்பி ஒன்றைத் தரையில் 'டொங்' 'டொங்' கென்று அடித்து ரகளை பண்ணினான். வேணியின் நினைவால் மனிதத் தன்மையை நான் இழப்பதற்கும், நிரபராதியான காந்திமதியை இம்சிப்பதற்கும் இந்த மாதிரி சந்தர்ப்பங்கள் எத்தனையோ தடவை! இந்தச் சமயத்தையும் பயன்படுத்திக் கொண்டேன். அதன் விளைவு—?

குழந்தையின் முகமும், காந்திமதியின் கன்னங்களும் இரத்தங் கக்கி விட்டன. நேற்று இந்த நிகழ்ச்சி நடந்ததும் வழக்கம் போல கடற்கரைக்குப் போனேன். எதிர்பாராத வகையில் வேணியை அங்கு கண்டேன். என் ஆசை வெறியின்மீது பளுவான ஒரு பாராங்கல்லை வைத்து அழுத்திக் கொண்டேன். மனம் சாந்தியடைய அவளுக்கு என் வீட்டு முகவரியைக் கொடுத்து 'நாளை வா' என்றும் கூறிவிட்டு வந்தேன். அவளும் இன்று காலையே வந்து விட்டிருக்கின்றாள். அதற்குள் ஒரு பயங்கரக் கனவு.

* * *

அவர்கள் பேச்சு என கவனத்தை ஈர்த்தது. "நீயா காந்திமதி? நேற்று அவர் உன்னைப் பற்றிச் சொல்லவேயில்லையே; நான் உன்னைப் பற்றி அடிக்கடி நினைப்பேண்டி" என்றாள் வேணி. பேச்சிலிருந்து அவர்கள் இருவரும் இதற்கு முன்பேயே சிநேகிதர்கள் என்று புரிந்து கொண்டேன். "வா வேணி! உள்ளே போகலாம்" என்றாள் காந்திமதி. இருவரும் உள்ளே போகும் காலடி ஓசை கேட்டது. நான் தூங்குவதைப் போன்று பாசாங்கு செய்தேன். வேணியை வரவேற்கக்கூட ஏன் அவளைப் பற்றித் தவறாக எண்ணக்கூடத் தைரியமளிக்கவில்லை, அந்தக் கனவு.


**மாணவர்களுக்கான நூல்கள்**

| | |
|---|---|
| ஸ்ரீமகள் இங்கிலீஷ்-தமிழ் கையகராதி | 2 8 0 |
| ஸ்ரீமகள் தமிழ்க் கையகராதி | 1 8 0 |
| நீதிநூல் தொகை I | 1 8 0 |
| " " II | 3 8 0 |
| திருக்குறள் சிறப்புரை | 1 4 0 |
| திருக்குறள் (தீப்பெட்டி அளவு) | 0 8 0 |
| ராமுலு ஆங்கில ஆசான் | 1 8 0 |
| நேரு இந்தி ஆசான் | 1 8 0 |
| வீர பாண்டியன் கட்டபொம்மன் | 1 0 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**
**சென்னை-1**

மீண்டும் அவர்கள் வரும் ஓசை. நான் தூங்குவதாக எண்ணி அப்படித் தாராளமாகப் பேசினார்கள் போலும். உள்ளே பேசியதின் தொடர்ச்சியாக மீண்டும் பேசினார்கள்.

"நான் தமிழறிஞர் மு. வ. வின் கதையில் 'குடும்பத் தகராறை அப்பா அம்மாவிடம்கூடச்சொல்லி அமைதியடைய முயலக் கூடாது' என்ற பொன்மொழியை ஊன்றிப் படித்துள்ளேன். ஆசிரியரை மீறுவதற்காக வருந்துகின்றேன். என்ன செய்வது? இந்த இரண்டாண்டுகளில் ஒருகணமாவது என் கணவர் என்னிடம் அன்பாயில்லை, வேணி" என்றாள் என் மனைவி!

"ஆமாம் காந்தி! நீயாக இருப்பதால் பொறுத்துக் கொண்டிருக்கிறாய்! நானாக இருந்தால் அவர் முகத்தில்கூட விழிக்க மாட்டேன். அன்பு காட்டி அணைத்து வாழாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? சரியாகக் குடும்பம் நடத்தத் தெரியாதவர்களுக்கு மனைவி எதற்கு? பிள்ளை எதற்கு? எங்காவது சந்நியாசம் போய்விடலாமே" என்றாள் வேணி.

மண்டையை உடைக்கும்போது ஏற்படும் அதிர்ச்சியை அடைந்தேன், அவளுடைய பேச்சைக் கேட்டு. கண்களை இறுக மூடிக் கொண்டேன்.

காந்திமதி பேசினாள்: "என்னைச் சித்திரவதைச் செய்தாலும் பாதகமில்லை, வேணி! அவருக்கு என் மீது ஆசையில்லை என்றாலும் நான் அவருடைய அடிமையாக வாழவே ஆசைப்படுகிறேன். ஆனால், இந்தக் குழந்தையிடம்கூட அன்பாக இருக்கவில்லையே!"

"என்னவோ காந்தி! என் கணவர் இப்படியிருந்தால் என் காலம் முழுதையும் தாய் வீட்டிலேயே கழிப்பேன், 'விவாக ரத்து' வழக்கைத் தொடர்ந்து குழந்தைக்கும் எனக்கும் ஜீவனாம்சமும் வாங்கி, அவர் மானத்தையே காற்றில் தூற்றி விடுவேன்." ஈரமில்லாத நெஞ்சமுடன் வேணி கூறினாள். அதைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. என் காதையே என்னால் நம்ப முடியவில்லை.

அவளுக்குப் பதிலாக காந்திமதி "அப்படிச் சொல்லக்கூடாது, வேணி நினைக்கவும் கூடாது அந்த மாதிரி. நம் கணவன் தன் தவறை உணரும்வரை நாம்தானே உடன் இருக்கவேண்டும்" என்று கூறியது யாரோ எங்கோ பேசுவதைப் போல மெதுவாகக் கேட்டது. அதன்பின் என்ன பேசிக்கொண்டார்களோ? என் காதுகள் அடைத்துக் கொண்டன.

மனம் மரத்துப்போய் மனைவியையும் கேவலமாக மதித்து ஓயாத தொல்லைகளை அவர்களுக்கு நான் கொடுக்க எவள் காரணமோ— எனது மனிதப் பண்புகள் மறையும் நிலையை உண்டாக்க எவள் காரணமோ அவள்—அந்த வேணி—தான் அப்படிப் பேசிவிட்டாள். 'வேணி' 'வேணி' என்று ஓயாது என் மனத்தில் அடித்த புயலில் நான் மதியிழந்து 'காந்திமதியின்' அன்பையும் காதலையும் நிராகரித்துப் பேயாக மாறியிருந்தேன். எனக்கு நல்ல தண்டனை கொடுத்துவிட்டாள், வேணி! அதைச் சீர்படுத்தினாள், காந்தி.

மனத் தெளிவு தந்தாள், வேணி;

அறிவுத் தெளிவு தந்தாள், காந்திமதி!

நான் தெளிவு பெற்று மனிதனானேன். படுக்கையிலிருந்து புரண்டு எழுந்தேன். எனக்கு மணமான இந்த இரண்டு வருட வாழ்க்கையில் என் மனங்குளிர அன்பு ததும்ப 'காந்தி' என்று இதயக் கனிவுடன் அழைத்தது இதுதான் முதல் தடவை. என் பேச்சிலிருந்த குழைவையும் அன்பையும் உணர்ந்த காந்திமதி ஆனந்தக் கண்ணீர் மல்க என்னருகே வந்து நின்றாள். அதுவரை ஆடிக்கொண்டிருந்த 'கண்ணன்,' 'அப்பா' என்று மழலை மொழியில் குழலினிமையைத் தோற்கடிக்குமாறு மொழிந்து என்மீது தாவினான். என் கண்ணின் மணியை அப்படியே வாரியெடுத்து அணைத்துக் கொண்டேன்.

காந்திமதியின் கண்களில் இன்பம் நீர் தேங்கி நின்றது! வேணியைப் பார்த்தேன். அவள் கண்களில் ஏனோ வெற்றியொளி வீசியது; அவள் இதழ்களுக்கிடையே ஒரு குறும்புப் புன்னகை நெளிந்து தவழ்ந்தது.

வேணியின் கண்களில் சுடர் விட்டு ஒளிக்கும், அவள் இதழ்களுக்கிடையே நெளிந்த புன்னகைக்கும் என்ன காரணம்?

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், நான் பித்தனைப்போல அலையவில்லை. என் முகத்தில், ரோமம் அரும்பும் நிலையிலேயே 'சேவிங்' செய்து கொள்வேன். எப்போதும் என் முகம் வள வளவென்று காட்சி தரும். வேணியின் அந்த ஒரே புன்னகை என்னை மனிதனாக்கிற்று.

❀


# வெளிவந்துவிட்டது!

மாணவர்களின் ஆங்கில—தமிழ் பொக்கிஷம்!

சிறந்த தொரு படைப்பு!!

**ஸ்ரீமகள் பாக்கெட்**

**இங்கிலீஸ்—தமிழ் அகராதி**

**ENGLISH—ENGLISH—TAMIL DICTIONARY**

**20000** மேற்பட்ட ஆங்கில வார்த்தைகளுக்கு விளக்கம் நிறைந்த ஆங்கிலப் பதங்களும்—அதற்கேற்ற தமிழ்ப் பொருளும் இதில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. இது உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் தொகுக்கப்பெற்ற ஆங்கில அகராதியாகும்.

விலை ரூபாய் 2—8—0

ஸ்ரீமகள் கம்பெனி,

த. பெ. எண்—275

சென்னை—1

# காமிரு வைத்திருப்போர் கவனிக்க

அழகான இயற்கைத் தோற்றங்களை — மனதை மகிழ் விக்கும் காட்சிகளை — நீங்கள் புகைப்படங்களாக எடுத்து வைத் திருப்பின் உடனே எங்கட்கு அனுப்புக.

ஒவ்வொரு படமும் 'புல் சைஸ்' அளவில் இருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதல் தரமான புகைப்படத்திற்குப் பரிசு | ரூ. | 10— |
| இரண்டாம் பரிசு | ரூ. | 5— |

புகைப்படக் கலைப்பகுதி,

**கலைமன்றம் — சென்னை-1**

---

புகைப்படக் கலைப்பகுதி

நுழைவுச் சீட்டு

பெயர் ...........................................................

முகவரி: ...........................................................

...........................................................

காமிருவின்பெயர்: ...........................................................

இணைத்துள்ள படங்களின் எண்ணிக்கை } ...........................................................

...........................................................

நாள்: ........................1955 கையெழுத்து

CONNEMARA PUBLIC ...
... AUG 1958



# பூனை புலியானால்?

உலகப்பன்

அவன் பெயர் முத்துக்குமார்!

அன்றைய தபாலைப் பிரித்ததும் அவன் முகம் மலர்ந்தது. அன்னையிடம் ஓடினான். அப்பாவைத் தேடினான். சேதி யறிவிக்க. ஆம்! வேலை கிடைத்து விட்டது அவனுக்கு. கடலூர் கூட்டுறவு இலாகா அலுவலகத்தில் தட்டெழுத்தாளர் வேலை. பத்தாவது படித்து விட்டுப் பல திங்கள் காத்துக் கிடந்தான், அரசாங்க வேலைத் தேர்வு எழுதிவிட்டு.

தனது எண்ணம் வெற்றி பெற்றதில் தந்தைக்கு மகிழ்ச்சி. இனி எப்படியும் பிழைத்துக் கொள்வான் மகன் என்ற நம்பிக்கை பிறந்தது. உடனே இராமநாதபுரம் விட்டுக் கடலூர் புறப்பட ஏற்பாடு செய்தார். மகனைப் பிரிய வருத்தம்தான். எனினும் எதிர்கால வாழ்வு அதில் அடங்கிக் கிடக்கும்போது தடுக்க மனம் வருமா?

அன்னைக்குக் களிப்பு மிகுதி. மகன் படித்து விட்டான்; வேலையும் கிடைத்து விட்டது, இன்னும் கொஞ்ச காலத்தில் மகனை மணக் கோலத்தில் பார்க்கலாம்; அப்புறம் பேரனோ பேத்தியோ...... என்று எண்ணம் நெகிழ்ந்தது.

பிரியாவிடை பெற்றுக் கடலூர் வந்து சேர்ந்தான் முத்துக்குமார். அக்டோபர் முதல் நாள் என். ஜி. ஓ. ஆகிவிட்டான். ஆம், குமாஸ்தாவாயிருந்தாலும், டைப்பிஸ்டாயிருந்தாலும் எல்லாம் ஒன்றுதான் அவனைப் பொறுத்தவரை. அன்று வேலை முடிந்து வெளியேறும்போது இரவு மணி ஏழரை. கை விரல்கள் இரத்தங் கட்டிப் போய் வலித்தன.

ஒருவாரம் ஓடி மறைந்தது. அரசாங்கப் பணிமனை என்று ஏதேதோ கனவுகள் கண்டு கொண்டிருந்தவன், அனுபவ மூலமாக அது இன்னும் 'காட்டு ராஜா தர்பார் மண்டபமாக விருப்பதைக் கண்டான். மனம் வருந்தினான். காலை ஒன்பது மணிக்கு அலுவலகத்திற்குள் நுழைந்தால் இரவு ஒன்பது மணிக்கே வெளியேற முடிந்தது. கூடப் பணிபுரிபவர்களுக்கோ அது பழக்கமாகி விட்டது. செக்கில் பூட்டிய எருதுகளாகச் சுற்றி வந்தனர் அலுவலகத்தை. அதோடு நில்லாது அதிகாரிகள் மிரட்டலோ அளவற்றிருந்தது. எடுத்ததற்கெல்லாம் குற்றச் சாட்டு. அதுவே தங்களின் உயர் பதவிக்கு எடுத்துக் காட்டு என்று எண்ணினரோ, என்னவோ!

இதிலிருந்து தப்புவது எப்படி? வேலையை ராஜினமாச்செய்துவிட்டுப்போய் விட்டால்......?— அவன் எண்ணத் தொடங்கினான்.

## வஞ்சகம்

வஞ்சகருக்குத் தஞ்சமில்லை.

வஞ்சகரை எவரும் நம்பார்.

வஞ்சகத்திலாழ்வதே வஞ்சகத்திற் குரிய தண்டனை.

வஞ்சகர் சொல் நஞ்சே.

வஞ்சகன் வஞ்சிக்கவே காத்திருப்பான்.

வஞ்சகர் வஞ்சிக்கப் படுவர்.

சதி செய்யக்கருதவோர் இழிவடைவர்.

—திருக் குர் ஆன்

இந்த வேலை கிடைப்பதற்காக எவ்வளவு நாள் காத்துக் கிடக்க வேண்டியிருந்தது? இதை விட்டு விட்டால் வேறு வேலை கிடைக்க வேண்டுமே? அங்கும் இதுபோல வேயிருந்து விட்டால்? மகன் முன்னேற்றம் பற்றிக் கனவு கண்டு கொண்டிருக்கும் பெற்றோர்களிடம் வேலையை விட்டு விட்டதைச் சொன்னால்? அதன் விளைவை எண்ணிப் பார்க்கவே பயமாயிருந்தது. இவனுக்கு மட்டுந்தானா இத்தகைய அனுபவம்? எல்லாருக்குந்தான் இப்படி அனுபவம். ஆனால் அதிலிருந்து தப்ப வழி? சூதாட்டத்திலிறங்கி விட்டவன் கதைதான்! எப்போதாது ஒருமுறை வழி பிறந்து விடாதா என்று ஒரு சலபம். இதிலிருந்து வெளியேறினால் தன்னை நம்பியிருப்பாரின் நிலை என்னவாகுமோ என்ற அச்சம். ஆண்டவன் விட்ட வழி ஆகிறது; மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான் என்பது போன்ற மூட எண்ணம்.

எங்கோ தூரத்திலோடிய இரயிலின் சத்தம் முத்துக்குமாருக்குப் புது வழி சொல்லியது. உடனே தன் கதை முழுவதையும் எழுதிய கடிதத்தை மடியில் வைத்துக் கொண்டான். நள்ளிரவிலே திருப்பாப்புலியூர் மேற்பாலத்தில் ஏறி நின்றான். இண்டோ சிலோன் எக்ஸ்பிரஸ் வரும்போது அதற்கு முன்னரே குதித்து விட்டான். ஏழை மக்களைக் கசக்கிப் பிழியும் சர்க்காரைப் போல் அவனை நசுக்கி விட்டு அப்பால் ஓடி மறைந்தது உயிரற்ற ரயில் வண்டி!

* * *

சின்னாட்களுக்கு முன் இது போன்றதொரு செய்தி வெளி வந்தது தினத்தாள்களில். கொஞ்ச நாட்களாக இதுபோன்ற நிகழ்ச்சிகள் சாதாரணமாகி விட்டன. ஊதியங்காணாது உயிரை மாய்த்துக்கொண்ட ஆசிரியர், கடன் தொல்லைக்கு ஆளாகி ஆவியைப் போக்கிக் கொண்ட ஏழைக் குமாஸ்தா. அதிகாரிகளின் அக்கிரமச் செயலுக்குப் பலியாகி உயிரைத் துறந்த போலீசுக்காரர்கள், தன் குறை தீர்க்காததால் கோபங்கொண்டு பிரதம மந்திரியை மருட்டிக் கடிதம் வரையும் கிளார்க்கு என்பது போன்ற பட்டியல் நீண்டு கொண்டே யிருக்கிறது. இத்தகைய சம்பவங்களிலே தென்படுகிறவர்களெல்லாம் மத்தியதர வகுப்பு மக்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மத்தியதர வர்க்கம் சமூகத்தில் குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பெருகியிருந்த போதிலும்—அவர்களின் அறிவும், ஆற்றலும், பணியும் நாட்டிற்கு அத்தியாவசியமாயிருந்தபோதிலும்—அவர்கள் நிலை

அவலமாகவேயிருந்து வருகிறது. அவர்களைக் கவனிப்பாருமில்லை. அவர்களே கவனித்து முன்னேறும் வழியாகவுமில்லை. மத்தியதர வர்க்கத்து மக்கள் ஈன்ற முறையில் ஏதோ ஓரளவுக்குப் படிப்போ, தொழிற் பயிற்சியோ பெற்று எங்கோ ஓரிடத்தில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் பெறும் ஊதியமோ அவர்களைக் கீழ் நிலைக்கும் தள்ளி விடாது மேல் நிலைக்கும் உயர முடியாது ஊஞ்சலாட்டி விடும் நிலையிலிருக்கிறது. வாழ்வில் பெரும் பகுதி தாழ் நிலையிலுள்ளவர்களொப்ப வாழ்வதும் கணப்பொழுது உயர்நிலை வகுப்பொப்ப வாழ்வதுமாக இருந்து விட்டு வௌவால் நிலையிலிருக்கின்றனர். உடலுழைப்புச் செய்து வாழும் மக்களோடு இவர்கள் சேர விரும்புவதில்லை. உயர் நிலையிலுள்ளவர்களோடு இவர்களைச் சேர்த்துக் கொள்வதில்லை. பலன் 'திரிசங்கு சுவர்க்கம்'தான்! முடிவு இந்த மத்தியதர வர்க்கத்தினரின் சமூக நிலை நாளுக்கு நாள் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை' யாக மாறிக் கொண்டிருப்பதைக் கண்ணெதிரே காண்கிறோம்.

இந்த நிலைமையை மாற்றிக் கொள்ள எண்ணிய அரசாங்க ஊழியர்கள் கட்டுத்திட்டங்களுக்குட்பட்டு, சங்கங்கள் அமைத்து, மாநாடுகள் கூட்டி, மந்திரிகளைச் சந்தித்துக் குறைகளை விளக்கியு பின்னருங்கூட ஆளவந்தார்கள் அதை மாற்றுவதாக இல்லை. மாருகத் தங்களுக்குக்கூட சம்பளம் போதவில்லை என்பதாக ஏடா கூடம் பேசுகின்றனர். இவர்கள் நிலைமையே இப்படியிருக்கும் போது தனிப்பட்ட ஆலைகளிலோ, ஸ்தாபனங்களிலோ பணிபுரிபவர்கள் நிலையைக் கேட்க வேண்டுமா? நாமும் அறிவோம். நாடும் அறியும். ஆனல் இந்த நல்ல ஆளவந்தார்கள் மட்டும் அதைப் பொருட்படுத்துவதாகவே இல்லை.

இது நீதியா? நியாயமா? நெடுநாள் நீடிக்குமா? நீடிக்க விடலாமா?—எண்ணிப் பார்க்கும் மக்கள் யாரும் எண்ணும் நினைவலைகள் இப்படித் தானிருக்க முடியும்.

அரசாங்க இயந்திரத்தின் சக்கரங்களாய்—பொருளியலோட்ட அச்சாணிகளாய்—சமூக அமைப்பின் திருகாணிகளாய்—எங்கும் மத்தியதர வகுப்பினர் இதயத்திலே இந்த நினைவலைகள் அலைமோதத் தொடங்கினல்......?

விளைவு பயங்கரமானதாகும். தப்ப முடியாதபோது, பூனையும் புலியாகும்.

---

"கலை மன்றம்" வாரந்தோறும் சுதேசமித்திரன், ஹிக்கின்பாதம்ஸ் ரயில்வே ஸ்டால்களிலும் கிடைக்கும்.

—மானேஜர்

---




சின்னஞ்சிறிய தீவு! அது இன்று உலகப்பெரும் பிரச்னையாக உருவெடுத்து விட்டது!

"பார்மோசா" என்றால் "அழகுத்தீவு" என்று பொருள். இத்தீவானது சீனத்துக்குக் கிழக்கே பசிபிக் சமுத்திரத்தில் உள்ளது. இந்தத் தீவுக்கும், சீனத்துக்கும் உள்ள தூரம் சுமார் 90 மைல்கள். இந்த அழகுத் தீவானது தென்வடலாக 225 மைல் நீளமும், 60 மைல் முதல் 80 மைல்வரை அகலமும் கொண்டதாகும். இதன் கீழ்க் கரைக்கு இயற்கை அரணாக நீண்ட பெரிய மலைகள் இருக்கின்றன. இம்மலைச் சிகரங்களில் சில 14,500 அடி உயரம்வரை உள்ளன. இதைச்சுற்றி நிற்கும் கடற்கரையின் சுற்றளவோ 780 மைல். இந்த அழகுத் தீவுக்கு நேர் மேற்கே சுமார் 25 மைல் தூரத்தில் "பெஸ்கடோர்" தீவுகள் உள்ளன. இவையனைத்தும் பார்மோசாவைச் சேர்ந்தவைகளே. அந்தத் தீவுகள் அனைத்திலும் சிறந்த துறைமுக வசதிகள் உண்டு.

பார்மோசாவின் மத்திய பகுதி செழிப்பு மிக்க நிலப் பரப்பாகும். இதன் மேற்குக் கரையிலிருந்து பார்த்தால் கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் விதமாகத் தொடராக மலைகளும், பசும் புல் வெளிகளும காண்போரைக் கனவுலகத்துக்கு அழைத்துச் செல்லும் விதமான தோற்றத்துடன் காட்சிதரும். அத்தகு இயற்கை வனப்புதான் இந்தத் தீவுக்கு "அழகுத் தீவு" என்ற பெயரைத் தேடித்தரக் காரணமாக அமைந்ததோ என்னவோ?

## விளையும் பொருள்

இங்கு நெல், கரும்பு, தேயிலை, புகையிலை, மஞ்சள், எள், அன்னாசி சக்கரைவள்ளிக் கிழங்கு ஆகியவைகளும், சணல், காப்பி, திராட்சை போன்றவைகளையும் அதிகமாகப் பயிரிட்டு வருகிறார்கள். குரங்கு, காடி, சாட்டுப் பன்றி, காட்டுப் பூனை, மலை ஆடு, புள்ளிமான், வெளவால், அணில்போன்ற பிராணிகள் இத்தீவில் அதிகம். பறவை இனங்களில் இங்கு 145 வகைக்கு மேல் உள்ளன. மலைசார்ந்த இடங்களில் கருங்காலி, கற்பூர மரங்கள் ஆகியவை ஏராளமாக விளைவதால் இங்கு கற்பூர உற்பத்தி அதிகம்.

மனித வேட்டையாடுவதில் வல்லவர்களான, இங்குள்ள பூர்வீகக் குடிகள் தற்போது மலைசார்ந்த இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது எண்ணிக்கை மட்டும் லட்சமபேருக்கு அதிகமாக உள்ளது.

1920-ம் ஆண்டு ஜனசங்கியைப் படி இத்தீவின் மொத்த மக்கள் தொகை சுமார் 40 லட்சம். ஆனால்

தற்போதைய மக்கள் தொகை சுமார் 80 லட்சமாகும்.

இத்தீவின் செழிப்பான பகுதிகளில் சீனுவிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் வந்து குடியேறியவர்கள் இருக்கிறார்கள். ஜப்பானியர் தொகை மட்டும் இரண்டு லட்சம் பேராகும்.

முதன் முதலில் இத்தீவைக் கண்டு, தங்கியவர்கள் போர்ச்சுக்கீசியராகும். அதன் பிறகு, 1623-ம் ஆண்டில் டச்சுக்காரர்கள் குடியேறி, "சிலாந்தியா" என்ற கோட்டை ஒன்றையும் கட்டினார்கள். அதுவே தற்போது "டைனான்" என்ற நகரமாக உருவெடுத்துள்ளது. அன்று சீனரும், ஜப்பானியரும் மிகுதியாக வாழ்ந்தாலும் கூட, டச்சுக்காரர்களே இத்தீவினை ஆண்டுவந்தார்கள். 1626-ம் ஆண்டு இத்தீவின் வடபகுதியை ஸ்பெயின் நாட்டார் ஆக்கிரமித்தார்கள். ஸ்பானியர்களுக்கும், டச்சுக்காரர்களுக்கும் பெரும் மோதல் மூண்டு, பின் ஸ்பானியர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். ஆனால் 1661-ம் ஆண்டு டச்சுக்காரர்களையும் ஒருவன் விரட்டியடித்துவிட்டான்! அவன்தான் காக்சிங்கா!

ரன் ஒருவனுக்கும், ஜப்பானியப் பெண் ஒருத்திக்கும் பிறந்த காக்சிங்கா எனபவனாகும். சீனாவின் அருகே உள்ள இந்தச் சிங்காரத் தீவு, "சீனாவுக்குத்தான் சொந்தம்!" என்பது அவன் வாதம்! பக்கத் துணையாகப படைப்பலம் சேர்த்து, புரட்சி செய்தான். ஏறக்குறைய 9 மாத காலம் விடாப் பிடியாகப் போராடி அவர்களைத் தோல்வியுறச் செய்தான்! அதைத்தொடர்ந்து அந்த அழகுத் தீவு சீன நாட்டின் ஒரு பகுதியாக மாறியது!

1895-ம் ஆண்டு, சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே நடைபெற்ற போரில் சீனா தோற்றது. இருநாடுகளுக்கு மிடையே அப்போது நடைபெற்ற உடன்படிக்கைப்படி பார்மோசா தீவு ஜப்பானுக்குச் சொந்தமாகிவிட்டது! என்றாலும்கூட ஜப்பானியரது ஆட்சியை மக்கள் விரும்பவில்லை; கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். ஜப்பானியரோ ராணுவத்தைக் காட்டி, மக்களை பயமுறுத்தி ஆட்சி செய்துவந்தனர். 1898-ல் ஓரளவு குழப்பநிலை ஓய்ந்தது!

இங்கிலேயிலேதான் மூளைவிட்டது இரண்டாவது உலகப் பெரும்

---

**80—லட்சம் மக்கள் வாழும், ஒரு சின்னஞ்சிறியதீவு!—அதுதான் பார்மோசா! அந்த அழகுத்தீவின் வாழ்க்கைப் பாதையிலே ஆதிக்க வெறியர்களது வேட்டுச் சப்தம் கேட்கிறது! சிங்காரத் தீவு சீரழிந்து போகக்கூடாதே என்றகவலை சமாதான நாடுகளைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது! அத்தகு எழில்மிக்க அழகுத் தீவுதான் பார்மோசா..........**

---

**புரட்சி வீரன் காக்சிங்கா**

பார்மோசாவை விட்டு, டச்சுக்காரர்களை விரட்டியடித்தவன், பெயர் பெற்ற சீனக் கொள்ளைக்கா

போர். அதில் ஜப்பான் தோல்வியுறவே, ஜப்பானுக்குரிய பிரதேசங்கள் அனைத்தும் நேச நாடுகளின் பாதுகாப்புக்குக்கீழ் இருக்க

வேண்டியதாயிற்று. அதைத் தொடர்ந்து பார்மோசா தீவு மீண்டும் சீன சர்க்காரின் ஆளுகைக்குட்பட்டது.

சீனாவில் உள்நாட்டுப் போர் உச்சநிலை யடைந்து, சீனா முழுவதும் கம்யூனிஸ்டுகளின் கரங்களில் வீழ்ந்தது. சீன தேசிய சர்க்காரின் தலைவர் சியாங்-கே-ஷேக், சீனாவை விட்டுப் பார்மோசாவில் தமது பரிவாரங்கள் புடைசூழக் குடி புகுந்துவிட்டார். அத்துடன் அவரைத் தொடர்ந்து பத்து லட்சம் சீனர்களும் பார்மோசாவில் வந்து தங்கிவிட்டனர். வளம் கொழிக்கும் எழில் தீவாக இருந்த பார்மோசா தீவானது, இம்மாதிரி எதிர்பாராத திடீர் ஜனப் பெருக்கத்தால் வறுமையின் பிடியில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

முடிவாக.........

## அறிவியல் நூல்கள்



| | ரூ. | அ |
|---|---|---|
| தூத்துக்குடி துப்பாக்கிப் பிரயோகம் ... | 0 | 8 |
| இரத்த காவியம் ... | 0 | 8 |
| சிறையில் கருணாநிதி ... | 0 | 8 |
| டால்மியாபுரப் போராட்டம் | 0 | 8 |
| சித்தூர் போராட்டம் ... | 0 | 8 |
| கல்வித்திட்டப் போராட்டம் | 0 | 8 |
| சிறையில் திராவிடத்தலைவர்கள் | 0 | 8 |
| திரும்பிப் போ ... | 0 | 8 |
| ஆகஸ்டு ஆறு ... | 0 | 8 |

ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1.


அந்த அழகுத் தீவில் இன்று அவதியுறும் மக்கள் சுதந்திரமாக வாழப் பிரியம் கொண்டவர்கள். ஆனால் அதற்கான கிளர்ச்சி செய்யத் துணிவில்லாதவர்கள். 1946-ம் ஆண்டு, சுதந்திரம் பெற வேண்டுமென்று ஒருசிலர் முயற்சித்தார்கள். அது வெற்றியடையவில்லை. கிளர்ச்சிக்காரர்களைத் தண்டித்தும், சிறையிலடைத்தும் அவர்களது சுதந்திர முழக்கம், சிறைகளின் சுவற்றைத் தாண்டி வராதபடி பார்த்துக் கொண்டனர் ஆட்சியினர்.

தற்போது சியாங்-கே-ஷேக்கிடம் உள்ள படைகளில் பெரும்பாலானவை மலைப் பகுதிகளில் மறைந்தபடி இருக்கின்றன. மலைகளில் மறைந்து கொண்டு போர் புரிந்தால் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கைபோலும்.

உலக அமைதியைக் கருதி, பார்மோசா பிரச்னை சுமுகமாகத் தீரதேண்டும். அதற்கான வழி வகைகளைச் சீன அரசாங்கம் செய்யும் என்று உலக நாடுகள் அனைத்தும் இன்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. பார்மோசா தீவின் மீது அமெரிக்க விமானங்களும், ரஷ்ய விமானங்களும் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் காட்சியை நினைத்துப்பார்க்கவே உலகம் வெறுக்கிறது. ஹிரோஷிமாவுக்கு நேர்ந்த கதி, பார்மோசாவுக்கு நேர வேண்டாம். பாண்டுங் பாதையிலே வெற்றி நடைபோட்ட, சீன கம்யூனிஸ்ட் அரசாங்கம் இதற்கான நல்லதோர் முடிவுக்குவந்து, 'அழகுத் தீவு பார்மோசாவை, அலங்கோலத் தீவு ஆக்காமல் காக்குமா?

# எப்போது காண்பேன்?

## நாகப்பன்

மழை பெய்வதைப் பார்த்துக் கொண்டு நான் என் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். துன்பகரமான நினைவலைகள் மனதை மெள்ள மெள்ள அரிக்கத் தொடங்கின. இன்பகரமான எந்தவித எண்ணங்களும் இல்லை! எப்படியிருக்கும்? என்னுடைய வாழ்க்கையே துன்பத்தினுடைய கசப்புத் தண்ணீரில் முக்கியெடுத்த தாயிற்றே!

காலையில் தொடங்கிய மழை ஓயாமல் தொடர்ந்து பெய்கிறது! இப்போது மாலை நேரமாகிவிட்டது. மனதைக் கவரும் மஞ்சள் வெய்யிலை இன்று காணமுடியாது!

நனைந்து ஊறி நீண்டு படுத்துக் கிடக்கிறது பூமி. இயற்கைத் தேவியின் இருதயத் துடிப்புகள் போன்று ஊற்றுக்களின் துவாரங்களிலிருந்தும் சப்தம் உண்டாகுகிறது! ஓடிச் செல்லும் தண்ணீரின் சப்தம் துன்பகரமான ஓர் கானத்தின் உணர்ச்சியைத் தட்டியெழுப்புகிறது!

அறிவு வந்த நாள் தொட்டு நடந்த பல சம்பவங்களும் மனதில் பொங்கியெழுகிறது!

* * *

இருபத்தேழு வருடங்களுக்கு முன்னர் இன்ப முகட்டில் வாழ்ந்து கொண்டிருந்த ஓர் குடும்பத்தில் பிறந்தவன்தான் நான். மாளிகை வீடு, தோட்டம் துரவு, பசுக்கள், வயல் எல்லாம் இருந்தது. சமையற்கட்டைத் தொட்டு இருக்கிற வறண்ட பலாமரக் குத்துக் கட்டையானது கடந்த காலங்களை ஞாபகப்படுத்திக் கொண்டு இப்போதும் நின்று கொண்டிருக்கிறது. அன்று எங்களுடைய தோட்டம் முழுவதும் பச்சைப் போர்வையால் மூடியது போன்று ஒரே பசுமைக் காடாகக் காட்சியளித்தது. ஆனால் இன்று வெறும் கட்டாந்தரையாகி விட்டது! அன்று தோட்டத்தின் நான்கு பக்கங்களிலும் முள் வேலியிருந்தன. வேலிக்கிடையில் வளர்ந்திருந்த இராமல்லிச் செடிகள் இன்பமணம் பரப்பிக் கொண்டிருந்தன! ஆனால் இன்று வேலியே கிடையாது! அதனால் மாடுகள் சுதந்திரமாக வந்து மேய்ந்து கொண்டிருக்கின்றன.

கடந்துபோனவைகள் ஒன்றும் திரும்பி வரப் போவதில்லை. நினைவலைகளினின்றும் விடுபட்டுக் கொண்டு வேண்டுமானால், சந்தோஷப்படவோ அன்றித் துக்கப்படவோ செய்யலாம்! அன்று குடும்பத்தில் ஒற்றுமையும் அனுசரணையும் இருந்தன. அதற்குப் பிரதான காரணம் ராமு மாமா

தான். ஆனால் இன்று எல்லோ ரும் சுயநலக்காரர்களும் சூதுக் காரர்களுமாகி விட்டார்கள். வளர்ந்து வருகிற தலைமுறையில் ஏதோ ஓர் குழப்பம் ஏற்பட்டிருக் கிறது!

ராமு மாமாவைப் போன்று அவ்வளவு கருத்துள்ள ஒருவர் இனி வரப்போவதில்லை! காரியத் தில் எவ்வளவு கருத்து! அன்று எவ்வளவோ அமைதியாக எங்கள வாழ்க்கைப் படகு அதன் குறிக் கோளை நோக்கிச் சென்று கொண் டிருந்தது! பொறுப்பு வாய்ந்த மாமாக்கள்! அவர்களின் சொற் களைத் தட்டாத மனைவிமார்கள்! அவர்களின் அன்புப் பிள்ளைகள்! எப்போதும் இன்பகரமான உரை யாடல்கள்! ஆகா! எவ்வளவு ஆனந் தமாக இருந்தது அன்றைய வாழ்க்கை!

நான் ஓர் முடிவேயில்லாமல் சிந்தனையில் ஆழ்ந்து விடுகி றேன்.........!

அப்பா! என்ன மழை! இப்படி விடாமல் கனத்த மழை பெய்து கொண்டேயிருந்தால் வெள்ளப் பெருக்கேற்பட்டு விடுமா?

எண்ணங்கள், அடித்து அலை மோதுகிற அலைகளைப் போன்று ஒன்றிற்குப் பின் ஒன்றாகத் தொடர்ந்து வருகின்றன! அவை கள் எவ்வளவு சம்பவங்களை அடித் துக் கொண்டு வருகின்றன. அந் தச சம்பவங்களைச் சுற்றி நிற்கிற நபர்களும், அவர்களின உருவத் தோற்றங்களும் தெளிந்து தெளிந்து வருகின்றன! அவை களில் மிகவும் சரியாகவும் தெளி வாகவும் தோன்றுவது மொய்தீனு டைய உருவந்தான்!

* * *

மொய்தீன்—அவன் இறந்து சுமாராக ஐந்து வருடம் காலத் தீயில் கருகிவிட்டது! அவன் இறந்த தினமும் தேதியும் சரியாக நினைவில்லை. உள்ளத்தில் வேதனை நிறையும் போதெல்லாம் நான் மொய்தீனைப் பற்றி எண்ணுவேன்.

மசூதியை அடுத்துள்ள ஓர் தோட்டம்தான் மொய்தீனை அடக் கஞ் செய்திருக்குமிடம். அதை யடுத்து ஓர் மாமரம் இப்போது வளர்ந்து நிற்கிறது! அவனுக்கு மரங்கள் என்றால் உயிர்!

அதோ அங்கு வீட்டுக்கு முன் நிற்கிற பலா மரதனத அவன்தான் தண்ணீர் ஊற்றி வளர்த்தான்! இவ் வருடம் அம் மரம் காய்க்கும் என்று அம்மா சொல்கிறாள்! இனி ஒவ்வொரு வருடமும் அம் மரத்தி லிருந்தும் பலாப்பழங்களை எதிர் பார்க்கலாம்! நானும், என்னுடைய மகனும், என் மகனுடைய மகனும் அவற்றில் காய்க்கிற பலாச் சுளை களைத் தின்போம்! ஆனால் அவர் களில் யாராவது எண்ணிப் பார்ப் பார்களா இந்தப் பலாவைப் போற்றி வளர்த்த கைகளைப்பற்றி?

மொய்தீனுடைய உருவத்தை எப்படி மறக்க முடியும்? தேங்கா யைச் சிறிது சிறிதாக நறுக்கி இரத்தத்தில் தோய்த்து எடுத்தாற் போன்றுள்ள பற்கள்! மேல் உதட் டின் இரு புறங்களிலும் தொங்கிக் கொண்டிருக்கும் மீசை! விறகுக் கட்டையைப் போன்று மரத்துப் போன கை விரல்கள்! கீறல் விழுந்த உடம்பு! அவற்றையெல் லாம் ஒருமுறை பார்த்தால் போதும்—மறந்து விடுவதற்கில்லை!

இன்று அந்த உடல் மண்ணு டன் மண்ணாகக் கரைந்து சேர்ந்து விட்டது! அந்த எலும்புத் துண்டு

கள் பூமியின் அடியில் வெள்ளைக் கற்களைப் போன்று கிடக்கும்! நான் எண்ணினேன்—குழியைத் தோண்டி ஓர் எலும்புத் துண்டை யெடுத்து ஓர் தங்கப் பெட்டிக்குள் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். எங்கள் வீட்டின் ஓர் விலையேறிய பொருளைப் போன்று அந்தப் பெட்டியை மிகப் பத்திரமாகப் எல்லவா? கடைசியில் அம்மா அங்கேயும் வந்து விடுவாள்!

"உன்னிடம் நான் என்னடா சொன்னேன்? சனியன்! இங்கே வா சொல்றேன்!"—அம்மா கோபத்துடன் என்னை நெருங்குவாள்! நான் ஓடுவேன்! அம்மாவும் பின் தொடருவாள்! கையில் அகப்பட்டு விட்டால் நன்றாக உதை

---

**மொய்தீன் என்றால் உழைப்பின் உட்பொருள்—தியாகத்தின் மறு உருவம்.**

**அவன் இறந்தும் இறவாமல் வாழ்கிறான், அந்தப் பிஞ்சு உள்ளத்திலே மட்டுமல்ல நம் உள்ளங்களிலெல்லாம்**

**அந்த அன்பின் உறைவிடம் நம்மைத் தொட்டிழுக்கிறது—கட்டிப் பிணைக்கிறது.**

---

பாதுகாக்க வேண்டும்! உலகம் அழியும்போது அது மிகவும் பலத்துடன் விண்ணிலே பறந்து செல்ல வேண்டும்!—அது நாசமடையக் கூடாது!

ஒருவரின் செய்கைகளிலுள்ள தூய்மைதான் அவரிடம் நட்பும், நம்பிக்கையும் வைப்பதற்குக் காரணமாக இருப்பது! நான் என் வாழ்க்கையில் முதன் முதலாகச் சிநேகித்தது மொய்தீனைத்தான்!

* * *

"மகனே! சேற்றிலெ விளையாடாதேன்னு எத்தனை தடவை உனக்குச் சொல்லறது!"—அம்மா சபிப்பாள். நான் கேட்க மாட்டேன். இணங்கிப் போவது தோல்வியாகும் என்பதுதான் அன்றைய என் எண்ணம்! நான் பந்தை உதைத்துக் கொண்டோ, அல்லது 'கில்லி'யைத் தட்டிக் கொண்டோ வீட்டுக்குப் பின்னால் ஓடுவேன். அங்கிருந்து குறும்புத்தனம் செய்தால் அம்மா காணமாட்டா

விழும்!

"இனிக் குறும்பு செய்வியா? ஊம்...செய்வியா? இனி......?"—சொல்வதற் கிடையில் அடியும் விழுந்து கொண்டிருக்கும். நான் கண்ணீர் சிந்தி விக்கி விக்கி அழுவேன்! கண்ணைப் பிசைந்துகொண்டே "மொய்தீன் வரட்டும், சொல்லிக் கொடுக்கறேன் பார்!" என்று நான் சொல்வேன்.

மொய்தீனிடம் எனக்கு அவ்வளவு அன்பும் நம்பிக்கையுமிருந்தது! அதற்குக் காரணம் இருந்தது. ஒரு நாள் வீட்டுக்கு வெளியே கூரையிலிருந்து ஓர் பாம்பு கீழே இறங்கித் தோட்டத்துப் பக்கம் ஊர்ந்து சென்று கொண்டிருந்தது! "அய்யோ! மொய்தீன் ஓடி வா பாம்பு!"—என்று அம்மா சத்தம் போட்டாள். தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த மொய்தீன் பரக்கப் பரக்க ஓடி வந்தான். வேகமாக ஊர்ந்து சென்ற பாம்பின் வாலைத் தாவிப்

பிடித்தான்! ஓர் சுற்றுச் சுற்றித் தரையில் ஓங்கி அறைந்தான்! அந்த வாயில்லாப் பிராணி வேதனையால் நெளிந்து வளைந்து துடித்தது! வாலையும் தலையையும் சுழற்றி நிலத்தில் அடித்ததால்...கடைசியில் அது செத்து விட்டது.

வீட்டில் எல்லோரும் வியப்பும் பயமும் கலந்த பார்வையுடன் மொய்தீனைப் பார்த்தார்கள். "இதைப் பார்த்தீங்களா புள்ளியும் கோடும்!" என்று கூறி ஒரு குச்சியை எடுத்து அதன் வாய்க்குள் செலுத்தி "இதுதான் விசப் பல்லு!" என்று அதன் வாயைப் பிளந்து எல்லோருக்கும் காண்பித்தான், தீரன்! நான் மூச்சை யடக்கிக் கொண்டு நின்றேன்.

அன்று தொட்டு மொய்தீன் எனக்குப் பெரிய காரியமாகி விட்டான்.

இராத்திரியில் பேய் பிசாசுகளின் கதைகளைப் பாட்டி சொல்லும்போது நான் சொல்வேன்—"மொய்தீன் ஒரு அடியில் அவங்களைக் கொண்ணுடுவான்!" என்று.

மொய்தீனைப் போன்று அன்பும் தைரியமும் உள்ளவர்கள் வேறு ஒருவரும் இல்லை!

வீட்டில் எப்பொழுதும் மொய்தீனுக்கு வேலையிருக்கும். சும்மா இருப்பதென்றால் அவனுக்குப் பெரிய சங்கடம்!

காலையில் எட்டு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்து விடுவான்! தலையில் சுற்றியிருக்கும் துண்டை வெளிக் கதவைத் தாண்டுவதற்கு முன்னராகவே எடுத்து இடுப்பில் சுற்றிக்கொள்வான்! வெற்றிலை, சுண்ணும்புக் காண்டி எல்லாவற்றையும் ஒரு துண்டுத் துணியால் சுற்றி இடுப்பில் செருகி வைத்திருப்பான்; அது புடைத்திருக்கும்! காதில் அணைத்து வைத்திருக்கிற பீடித்துண்டு இருக்கும்! பிறகு சுவற்றில் சாய்ந்து ஒரு தினுசாக நிற்பான். அந்த 'ஸ்டைல்' இருக்கிறதே, அதுவே ஓர் தனி அலாதி தான்!

"இன்றைக்கு என்ன வேலை செய்யப்போகிறாய்?"—ராமு மாமா கேட்டார்.

"தோட்டத்துக்குக் கெழக்கே அந்தக் காவாய் மூடிப்போயிருக்குங்க; அதை எடுத்து விடணும்."

"ஆகட்டும்"—மாமா அனுமதி கொடுத்து விடுவார்.

இன்னது செய்ய வேண்டுமென்று மாமா சொல்ல மாட்டார். எல்லாம் மொய்தீனுடைய விருப்பப்படிதான்! மொய்தீனைப் பொறுத்த மட்டில் மாமாவுக்கு அவ்வளவு நம்பிக்கை.

உடனே மொய்தீன் தோட்டத்துக்குப் போய்விடுவான். பிறகு வளர்ந்து நிற்கிற மாமர நிழலில் உட்கார்ந்து ஜோராக வெற்றிலை போடுவான்! பின்னர் தலைத் துண்டையெடுத்து இடுப்பில் சுற்றிக் கொள்வான். உள்ளங்கைகளில் ஒருமுறை துப்பித் தேய்த்து கைகளைப் பதப்படுத்திய பின்னர் மண்வெட்டியை இறுக்கிப் பிடிப்பான்.

வேலை ஆரம்பமாகிவிடும்.........

மனச்சாட்சிக்கு விரோதமில்லாது வேலை செய்வான். அதற்கிடையில் வீட்டிலுள்ள பெண்கள் ஒரு நூறு வேலை சொல்லுவார்கள்! எல்லாவற்றையும் அவன் அனுசரிப்பான்.

உச்சிப் பொழுதாகும்போது ஏதாவது உள்ளே தள்ள வேண்டும். வியர்வையும், மண்ணும்

கலந்த சரீரத்துடன் அவன் சமையலறையின் பின் பக்கம் வருவான். ஆவி பொங்கும் கஞ்சியை அம்மா ஊற்றிக் கொடுப்பாள். மொய்தீன் கஞ்சி குடிப்பதைக் காண்பதற்கு என்ன ரசனை தெரியுமா? குழம்பு ஒன்றும் அவனுக்கு அவ்வளவு விருப்பம் இல்லை! ஒரு வாய் கஞ்சி குடித்தவுடன் பச்சை மிளகாயைக் கடிப்பான்! மிளகாயைக் கடிக்கும் போது உண்டாகிற 'கர்' என்ற சத்தம் இருக்கிறதே அதைத் தான் நான் மிகவும் விரும்பி ரசிப்பது! நான் கோவணம் கட்டி மூக்கில் விரலை வைத்துக் கொண்டு மொய்தீன் கஞ்சி குடிப்பதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பேன்! அப்போது சமையலறைக்குள்ளிருந்து அம்மா உரத்த குரலில் கடு கடுப்புடன் சொல்வாள்—"இங்கெ வாடா கழுதை! அங்க என்னடா உனக்கு வேலை? சாப்பிட றவங்களைப் பார்த்துக்கிட்டு நிக்காதேன்னு எத்தனை தடவை உனக்குச் சொல்லியிருக்கிறேன்!"

"நீங்க சித்தெ பேசாமெ இருங்க! கொளந்தப்புள்ளை தானே! நிண்ணுகிட்டுப் போவுது!"—மொய்தீன் சொல்வான். எவ்வளவு நல்லவன்!

கஞ்சி குடித்து முடிந்தவுடன் மீண்டும் மாமரத்தின் நிழலுக்குச் செல்வான்.

பிறகு சிறிது நேரம் இளைப்பாறுவான். காற்றில் ஆடி விளையாடுகிற மாவிலைகளைப் பார்த்துக் கொண்டே அந்த உழைப்பாளி அப்படியே மல்லாந்து படுத்துக்கிடப்பான்! மாவிலைகளில் உராய்ந்து வருகிற இளங்காற்று அவன் உடம்பிலுள்ள வியர்வைத் துளிகளைத் துவட்டி எடுக்கும்.

மாலை வேளையில் மஞ்சள் வெய்யில் மங்க ஆரம்பிக்கும் போது தான் அவன் தன் குடிசைக்குப் போவான். அவனுக்கு மனைவியும் இரண்டு பெரிய ஆண் பிள்ளைகளும் உண்டு. கிராமங்களுக்குச் சென்று அரிசி வியாபாரம் செய்வதுதான் மனைவிக்கு வேலை! பையன்களில் ஒருவனுக்குப் பீடி சுருட்டுவதும் இன்னொருவனுக்கு மூட்டை சுமப்பதுந்தான் வேலை! பையன்களின் போக்கு மொய்தீனின் விருப்பப்படி யிருக்கவில்லை! அதனால் அவனுக்கு வருத்தந்தான்.



"எம் பிள்ளைகளுக் கொண்ணும் பொளைக்கத் தெரியாது! சூட்டும், கோட்டும் போட்டுக்கிட்டு மைனர் களாட்டமா நடக்கத்தான் தெரியும்!" மொய்தீன் இப்படிச் சொல்வதுண்டு.

ஆண்பிள்ளைகள் நன்ருகப் பாடுபட வேண்டும்; அவர்களுடைய உடம்பில் எப்போதும் வியர்வைத் துளிகள் துளிர்த்திருக்க வேண்டும் என்பதுதான் அவனுடைய அபிப்பிராயம்.

மொய்தீனுடைய மனைவி ரொம்பவும் கெட்டிக்காரி! எப்போதும் அவள் நெல் வாங்குவதற்குத் தலையில் ஓர் சாக்குப் பையையும் போட்டுக்கொண்டு ஒவ்வொரு வீடாக ஏறி இறங்குவாள்! ஊரில் அவளைத் தெரியாதவர்களே இல்லை. மொய்தீனுக்கு அவளைக் குறித்து நல்ல அபிப்பிராயம் இல்லை! அழகு மங்கையான அவள் ஒழுக்கத்தைக் கண்டு அனைவரும் வியப்படைவர். ஆனால் மொய்தீனுக்கு அப்படியொரு அபிமானமே உண்டாகவில்லை! அவளுடைய செய்கைகள் ஒவ்வொன்றையும் சந்தேகக் கண்கொண்டுதான் கவனிப்பான்! அவனுடைய ஒவ்வொரு பார்வையிலும் சந்தேகங் கலந்திருந்தது!

"அவ ஒழுக்கங் கெட்ட பொம்பளை!" வீட்டிலுள்ள பெண்களிடம் மொய்தீன் பலமுறை இப்படிச் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். அதைக் குறித்து வீட்டில் யாரும் அபிப்பிராயம் கூற மாட்டார்கள். வீட்டில் எல்லோருக்கும் மொய்தீனிடம் ரொம்பவும் பிரியம்! அதனால் அவன் சம்பந்தப்பட்ட அவனுடைய சொந்தக் காரியங்களைக் குறித்து ஒருவரும் பொருட்படுத்துவதோ எதிர் அபிப்பிராயம் கூறுவதோ செய்ய மாட்டார்கள்.

மொய்தீனுக்குச் சொந்த வீட்டைவிட விருப்பம் எங்களுடைய வீடுதான்! எங்கள் வீட்டில் நடந்த ஒவ்வொரு சம்பவமும் மொய்தீனுக்கு நல்ல ஞாபகமிருக்கும்.

"இங்கெல்லாம ரெயில்வே டேசன்களில் இந்திப் பேருங்களை அளிச்சாங்க பாருங்க அந்த வருசந்தான் இந்த வீட்டுக்குப் புதுசா ஓடு மேஞ்சது"—என்று எதையும் ஞாபகம் வைத்துச் சொல்வான். வீட்டில் நடந்த பிறப்பு, இறப்பு, திருமணம் முதலான எல்லாக் காரியங்களையும் மனதில் வைத்துக் கொளவதற்காக அதே நாளில் நடந்த வேறு சம்பவங்களையும் அத்துடன் சேர்த்து ஞாபகத்தில் வைத்துக் கொள்வது அவன் வழக்கம்! சுருக்கமாகக் கூற வேண்டுமானல் எங்கள் குடும்பத்தின் சரித்திரமே அடி தொட்டு முடி வரை அவனுக்குத் தெரியும்!

* * *

மாமா இறந்து விட்டார். மருமக்களிடம் குடும்ப ஆட்சி மாறியது! சீட்டு விளையாட்டு. குடி, ஊர் சுற்றுதல் என்றிவ்வாறு அவர்கள் வாழ்ந்தார்கள்!

குடும்பக் காரியங்களில் துருப்பிடிக்க ஆரம்பித்தது! அஸ்திவாரம் அசையத் தொடங்கியது! எல்லோருக்கும் பயம் ஏற்பட்டது! வீட்டிலுள்ளவர்கள் ஒவ்வொருவரும சுயநலத்தையே பெரியதாக எண்ணினர்கள்!

கடைசியில் குடும்பச் சொத்தில் பாகப் பிரிவினை ஏற்பட்டது!

மொய்தீன் எல்லாவற்றையும் மௌனத்துடன் கவனித்து வந்தான். அந்த மௌனத்தில் அவ

னுக்குச் சொல்ல வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ அடங்கியிருந்தன!

எத்தகைய துன்ப நாட்களாக இருந்தது அந்த நாட்கள்! வாக்கு வாதம், கோபத்தைக் கக்குகிற பார்வை, அர்த்தமற்ற மௌனம்—இப்படி வேதனை நிறைந்த நாட்கள்!

சொத்துக்கள் அனைத்தும் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. பெரியம்மாவுக்கு ஒரு பாகம், சின்னம்மாவுக்கு ஒரு பாகம், எங்களுக்கு ஒரு பாகம்! பாகப் பிரிவினை ஏற்பட்ட உடனேயே எங்கள் குடும்பம் மீள முடியாத வறுமைக் குழியில் வீழ்ந்து விட்டது!

இரத்தத் துடிப்புள்ள ஆனால் இருதயம் இல்லாத என் சிறிய மாமா! எதையும் தட்டிக் கேட்காத தாயார்! வயது முதிராத நாங்கள் மூன்று பேர்! இதற்கிடையில் மாமாவின் திருமணம் வேறு!

நிலம் சிறிது சிறிதாக விற்கப்பட்டது! வீட்டு வரி செலுத்த முடியாததால் எல்லாச் சாமான்களையும் ஒவ்வொன்றாக ஜப்தி செய்து கொண்டு போய் விட்டார்கள்! தாயார் மார்பில் அடித்துக் கொண்டு புலம்பினார்கள்! கடுமையான பட்டினி! தை மாதத்திலே கூடப் பட்டினி! கடந்துபோன நாட்களை நினைவுபடுத்துகிற வீட்டிலுள்ளவர்களின் சுடு சொற்கள்! பசியால் துடித்துப் புலம்பியழுகிற சிறிய தங்கையின் வேதனைக் குரல்! பட்டினி கிடந்து பள்ளிக்கூடத்தில் படிக்கிற நான்! பள்ளிக்கூடத்திற்கே வர முடியாத நிலையிலுள்ள தம்பி! அப்பப்பா! எத்தகைய கொடூரமாக இருந்தன அன்றைய நாட்கள்!

மாமா அவர்கள் வீட்டுக்கு வருவதென்பதே மிக மிக அபூர்வமாகி விட்டது! வர வேண்டுமென்று எங்களில் யாரும் விரும்பவுமில்லை! அம்மாவுக்குக்கூட மாமாவைப் பார்க்கவே பயமாக இருந்தது!

பள்ளிக்கூடம் விட்டால் ஒரு மணிக்கு நான் வீட்டுக்கு வருவேன். சும்மா வருவதுதான்! வீட்டில் பட்டினி கிடக்கிறோம் என்று மற்றவர்களுக்குத் தெரிந்தால் மோசமல்லவா? வீட்டுக்கு வரும்போது ஒட்டிய வயிறுடன் தாயார் படுத்துக் கிடப்பதைக் காண்பேன்! தங்கையும், தம்பியும் ஓர் மூலையில் கொக்கி மீனைப்போன்று படுத்துக் கொண்டிருப்பார்கள்! நான் அம்மாவைக் கூப்பிடுவதற்குக்கூட அஞ்சுவேன்! நான் பசியால் வாடித் தளர்ந்து வந்திருப்பதைக் கண்டால் அம்மா உடனே அழுது விடுவாள்!

களைப்பைத் தணித்துக் கொள்வதற்காக நான் முகத்தைக் கழுவுவேன்! ஓர் செம்புத் தண்ணீர். அவ்வளவையும் குடிப்பேன்! பிறகு வெளித் திண்ணையில் சிறிது நேரம் உட்கார்ந்திருப்பேன்! பக்கத்தி

## சிந்தனைக்கு

மனிதன் வெறுங் கைகளால் வாழ்வதில்லை, உள்ளத்தினால் வாழ்கிறான்.

அரசியலில் சேர்வது என்பது நெருப்போடு விளையாடுவது போன்றது.

சமூகத்தில் பெண்ணை அடித்துத் தட்டி முலாம் பூசித் தெய்வமாக்குகிறார்கள்.

—காண்டேகர்

லுள்ள சின்னம்மாவின் வீட்டில் ஆட்டுக்குக் கஞ்சித் தண்ணீர் ஊற்றிக் கொடுப்பார்கள். அவற்றிலிருந்தும் கொஞ்சம் கஞ்சி கிடைத்திருந்தால்! திருப்திகரமாகச் சாப்பிட்டவன் போன்றுதான் பள்ளிக்கூடத்திற்குத் திரும்புவேன்! வெறும் அபிநயந்தானே? எவ்வளவு நேரந்தான் தாங்க முடியும்? கால்கள் தளர்ந்துவிடும்! கண்களின் பார்வை மங்கி இருள் சூழத் தொடங்கிவிடும்! தொண்டை வறண்டு விடும்! எல்லாவற்றையும் நான் சகித்துக் கொண்டேன்.

தோட்டத்தில் ஆங்காங்கு ஒன்றிரண்டு மரங்கள் மட்டுமே இருந்தன! அவைகளையும் ஒவ்வொன்றாக வெட்டி விற்கத் தொடங்கினார் மாமா! ஒவ்வொரு மரத்தின் மேலும் ஓங்கி வெட்டும்போது மொய்தீனுடைய உள்ளம் துடிக்கும்!—அவனுடைய மார்பின்மேல் ஓங்கி வெட்டுவது போன்று!

கடைசியில் மொய்தீன் எப்போதும் இளைப்பாறுகிற அந்த மாமரத்தின் மேலும் மாமாவின் கண் விழுந்தது! மொய்தீனுக்குச் சகிக்கவில்லை! எல்லா மாமரங்களையும் விட நன்கு காய்க்கிற ஒட்டு மாமரந்தான அது! மாமாவிடம் மிகவும் பணிவான குரலில் அதை வெட்ட வேண்டாமென்று கேட்டுப் பார்த்தான். அப்போது அவனிடம் மாமா கூறிய சொற்கள் இப்போதும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது—"உன் பரம்பரைச் சொத்தொன்றும் இல்லையே! ரொம்ப அக்கறையிருந்தா இப்படி ஓர் முப்பது ரூபாயைத் தள்ளு!"

மொய்தீன் ஒன்றுமே கூறவில்லை. காற்றில் ஆடியசைகிற மாவிலைகளைப் பார்த்தவாறு மௌனமாக இருந்து விட்டான்.

அந்த மாமரத்தை வெட்டிச் சாய்த்துவிட்ட அந்த நாளன்று மொய்தீன் வீட்டுக்கு வரவில்லை. மறு நாள்தான் வந்தான்! பரிதாபகரமாக இரத்தஞ் சிந்தி நிற்கிற அந்த மாமரத்தின் குத்துக் கட்டையை அவன் கைகளால் தடவிக் கொடுத்தான்! பிறகு அவற்றில் சாய்ந்து உட்கார்ந்து சூன்யமான வான வெளியில் பார்வையைச் செலுத்தி ஏதேதோ எண்ணங்களில் மூழ்கிக் கிடந்தான்!

*　　*　　*

## இந்திய மாணவி அமெரிக்க மாணவர் மன்றத்துத் தலைவர்

நியூயார்க்கிலுள்ள பிரியர்கிளிப் கல்லூரி மாணவர் மன்றத்துத் தலைமைப் பதவிக்கு புது டில்லியைச் சேர்ந்த மிஸ் சாந்தி பாய் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். மிஸ் சாந்தி பாயின் தந்தையார் இந்திய அரசாங்கத்துச் சட்ட இலாகாக் காரியதரிசி; அவருடைய தாயார் சிறந்த சமூக சேவை செய்பவர்.

மிஸ் பாய் பிரியர்கிளிப் கல்லூரிச் சமூக சேவை சங்கத்து உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். அவர் புது டில்லியிலுள்ள லேடி இர்வின் கல்லூரியில் படித்துவிட்டு, 1954 செப்டம்பரில் பிரியர்கிளிப் கல்லூரியில் சேர்ந்தார்; அங்கு ஏ. ஏ. என்னும் கலைப்பட்டம் பெறப் படிக்கிறார். அவர் சர்வதேச மாணவர் பரிவர்த்தனைத் திட்டத்து உதவி பெற்றுள்ளார்.

நாட்கள் நகர்ந்தன! மொச்சைக் கொட்டை, சோளம், குதிரைக்கு வைக்கிற கொள்—இவைகளைப் புசித்துப் பசியைத் தணித்துக் கொண்ட நாட்கள்......!

நாள்தோறும் மாலையில் மொய்தீன் வீட்டுக்கு வருவான். கையில் ஓர் சிறிய மூட்டையிருக்கும்—மொச்சைக் கொட்டை!

"இதை வேவிச்சுக் கொழந்தைகளுக்குக் குடுங்க!"

பாயில் சுருண்டு படுத்துக் கிடக்கிற தாயார் மெள்ள எழுந்திருப்பாள். பூத்துப்போன அடுப்பில் தீ எரியத் தொடங்கிவிடும்! பசியால் தளர்ந்து விட்ட நாங்கள் அடுப்பைச் சுற்றி உட்கார்ந்திருப்போம்! மொச்சை பாதி வெந்தவுடனேயே நாங்கள் சாப்பிடத் தொடங்கி விடுவோம்!

நாங்கள் சாப்பிடுவதைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நிற்பான் மொய்தீன்! அவன் கண்கள் குளமாகி விடும்!

"இந்தப் பையன் பெரியவனாகட்டும்! உங்களுக்குச் சொகம் வரும்!"—என்னைச் சுட்டிக் காண்பித்தவாறு அவன் அம்மாவிடம் சொல்வான்.

நான் பெரியவனானேன்—பட்டாளத்தில் சேர்ந்தேன்! வீட்டில் பட்டினி இல்லாதாயிற்று! மூன்று வேளையும் அடுப்பங்கரையிலிருந்தும் புகை வெளிப்பட்டது! பாத்திரங்கள் ஒன்றோடொன்று உராயும் சப்தம் கேட்டது! தங்கையின் சிரிப்பொலியும், தம்பி பாடம் வாசிப்பதும் கேட்கத் தொடங்கின!

இரண்டு வருடங்களுக்குப் பின்னர் நான் லீவில் வந்திருந்தேன். மொய்தீன் பஸ் ஸ்டாண்டுக்கு வந்திருந்தான். பட்டாள உடுப்புடன் நான் பஸ்ஸிலிருந்து கீழே குதித்தவுடன் மொய்தீன் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தான்! அவன் கண்களில் நீர் நிறைந்தது!

மொய்தீன் ரொம்பவும் மெலிந்து போயிருந்தான்! உடம்பு முழுவதும் சொறி சிரங்கு பிடித்திருந்தது! நிமிர்ந்திருந்த அவன் நெஞ்சு ஒட்டிப்போயிருந்தது! உடம்பில் எலும்புந்தோலும் மட்டுமே இருந்தன!

என்னுடைய பெட்டியைச் சுமந்து அவன் நடந்தான். மழை பெய்திருந்ததால் எங்கும் புது மண்ணின் மணம்!


## கருத்துக் கருவூலங்கள்

| | |
|---|---|
| அமெரிக்கநாட்டுப் பொன் மொழிகள்... | 0 8 |
| ஆங்கில நாட்டுப் பொன் மொழிகள்... | 0 8 |
| தமிழ்நாட்டுப் பொன் மொழிகள்... | 0 8 |
| கார்க்கியின் கருத்துரைகள்... | 0 8 |
| டால்ஸ்டாய் அறிவுரைகள்... | 0 8 |
| திருக்குறள் மூலம் ... | 0 8 |
| அண்ணாவின் உவமைகள் ... | 0 8 |
| கருணாநிதியின் கருத்துரைகள் | 0 8 |
| தாகூர் முத்துக் குவியல் ... | 0 8 |
| லெனின் பொன் மொழிகள் | 0 8 |
| இங்கர்சால் அறிவுரைகள்... | 0 8 |
| விவேகானந்தர் வீரவுரைகள் | 0 8 |
| இராமகிருஷ்ணர் அருள் மொழிகள் ... | 0 8 |
| ஏசுநாதர் அருள் வாக்குகள்... | 0 8 |
| ஸ்டாலின் புரட்சி மொழிகள் | 0 8 |
| மாஜினி மணி மொழிகள் ... | 0 8 |

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1

செம்மண் நிறைந்த குறுக்குப் பாதையின் வழியாக நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். நான் கேட்டேன்: "மொய்தீனுக்கு உடல் நலம் இல்லையா?"

"அதொண்ணும் இல்லெல தம்பி! வயசாயிருச்சு! வேலை செய்யச் சக்தியில்லெல!"

நான் ஒன்றும் பேசவில்லை. உண்மைதான்! வேலை செய்து வாழ்வதற்கு இனி அவனால் முடியாதுதான்!

மொய்தீன் தொடர்ந்து சொன்னான்—"அடுத்த தடவை தம்பி வாறப்பொ இந்த மொய்தீன் இருக்க மாட்டான்!"

நான் திடுக்கிட்டுப் போனேன்! அந்த அன்பின் உறைவிடம்—உண்மை உழைப்பாளி என்றென்றைக்கும் நிரந்தரமாக இல்லாமற் போனதோ!


அவன் கூறியது சரியாகத்தான் இருந்தது!

நான் லீவு முடிந்து வேலைக்குச் சென்ற இரண்டாம் மாதம் மொய்தீன் இறந்து விட்டான்!

மாசில்லா மனிதன், மண்ணோடு மண்ணாகப் புதைந்து விட்டான். இனி எப்போது காண்பேன்!

தனக்குத் தெரிந்த அரைகுறைத் தமிழில் என் தாயார் எழுதியிருந்தாள்—"மகனே, நம்ப மொய்தீண் செத்துட்டாண்!"

(ஓர் மலையாளக் கதையின் தழுவல்.)


## தளபதி

தளபதி தன் சேனையினை எவ்விதம் தலைமைதாங்கி வெற்றி பெற்று வீறுகொண்டு விளங்குகிறான் என்பதை இதில் விளக்குகிறார் பக்கத்துக்குப் பக்கம் பகுத்தறிவு மணம் பதத்திற்குப் பதம் புரட்சிக் கனல் இவைகள் நிரம்பிய மறுமலர்ச்சி ஏடு. வாங்குங்கள்! படியுங்கள்!

விலை ரூ. 1—0—0

**முன் பணம் அனுப்பினால் தபால் செலவு இனம்.**

விபரங்களுக்கு:

**கலைமன்றம் — சென்னை - 1**



# அழகு எரிந்தது

**T.A. துரைராஜன்**

## 3

### சிவராஜ்:

சிங்கநல்லூரிலேயே சின்னஞ்சிறு வீடு ஒன்றை ஏற்பாடு செய்து, அதிலே ராணியைக் குடும்பத்துடன் கொண்டு வைத்தேன்.

முதலிரவு. எனக்கல்ல, ராணிக்கு! எவளின் சுட்டுவிரலையாவது தொடமுடியாதா என்று தவித்தேனே, அந்த அவளை உச்சி முதல் உள்ளங்கால் வரை, என் இஷ்டப்படி ஆட்டிவைக்க உரிமையளிக்கும் அந்த நாளை எப்படி நான் மறக்கமுடியும்!

தனியறையிலே! தனியாக இருந்தேன்! மங்கிய மின்சார ஒளியிடையே குத்து விளக்கின் சுடர் லேசாக எரிந்துகொண்டிருந்தது. கட்டிலறையிலே காதலிக்காகக் காத்திருக்க வேண்டியிருக்க, என் கருத்து என்னமோ கட்டுக்கடங்காமல் பறந்தது!

பஞ்சவர்ணக் கிளியைப் பிடிக்க பாசவலை வீசிவிட்டேன், என்று யாரோ என்னைக் குற்றம் சாட்டுவது போல் இருந்தது! வலை வீசியது உண்மை! கிளியைப் பிடித்து விலைபேசி விற்பதல்ல என் நோக்கம்! ராஜாளிகளுக்கும் பருந்துகளுக்கும் இரையாகாமலிருக்கத் தங்கக் கூண்டிலே அடைத்து, பாலும் பழமுமல்லவா தரப்போகிறேன்!

"நீ மணமானவன்" இரண்டாவது குற்றச்சாட்டு. மணமானவன்தான். மறுக்கவில்லை! கலியாணம் என்ன, இருதயத்திலே காதல் கொள்ளக்கூடாது என்று போட்டுக்கொள்ளும் தடுப்பு ஊசியா?

இல் வாழ்க்கை என்பது ஒரு கோவில்! அதன் கர்ப்ப கிருகத்திலே, ஒரே ஒரு சிலைதான் மூர்த்தியாக இருக்கமுடியும். ஒத்துக்கொள்கிறேன்! என் தெய்வம் அசல் கல்லாக வல்லவா ஆகிவிட்டது!

சரஸூவின் எடுப்பான தோற்றமும் சுமுகமாகப் பழகும் போக்கும் என்னைக் கவர்ந்தன! அந்தக் கவர்ச்சியிலேதான் என் கருத்தை யிழந்தேன்! படித்தவள் பண்போடு நடப்பாள் என்று எண்ணியது பகற் கனவாகிவிட்டது! படித்தவள் மட்டுமல்ல! பணக்காரியுங்கூட என்ற எண்ணம்! அவளுடைய போக்கையே மாற்றிவிட்டது!

ஆண் மகனுடைய உயர்ந்த அம்சங்கள் அத்தனையையும் தட்டி எழுப்பவும், அவைகளைப் பரிமளிக்கச் செய்யவும், கூடிய ஆற்றல் படைத்தவள்தான் பெண் என்று ரஷ்ய அறிஞர் டால்ஸ்டாய் சொன்ன பூரண விளக்கமும் என் விவாகத்திற்குப் பின்தான் எனக்குத் தெரிந்தது!

விளக்கு அணைந்ததும் பெண்கள் அனைவரும் அழகு வாய்ந்தவர்கள் என்று எண்ணுபவனல்ல நான்! அழகான பொருள்கள் என்றுமே வற்றாத இன்ப ஊற்று என்பதுதான் என் சித்தாந்தம்.

அல்லும் பகலும் என் நினைவிலும் கனவிலும் நான் உருவகப்படுத்தி வந்த, அழகு தெய்வமே எனக்கு மனைவியாக வந்தது போல்; அத்தனை அழகியாக வந்தமைந்தாள் என் வாழ்க்கைத் துணைவி. அவளை என் வாழ்க்கைத் துணைவி என்பதைவிட, என் வாழ்க்கைத் துயரம் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கும்! சரஸூ நல்ல அழகு என்பதும், நாகம் அழகு என்பதும் ஒன்றுதான்! விவாகத்திற்கு முன் வசந்த காலம்! விவாகத்திற்குப் பின் மழை காலம் என்பது என்ன, என் வாழ்வில் மட்டும் என்ன புதுப்பாடமா?

போர் நடத்துவதின் முன் தீர்மானம் செய்வது போல்தான் பெண் கொள்ளுவதிலும் தீர்மானம் செய்ய வேண்டும்! இரண்டிலும் ஏதாவது சின்னஞ்சிறு தவறு ஏற்பட்டாலும், அவ்வளவுதான் எதிர்பார்த்திருந்த முடிவே மாறிவிடும்! அப்படித்தான் நான் தவறிவிட்டேன்!

என் முதலிரவு என் வாழ்நாளிலே முக்கிய இரவாகிவிட்டது! அன்றிருந்த மனப் படபடப்பும் இன்பமும் திகிலும் கலந்த அந்த உணர்வு இன்று எனக்கு இல்லை! என்ன இருந்தாலும் அரும்பு ஒருமுறைதானே மலருகிறது!

இதயத்திலே இன்ப அலைகள் மோத, அந்த இருண்ட இரவை இன்ப இரவாக்கப்போகும் என் இதயராணியின் வரவை எதிர்பார்த்து, வழிமேல் விழிவைத்துக் கிடந்தேன்!

சர! சர! என்ப் புதுப் புடவையின் மொற மொறப்பு சப்தம்! பரீக்ஷை ஹாலிலே கேள்வித்தாளை வாங்கியவுடன் மாணவனின் இதயம் துடிப்பதுபோல் என் உள்ளம் துடிக்க, அறையின் கதவின் மேல் கண்ணைப் பதித்தேன்.

சரஸூ உள்ளே நுழைந்தாள்! யாரோ கதவை படீர் என்று சாத்தித் தாளிட்டார்கள்! எங்கள் இன்பலோகத்தின் இரும்புத் திரையாக மாறியது அந்தக் கதவு.

அன்பும், ஆசையும்; ஆர்வமும்; அத்தனையும் போட்டி போட எழுந்து சரஸூவின் அருகில் சென்றேன். அவளோ, எங்கேயோ நினைவைச் செலுத்திக்கொண்டிருந்தாள். மெதுவாக "சரஸூ"



என்றழைத்துக்கொண்டு அவள் தோளைத் தொட்டேன்! அவ்வளவுதான் என்னவோ முணு முணுத்தபடி என் கரத்தைத் தட்டி விட்டு ஒரு பார்வை பார்த்தாள்! பாதையிலே பகட்டு உடையிலே செல்லும் போது, வேகமாக வரும் மோட்டார், ரோட்டிலே தேங்கி நிற்கும் மழை நீரை வாறி நம்மீது இறைத்துச் சென்றால், எத்தனை அருவருப்புடனும் ஆத்திரத்துடனும் துணியைத் தட்டி விடுவோம்! அத்தனை அருவெறுப்பும் ஆத்திரமும் சரஸுவின் முகத்தில் அப்போது தோன்றியது!

தொட்டாலே துவண்டு உதிரும் கஞ்சா மலர்கள் பெண் என்று எண்ணியிருந்தேன்! ஆனால் சரஸுவின் அந்த செய்கை பெண் தொட்டால் துவளும் மலரல்ல! தொட்டால் எரியும் செந்தட்டி என்று எண்ண வைததுவிட்டது! சரஸு தொட்ட கரத்தை மட்டுமா எரிய வைத்துவிட்டாள், என் இதயத்தையே அல்லவா எரிய வைத்துவிட்டாள்.

மின்சாரத் தாக்குதலில் தப்பிப் பிழைத்தவனின் உள்ளமும் உடலும் என்ன பாடு படுமோ, அப்படித்தான் பாடுபட்டது என் உள்ளமும் உடலும்!

பக்கத்தில் கிடந்த நாற்காலியில் சாய்ந்தேன்! சிகரெட் புகைச் சுழலுக்கு மத்தியில் என் சிந்தனையும் எங்கோ வட்டமிட்டது!

கிரீச் என்று கட்டில் சப்தித்தது! திரும்பினேன்! ஆழ்ந்த தூக்கத்தில் புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள் சரஸு!

எப்படியோ பத்து நாட்கள் எந்த விதமான சம்பந்தமில்லாமல்

நடந்து கொண்டோம்! தன் அப்பாவுக்கு உடல் நிலை சரியில்லை என்று மதராஸ் புறப்பட்டு சென்றவள்தான், பிறகு இந்த நாள் வரை திரும்பவேயில்லை! அவள் எனக்கு எழுதிய முதல் கடிதத்தில் ஏன் கடைசிக் கடிதமும் கூட - இருந்த கருத்து எவ்வளவு விசித்திரமானது தெரியுமா?

"காண்டேகரின் பாரிஜாத மலரின் கதையின் கதாநாயகி ஆக நான் விரும்பவில்லை" என்று முடித்திருந்தாள்! பைத்தியக்காரி! அந்தக் கதையிலே வரும் ஊருக்கு உபதேசம் செய்யும் பிரசங்கியல்ல நான் என்று ஏனோ என்னை அவள் அறிந்து கொள்ளவில்லை. அறிந்து கொள்ளவும் விரும்பவில்லை. அதற்காக நான் செய்த முயற்சி அத்தனையும் பாழானது.

அதிஷ்ட வசமாய் கண்ணைப் பறிக்கும் பட்டுச் சொக்காய்! ஏழைச் சிறுமியின் கையில் கிடைத்தால்; அதை எத்தனை ஆவலுடனும், ஆத்திரத்துடனும் கசக்கி அணைத்து மகிழ்வாள்—அன்று—அந்த முதலிரவு. அந்த ஏழைச் சிறுமியின் நிலையில்தான் நான் இருந்தேன். அடைய முடியாத அழகுத் தெய்வம் கிடைக்கும் போது! ஆத்திரமும் ஆசையும் அளவுக் கடங்காதது அசாதாரணமான சம்பவம் இல்லையே!

எலியைக் கவ்வும் அதே வாயால் தானே பூனை தன் குட்டியைக் வ்வுகிறது. என்றுதான் சரஸா நினைத்தாளே தவிர அந்த இரண்டிற்குமுள்ள நிலை வேறுபாட்டை ஏனோ உணரவில்லை அவள்!

சரஸா குறையாக்கிச் சென்ற அந்த இடத்தைப் பூர்த்திசெய்ய வேண்டி, ஆள் தேடி அலைந்தேன்! என் அலைச்சல் வீண் போகவில்லை ராணி கிடைத்தாள்! ஒழுங்கான வழியிலோ, எப்படியோ ராணி எனக்குக் கிடைத்து விட்டாள்!

"உம்" என்ற பெருமூச்சு! என்னை என் நினைவுக்கு இழுத்து வந்தது! கட்டிலிலே 'ராணி அலங்கரித்துவைத்த கொலுப் பொம்மை போல் உட்கார்ந்திருந்தாள். அருகே சென்று அவள் முகத்தை நிமிர்த்தினேன். சர்க்கஸிலே புலியின் கால்களுக்கிடையில் நுழைந்து செல்லும் அப்பாவி ஆட்டின் முகம்போல் அவளது முகம் மிரட்சி அடைந்திருந்தது. புதுப்பழக்கம், அனுபவித்தறியாத அனுபவம், எப்படியிருக்குமோ என்ற பயம்! அத்தனையும் சேர்த்து அவளது தோற்றத்தையே மாற்றி விட்டது! அணில்போலத் துள்ளி விளையாடும் ராணி, அன்று ஏனோ என் முன் முயல்போல் பதுங்கி விட்டாள்.

ராணி என்றழைத்தபடி அவளை மெதுவாக அணைத்தேன். திகிலுடன் துள்ளிவிட்டாள் என் பிடியிலிருந்து. அதற்கு மேல் அவளை நான் வற்புறுத்தவில்லை! இருவரும் மௌனமாகவே இருந்தோம்! பிறகு என்ன நினைத்துக் கொண்டாளோ ராணி! அவளாகவே மெதுவாக என்னருகே வந்து நெருங்கி உட்கார்ந்தாள்.

எப்படியோ ஒருவாறு எங்கள் முதல் விளையாட்டு முடிந்துவிட்டது.

நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தேன்! யாரோ விம்மி விம்மி யழும் சப்தம் லேசாக என் காது

களிலே விழுந்தது! எதிரே நான் கண்ட காட்சி?

அறையில் ஒரு மூலையில் ராணி முகத்தை முழங்கால்களில் புதைத்துக்கொண்டு, விம்மி விம்மியழுது கொண்டிருந்தாள்!

ஏன் அழுகிருள் என்று எனக்குத் தெரியும்! என்ன சொல்லி, எப்படி அவளை நான் சமாதானப் படுத்த முடியும்! அந்த ஏழைச் சிறுமியிடமிருந்த அந்த ஒரே ஒரு பொக்கிஷம்! மக்களிடையே அவளுக்கு மதிப்புத் தேடிக்கொடுத்த, அந்த அற்புத ரத்னத்தைக் களவாடி விட்டேன் நான்! அவள் அழாமல் வேறு என்ன செய்வாள்! இனி அவள் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் என்னிடம் அன்பு செலுத்தித்தானே ஆக வேண்டும்!

பாலுக்காக ஏங்கியழும் குழந்தைக்கு! பால் நிலவைக்காட்டி சமாதானம் செய்வதுபோல் ராணியை என்னவென்னவோ சொல்லி சமாதானப்படுத்த முயன்றேன். அழுது கொண்டே தூங்கி விட்டாள் அந்த அபலே!

ராணியின் வாழ்க்கை ஆனந்தமயமாயிருக்க வேண்டுமென்பதற்காக நான் அளவுக்கு மீறிச் செலவழித்தேன்! ஒவ்வொரு நாளும் புதுப் புது நகைகள், வண்ணத் துணிகள் பளபளத்தன — ராணி குமுதா, இருவர் உடல்களிலும் உல்லாசமாக சவாரிசெய்ய சின்னஞ்சிறு கார்கூட வாங்கிக் கொடுத்தேன்! ராணியின் கண் அசைந்தால் போதும்! கடையையே அப்படியே விலே பேசிக்கொண்டு வந்து விடுவேன்!

வீட்டிலே, என் பேச்சுக்கு எதிர் பேச்சு பேச வயதில் மூத்தவர்கள் யாருமில்லே! அம்மா எப்போதோ இறந்துவிட்டாள். சரஸுவின் விசித்திரமான போக்குக்குப் பிறகு அப்பா என் சொந்த வாழ்விலே குறுக்கிடுவதில்லே! என் இச்சைப்படி ஆடிக் களித்தேன் என் பச்சைக் கிளியுடனே!

ஊட்டி, பங்களூர், இப்படி ஒவ்வொரு ஊரிலும் உல்லாச பவனி நடத்தினேன்! ராணியின் வாழ்விலே மகிழ்ச்சியுண்டாக்க என்னவென்னமோ செய்தேன்! அவளுடைய திருப்திக்காக ஸ்டுடியோவுக்குச் சென்று வேலே செய்வதைக்கூட அனுமதித்தேன்.

ராணி சிரித்துப் பேசினுள்! உற்சாகமாக உறவாடுவாள். ஆனல் என்னவோ, அவளிடத்தில் ஒரு குறை தோன்றத்தான் செய்தது! தென்றலிலே தானே மொட்டவிழ்ந்த மலருக்கும் மனிதன் கரத்தால் மலர வைக்கப்பட்ட மலருக்கும் வித்தியாசம் தெரியத் தானே செய்கிறது!

அவள் பேசினளே தவிர அவள் இதயம் பேசவில்லே! என் உடலசைவுக்கு அவள் நெளிந்து கொடுத்தாளே தவிர, என் உள்ள அசைவுக்கு உணர்ச்சியூட்டவில்லே! என் உள்ளத் துடிப்புக்கு அவள் உள்ளம் பதில் சொல்லவில்லே! என்னமோ ஒரு கடமைக்காக வாழ்வதுபோல்தான் என் வாழ்ந்தாள்!

## பழமை விரும்பிகளுக்கு 'பாதாம் அல்வா'!

உலகம் பிரமாதமாக முன்னேறிவிட்டது. ஆனல் மக்களின் மனம் இன்னும் பழைய பத்தாம் பசலி வாழ்க்கையிலேயே வாழ்ந்து வருகிறது. பலநூற்றுண்டுகளுக்கு முன் இருந்து வந்த ஆனல் தற்கால நிலேக்குக் கொஞ்சங் கூடப் பொருந்தாத விஷயங்களேப் பலர் போற்றி வருகிருர்கள்.

—முதலமைச்சர் நேரு

கிருஷ்ணஸ்வாமி என் நண்பன், சிதம்பரத்திலுள்ள கலலூரியொன்றில் லெக்சரர் வேலை பார்த்துவந்தான்! வெகுநாட்களாக என்னை ஒரு முறை வந்து போகும்படி எழுதிக்கொண்டிருந்தான்! சிதம்பரத்தில் எழுத்தாளர் மகாநாடு கூட யிருந்தது. அதற்கு பல தலைவர்களும் விஜயம் செய்யவிருந்தார்கள்! அதைச் சாக்கிட்டாவது சிதம்பரம் வந்து போகும்படி வற்புறுத்திக் கடிதம் எழுதியிருந்தான் கிருஷ்ணசாமி!

நானும் ராணியும் குமுதாவுடன் சிதம்பரம் சென்றோம். அறிவுக் கோயில் அண்ணாமலை சர்வகலாசாலையையும், கலைக் கோயிலையும் பார்த்து மகிழ்ந்தோம்! எழுத்தாளர் மகாநாடுதான் என்றாலும் தமிழ்நாடே சிதம்பரத்திலே முகாமிட்டது போல் அத்தனை கூட்டமிருந்தது!

அன்றிரவு நானும் நண்பனும் மேல் மாடியில் தனித்திருந்தோம்! குடும்ப விஷயமாக பேசவேண்டும் என்று சொன்னான் கிருஷ்ணசாமி. கீழே அறையில் ராணியும் குமுதாவும் நாளெல்லாம் சுற்றியலைந்ததால் சோர்ந்து தூங்கிவிட்டார்கள்!

பௌர்ணமிக்கு மறுநாள்! மேல் மாடியில் விரித்திருந்த படுக்கையில் படுத்தபடியே, ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன் பக்கத்தில் நண்பன் மௌனமாக அமர்ந்து கொண்டிருந்தான்! வானத்திலே, காற்றினிலே! மிதந்து சென்றன வெண்ணிற மேகக்கூட்டங்கள். மேகம் நகருவதை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன். மேல்மாடி அப்படியே ஆகாயத்தில் மிதந்து செல்வது போல் தோன்றியது! அந்த மோன நிலையில் என்னையே மறந்திருந்தேன்!

"மதராஸ் போயிருந்தேன்" என்று அந்த நிசப்தத்தை கலைத்தான் கிருஷ்ணசாமி!

நல்ல பாடகர், நமக்கு விருப்பமான பாட்டில் பிடித்தமான சங்கதியை பிடிக்கும்போது, எப்படி நம்மையும் மீறி, கவனமாக கேட்க் உட்காருகிறோமோ அப்படி நானும் சற்று உஷாரானேன்!

"மதனியைப் பார்த்தேன்" என்று சற்று நிறுத்தினான் நண்பன்! என் ஆவல் சற்று மீறத்


## முக்கிய அறிவிப்பு

பத்திரிகை சம்பந்தமாகக் கடிதத் தொடர்பு கொளவோர் :

**ஆசிரியர்**
**கலைமன்றம், சென்னை—1.**

என்ற முகவரியிட்டே எழுதுதல் அவசியமாகும்.

சந்தா— ஏஜென்ஸி சம்பந்தமான கடிதங்கள், கணக்கு விபரங்கள் மணியார்டர்கள், முதலியவைகளையும் மற்ற, சர்குலேஷன் சார்புள்ள சகல தொடர்புகளையும்......

**மானேஜர்**
**கலைமன்றம், சென்னை—1.**

என்ற முகவரிக்கே எழுதுதல் வேண்டும்.

—**உரிமையாளர்.**

தான் செய்தது! என்ன யிருந் தாலும் தொட்டுத் தாலிகட்டிக் கொண்டவளல்லவா?

"எந்த உறவை அன்று வெறுத் துத் தள்ளினர்களோ, அந்த உற வுக்காக அனுதினமும் உருகிச் சாகிருர்கள். அண்ணு! உன் பாதத்திலே வந்து விழுந்து மன் னிபபுக் கேட்கவேண்டும். என்று தீர்மானித்து புறப்பட ஏற்பாடு செய்தார்களாம்! அங்கிலேயில் ராணியைப்பற்றி........." என்று நிறுத்தினன், கிருஷ்ணசாமி!

"ராணியைப்பற்றி?......" என் றேன் பதட்டத்துடன்.

"கான்வெண்ட் தோழியாம் ராணி! தனக்குக் கிடைக்காமல் அடித்துக் கொண்டது. தன் தோழிக்காவது கிடைத்ததே, அதைப் போய்க் கெடுக்கவேண் டாம் என்று மனதை மாற்றிக் கொண்டார்களாம்" என்று முடித் தான் கிருஷ்ணசாமி.

"சிதறிப்போன என் சிந்தனை களை எத்தனையோ சிரமப்பட்டு சேர்த்து வைத்திருக்கிறேன்! அதில் சிக்கல் ஏற்படுத்த விரும்பு கிருயா" என்றேன் சிறிது கோபத் துடன்.

"மதனிக்காக வக்கலாத்து வாங் கிப் பேச வரவில்லை, அவர்களது வாழ்வு காலாவதியான புரோ நோட்டு என்பது எனக்குத் தெரிந்ததுதான்! அண்ணு ஒரே ஒரு வேண்டுகோள்! எனக்காக அந்த ஒன்றை மட்டும் செய்ய மாட் டாயா?" என்று பரிதாபமாகக் கேட்டான் கிருஷ்ணஸ்வாமி! அவன் குரலிலே தொனித்த கருணையும் கலக்கமும் என்னைச் சற்று கலக்கத்தான் செய்தது!

"என்ன செய்யச் சொல்றே. ஆனல் இதை மட்டும் மறந்து விடாதே! உடைந்த கண்ணுடித் துண்டை ஒட்டவைக்க முடியாது! அப்படி ஒட்ட வைத்தாலும் கீறலடையாளம் தெரியத்தான் செய்யும்"

"மதனியைப் பொறுத்தவரை நீங்கள் அடிவானம் ஆகிவிட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்! மா ணத்தின் பிடியில் சிக்கிக் கிடக் கும் அவர்களை ஒரு முறை......" என்று முடிப்பதற்குள் நான் இடைமறித்து, "என்ன மரணப் படுக்கையிலா?" என்று அலறியே

## சிரிப்பதற்காக

ஒரு இலக்கிய சஞ்சிகையின் ஆசிரி யரைச் சந்திக்க, அவரது அலுவல கத்தைத் தேடிச் சென்றுர், பேராசிரி யர் கன்யாலால் கபூர். உரையாட லின் இடையில் 'உமது சஞ்சிகை எவ்வளவு அச்சாகிறது?' என வின வினுர் அவர்.

'ஒரு ஆயிரத்து ஒரு நூறு (1100)'

'ஒரு ஆயிரத்து ஒரு நூறு? அப்ப டியேன்?'—கபூருக்கு ஆச்சரியமாக வும் வினேதமாகவும் இருந்தது.

'ஆயிரம் பிரதிகள் விற்பனைக்கும், நூறு பிரதிகள் எழுத்தாளர்களுக்கு இலவசமாகவும் அனுப்பப் படுகின் றன'

'அப்படியென்ருல் நூறு பிரதிகள் மட்டும் பிரசுரியுங்கள்' என்றுர் கபூர்.

—நரேஷ் குமார் ஷாத்

விட்டேன்! உணர்ச்சியை எப்படியும் அடக்கி வைக்கவே முடியாது!

"உங்களைத் தவிர, பிறரால் துடைக்க முடியாத துயரங்களைத் தாங்கித் தாங்கி அந்த மனம் வெந்துவிட்டது" என்று நிறுத்தினான்!

எனக்கு ஒன்றும் புரியவில்லை! நண்பன் அருகிலே வைத்திருந்த என் கரத்தில் சூடான கண்ணீர் துளிகள் விழுந்தது நிமிர்ந்தேன். நண்பன் அழுது கொண்டிருந்தான்! அவனுக்கு இருக்கும் இரக்கம் கூட எனக்கு......

என் இதயத்திலே இருள் சூழ்ந்துவிட்டது! வெளியே வானத்தில் கார் மேகம் சூழ்ந்துவிட்டது! துல்லியமாகப் பிரகாசித்த சந்திரன் எங்கேயோ மறைந்துவிட்டான். காதே செவிடாகிவிடுமோ என இடியோசை ஒன்றுண்டாகியது! திடுக்கிட்டு இருவரும் எழுந்தோம்!

"மழை பிடித்துக்கொண்டது! இருவரும் கீழே போவோம்" என்று சொல்லியபடி, மாடியை விட்டு இறங்க ஆரம்பித்தோம்! அதே சமயம் யாரோ தடதட வென்று கீழே இறங்கிப் போகும் சப்தம் கேட்டது!

ராணி படுத்திருந்த அறைக்குள் வந்து மின்சார விளக்கைப் போட்டேன்! அப்போது ராணி லேசாக புரண்டு படுத்தாள்.

என் மனதிலே சுமக்கமுடியாத சுமையை ஏற்றிவிட்டான் நண்பன்! கலங்கிய சிந்தனையுடன் படுத்தேன்! ராணி ஒருவேளை நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை கேட்டிருப்பாளோ என்ற சந்தேகம் லேசாக என் நினைவில் எழுந்தது.

கோவை வந்து சேர்ந்ததும் ராணியின் போக்கில் மாறுதல் ஏற்பட ஆரம்பித்தது! அவள் எதை எதையோ சிந்தனை செய்வதாகத் தோன்றியது! பழைய கலகலப்பு அவளைவிட்டு எங்கேயோ ஓடிவிட்டது! ராணி புதிய ராணியாகிவிட்டாள்!

தென்றல் தேரோடிக்கொண்டிருக்கிறது என்று மகிழ்ந்தேன்! அதே தென்றல் புயலாக மாறிவிட்டது!

"உங்களைவிட்டு நான் மதராஸ் போகிறேன். இங்கு இருக்க எனக்குப் பிடிக்கவில்லை" என்று என்னைக் கலக்கினாள் ராணி

—வளரும்.


சிலந்திக் கூடு

ஏ. வி. பி. ஆசைத்தம்பியின்

அரிய கற்பனைக் களஞ்சியம்

சூழ்நிலையும் சந்தர்ப்பமும் மனித வாழ்வை ஓர் சிலந்திக் கூடாக மாறுவதைச் சித்தரிக்கும் சிறந்ததோர் கதை விருந்து! விறுவிறுப்பான தமிழ் நடை! படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் சொற் சித்திரம்.

விலை ரூ. 1—0—0

கலைமன்றம் — சென்னை-1.






## வரிசை எண்: 2

செவ்வாய்க்கிரகம் செல்லும் மார்க்கம், விஞ்ஞானத்துறையிலே மிக மிகப் பின் தங்கிய தமிழகத்து மக்களாலேயே கண்டுபிடிக்கப் பட்டதென்றும், முதன் முதலாக வான வெளியைத் தாண்டிச செவ்வாய் உலகம் சென்றவர்கள் தமிழர்கள்தான் என்றும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

தமிழ் மக்கள் தங்களின் பிரதிநிதிகளாக விஞ்ஞானி, சிற்பி, நடிகன், முற்போக்குஅரசியல்வாதி, எழுத்தாளன் ஆகிய ஐந்து அறிவுலக மேதைகளை அனுப்பி வைக்கிறார்கள், செவ்வாய்க் கிரகத் திற்கு.

அவர்களும் அங்கு போய்ச் சேருகிறார்கள். முதன் முதலில் அவர்கள் அங்கே கண்டது செவ்வாய் உலகத்தில் வாழும் பெண் ணொருத்தியை.

அவள் தமிழ்மொழியைக் கற்றுணர்ந்தவளாக யிருக்கிறாள். அவளிடம் நமது பிரதிநிதிகள் தங்கள் கருத்தை வெளியிடுகிறார் கள். முதன் முதலில் அவளிடம் என்னென்ன பேசவேண்டும், யார் யாரைப்பற்றி பேசவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? ஏன்? இதற்கு விடை எழுதி (புல்ஸ்கேப் அளவு தாளில் ஒரு பக்கத் திற்கு மேற்போகாமல்) அனுப்புங்கள்.

## தகுதியான விடை அனுப்புவோருக்கு பரிசு ரூ 10

**பரிசு பெருத விடைகள் சிறப்பாக யிருப்பின் பிரசுரிக்கப்படும். முடிவு தேதி 25—6—55. விடைகளைப் பின் பக்கத்திலுள்ள நுழைவுச் சீட்டுடன் அனுப்புதல் வேண்டும். "ஏன்? பகுதி, கலைமன்றம், சென்னை-1." என்ற முகவரிக்கே விடைகளை அனுப்புங்கள்.**

போட்டி எண் 2. ஏன்? முடிவு தேதி 25-6-55

(நுழைவுச் சீட்டு)

பெயர்........................................................

வயது........................................................

கல்விப் பயிற்சி........................................................

முகவரி ........................................................

........................................................

நாள்..................1955 கையெழுத்து

# ஏன்? - வரிசை: 1

## விடையும் - விளக்கமும்

உலகின் துயர் துடைக்க உறுதி பூண்டு உழைத்த 'மக்கள் தொண்டர்' அனைவரும் உயர்த்திப் பிடித்த அறிவுச் சுடர் 'ஏன் ?'

வாழ்விலே நம்பிக்கை கொண்டு வாழ்வைப் பூஞ்சோலை யாக்க, மனிதர்களை மனிதர்களாக்கக் கங்கணம்கட்டிய 'கருத்துப் புரட்சியாளர்கள்' அத்தனை பேரும் தாங்கிய அறிவுக் கேடயம் 'ஏன் ?'

''எவர், எவற்றை, எப்போது பேசினாலும்—எழுதினாலும் 'ஏன் ?' என்னும் விடையை எழுப்பு. விடையைப் பெறு. பின்னர் சிந்தனை செய்'' என்ற ஆதித் தத்துவமென நாங்களும் கருதியே 'ஏன் ?' பகுதியைத் துவக்கினோம். இப்பகுதி மூலம் கற்பனைக் கேள்விகளை எழுப்பி, அக்கேள்வி கட்குப் பல தரப்பட்ட—விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட—பேதமில்லாத உயர்ந்த விடைகளை நீங்கள் தர வேண்டுமென்ற நோக்கத்தில், 'ஏன் வரிசை எண் 1'-ல் அணுகுண்டு வீசப்பட்டு உயிரினங்கள் யாவும் அழியும் போது ஐவரை மட்டும் காப்பாற்றுவதற்காக, பாதுகாப்புச் சாதனம் ஒன்றை ஒரு விஞ்ஞானி கண்டு பிடிக்கிறான்; இவ்வாறு உயிர் காப்பாற்றப் பட வேண்டிய ஐவர் யார் யாராக இருக்க வேண்டுமென்று வாசகர்கள் விரும்புகிறார்கள் என்ற வினாவைக் கேட்டிருந்தோம். நூற்றுக் கணக்கான விடைகள் குவிந்தன. அத்தனையும் எங்கள் விவாதத்தில் இடம் பெற்றன—ஒன்றேனும் எங்கள் கருத்துக்கு (விடைக்கு) ஏற்றதாக அமையவில்லை. இந்த இடத்தில் வாசகர்கட்கு ஒரு முக்கிய செய்தியையும் தெரிவித்து விடுகிறோம். **எங்கள் விடை என்பது முன்கூட்டியே நாங்கள் தயாரித்து வைத்துக் கொள்வதல்ல. வாசகர்களின்**

**விடைகள் யாவும் வந்த பின்னர் படித்துணர்ந்து சிறந்த கருத்துக் கொண்ட ஒன்றையோ, அன்றிப் பலவற்றையோ சரியான விடையாகத் தீர்மானித்துப் பரிசளிப்பதே எங்கள் நோக்கம்.**

அவ்வாறு 'சிறந்த விடையை'த் தேர்வு செய்யும் போது திரு. சொ. இராசரத்தினம் அவர்களின் விடை ஏற்றதாகத் தோன்றியது. ஆனல் 'ஐவரில் ஒருவராகப் புதுச் சாதனங் கண்ட விஞ்ஞானியும் வாழத்தான் வேண்டும் — அவர் இருந்தால்தான் மற்ற நால்வரும் பிழைக்க முடியும்' என்ற வினவினுள் மறைமுகமான விடையையும், புத்த மதத்தையும் மறந்துவிட்டார். ஆகவே அவருக்குக் கிடைத்திருக்க வேண்டிய பரிசு நழுவிப் போயிற்று. இருப்பினும், அவரது விடையைச் சிறப்பு விடையாகக் கருதி ரூபாய் 2 மதிப்புள்ள நூல் ஒன்றைப் பரிசாக அனுப்பி வைத்தோம். மற்ருெரு வாசகரான திரு. எஸ். முத்து, திரு. சொ. இராசரத்தினத்தின் விடையை அனுசரித்து அருகில் வந்தும் தவறி, விஞ்ஞானியையும், இஸ்லாமிய மதத்தையும் மறந்துவிட்டார். எனவே இவரும் பரிசு பெற வழியில்லை. ஆயினும் ரூபாய் 1-8-0 மதிப்புள்ள நூல் ஒன்றைப் பரிசாக வழங்கினேம். இவ் இருவரின் விடைகளையும் கீழே காண்க. மற்றும் நகைச்சுவை தரும் தரும் விடைகளும், நல்ல கருத்துரைகளையும் கீழே பிரசுரித்துள்ளோம். அத்துடன் 'அந்த விஞ்ஞானியும் உயிர் வாழ்தல் வேண்டும்' எனற ஒன்றை மட்டும் குறிப்பிட்டுள்ளவர் கட்கும் ரூபாய் 1- மதிப்புள்ள நூல் ஒவ்வொன்று வீதம் பத்துப்பேர் கட்கும் அனுப்பி வைத்தோம். ஆக ரூபாய் 13-8-0 க்குப் பரிசு கொடுத்திருக்கிறேம். ஏன் வரிசை எண் இரண்டிலாவது முதற் பரிசு பெற முயலுங்கள். முயற்சி வெல்க.

—ஆசிரியர்.

## சிறப்புப் பரிசு: 1.

நல்லதொரு உலக சமுதாயத்தை உருவாக்க, குண்டு வீச்சால் அழிபவர்கள் போக, புதுமை விஞ்ஞானியின் அரிய சாதனையால் மீட்கப்படும் ஐவரையும், அடிப்படைச் சாதனங்களாக்கலாம்.

மூன்று ஆண்களும், இரண்டு பெண்களுமான அந்த ஐவரும் ஒரே இடத்தில் சந்திக்கின்றனர். அவர்களில் ஒருவன் மூன்று வயதுச் சிறுவன்—இந்து மதத்தைச் சேர்ந்த இருபத்தைந்து வயதை வயதை எட்டிய கட்டிளங்காளையின் புதல்வன். இந்து மதத்தில் தந்தை, மகன் ஆகிய இவ்விருவரையுந் தவிர மற்றைய அத்தனை பேரும் அழிந்து விட்டனர் அணு குண்டு வீச்சினுல். இம்மாதிரியே மகமதிய மதத்தில் இருவர் எஞ்சினர்கள். அவர்களும் திருமண வயதை எட்டிவிட்ட அண்ணன் தங்கைகள் ஆவர். ஐவரில் மீதமுள்ள ஒரு நபரும், இவ் வாழ்க்கை என்னும் பாதையில் தளிர் நடை போடத் துடிக்கும் துடியிடையாள்-கிருஸ்துவ மதத்தில் எஞ்சிய, மஞ்சத்துக்கு ஏங்கும் கொஞ்சு மொழிப் பாவை!

மூன்று வயதுச் சிறுவனைத் தவிர, மற்றைய நால்வரும் கூடி ஒரு முடிவிற்கு வரவேண்டும். அப்படி அவர்களால் உண்டாகப் போகும் முடிவுதான், இவ்வையத்தைச் சாதி சமயப் பாகுபாடற்ற உயரிய ஒரேமக்கள் குலத்தை உருவாக்கும். அந்த முடிவு......

உலகின் கண்ணுள்ள இந்து, மகமதியம், கிருஸ்துவம் ஆகிய முப்பெரும் மதங்களும், ஏனைய மதங்களும் அழிந்து, அதன் அடித்தளத்தின் மேல் ஒரு புதிய உலக சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டும். அதன்படி, மகமதிய மாதை இந்து மத வாலிபனும், கிருஸ்து மதத்தைச் சேர்ந்த தங்கையை மகமதிய இளைஞனும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொள்வது மகமதிய இளைஞனுக்கும், கிருஸ்துவமதப் பூங்கொடியாளுக்கும் பிறக்கப் போகும் பெண் மகவை மீதமுள்ள மூன்று வயதுச் சிறுவனுக்குத் தக்க பருவத்தில் மணம் முடித்து வைப்பது; இப்புதுமைப்

போக்கால் உலக நாடுகள் அனைத்திலும் ஒரே மனப்பான்மை கொண்ட மக்கள் சமுதாயத்தை ஆக்குவிப்பது.

சொ. இராசரத்தினம்,
தஞ்சை.

## சிறப்புப் பரிசு 2.

அணுகுண்டின் அழிவை வெல்வதற்கென்று படைக்கப்பட்ட புதிய சாதனத்தில் பதுங்கிக் கொண்டிருப்பவர்கள் மூன்று ஆண்கள்—இரண்டு பெண்கள். இவர்களில் இரண்டு ஆண்கள் நல்ல திடகாத்திர முள்ள வாலிபர்களாகவும், ஒருவர் இந்து மதத்தையும்—இன்னொருவர் முஸலீம் மதத்தையும் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இரண்டு பெண்கள் தக்க வயதுடைய கன்னிகைக ளாகவும், ஒரு பெண் கிருஸ்தவ மதத்தையும்—இன்னொரு பெண் புத்த மதத்தையும் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இந்து மதத்தைச் சேர்ந்தவன் கிருஸ்துவப் பெண்ணையும, முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவன் புத்த மதத்தைச் சேர்ந்த பெண்ணையும்—இப்படி இந்த இரு ஜோடிகளும் வாழ்க்கைத் துணைவர்களாக இருக்க வேண்டும்—வாழ வேண்டும்.

சிறக, அந்த மூன்றுவது ஆண், வயதிலும் அனுபவத்திலும் பெரியாரைப் போல்—அறிவில் அண்ணவைப் போல் இருக்க வேண்டும்.

ஏன் அவர்கள் வாழ வேண்டும்? மூடப் பழக்க வழக்கங்களில் முடங்கிக் கிடந்த சமுதாயம் அழிக்கப்பட்டு, சாதியெனும் சகதியிலே நான்கு வகுப்பைச் சேர்ந்த அந்த இரு ஜோடிகளும் இன்பக் குழவிகளை ஈன்று, சாதி மதமற்ற, சுதந்திர, ஜனநாயகச் சமுதாயத்தைத் தோற்றுவிக்க வேண்டும். வயது முதிர்ந்த பெரியார், அந்தச் சின்னஞ்சிறு சமுதாயத்தின் வாழ்க்கைக்கு வகை செய்ய வேண்டும. ஆகவே அவர்கள் வாழ வேண்டும்.

எஸ். முத்து,
புதுவை.

## பரிசு பெற்றோர்:

நீண்ட விவாதத்திற்குப் பின்பு நாம் தேர்ந்தெடுத்த விடைக்கேற்ப ஐந்து நபர்களையும் சரியாக எழுதாவிட்டாலும், எங்கள் விடைப்படி (அணுகுண்டு அழிவினின்று காப்பாற்றும் புதுச் சாதனம் கண்ட) அந்த விஞ்ஞானியின் பெயரை மட்டும் சரியாகக் குறிப்பிட்ட கீழ்க் கண்டவர்கட்கு ஒரு ரூபய் மதிப்புள்ள நூல் ஒவ்வொன்று அனுப்பி வைத்தோம்.

1. எஸ். பி. பொன்னுசாமி,
   மேட்டூர்.
2. கா. சி. சாமுவேல் ராசன்,
   ஈரோடு.
3. சர்தார் பாஷா,
   பொள்ளாச்சி.
4. ஆர். பரமசிவம்,
   புதுக்கோட்டை.
5. டி. விசுவநாதன்,
   சூலூர். (கோவை)
6. எஸ். வைத்தியநாதன்,
   கத்தரிபுலம்,
   (தஞ்சை மாவட்டம்)
7. தே. இரத்தினராசு,
   35, இஸ்மாயில் பில்டிங்,
   மொகில்லேன், மாஹீம்,
   பம்பாய்-16.
8. வே. கோதண்டராமன்,
   12, கச்சேரித் தெரு,
   கல்லக்குறிச்சி,
   (தெ. ஆ. மாவட்டம்)
9. சாஹூம்மாள் மேற்பார்வை
   எம். எம். பாட்சா,
   வாவா நகரம்,
   வடகரை அஞ்சல்,
   (நெல்லை மாவட்டம்)
10. இரா. வைத்திலிங்கம்,
    வெங்கிடாசல நாயக்கன் தெரு,
    இராயபுரம், சென்னை.

## வாசகர்களின் கருத்துரைகள்:

முக்காலத்தையும் உணர்ந்த மும்மூர்த்திகளுடைய வழித் "தோன்றல்"களின் வாழ்க்கை வரலாறுகளே முன்னுக்குப் பின் முரணாக அமைந்து, திரி

காலம் அறிந்தோர் இருந்திருக்க முடியாதெனத் தெள்ளென விளக்கும்போழுது, 1960-ம் ஆண்டில் அவனியில் உலவும் மனிதருள் மாணிக்கங்கள் யாரென உரைப்போரும் உளரோ ?... கற்பனையில் இன்றைய உலகே அன்றைய உலகெனக் கருத்திற் கொண்டால்......

“என் நாடு, பொன்னாடு; வளம் கொழிக்கும் நாடு; இனியொரு நாடு, இதற்கு இல்லை ஈடு; இதுவே எம் தாய் நாடு”—என, அந்தந்தத் தரணி வாழ் மக்கள் கூட்டம் புகழ்ப் பரணி பாடுவதோடு மட்டுமல்லாமல், தன் நாட்டு மக்களின் நல்வாழ்வில் நாட்டங்கொண்ட நல்லறிவாளர்களை அறிஞரைக்-கலைஞரை, விஞ்ஞானியை, சமுதாயச் சீர்திருத்தச் சிற்பிகளை, அரசியல் மேதைகளைப் புகழ்கிறது; போற்றுகிறது; பிற நாட்டு அறிவுச் சிகரங்களோடு சீர்தூக்கியும் பாராட்டுகிறது. “காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு” என்ற முதுமொழிக்கு ஒப்ப, பரந்த உலகின்கண் சிறந்து தனித்தியங்கும் அந்தந்தப் பகுதி வாழ் மக்கள் தம் தம் தாயகத்தின் மீது—அதன் நலன் நாடும் நல்லவர்கள் மீது பற்றுக் கொள்வது இயல்புதானே!...... விலங்குகளும், பறவைகளும் கூட “தனது—தன்னைச் சார்ந்தது” என்ற பாச உணர்வால் உந்தப்பட்டு, ஆபத்துக் காலத்தில் பாதுகாக்க விரைகிறதென்றால், மனித வர்க்கத்திற்கு அந்தப் பிறவிக் குணமும்—பற்றும், பாச உணர்வும் ஏற்படுவதில் வியப்பில்லையே? இக்கருத்தை நினைவிற் கொண்டு ஆராய்ந்தால், ஒவ்வொரு நாட்டினரும் அந்த “ஐவர்” தன் நாட்டைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டுமென விரும்புவதும் இயற்கை தானே?

“இல்லை! மாற்றான் கொல்லையில் மலர்ந்த முல்லையாய் இருந்தாலும் அந்த மலருக்குரிய மதிப்பை மதிக்கும அளவிற்கு, மனிதனின் வயது வளர-வளர அறிவும், அனுபவமும் விரிவடைவது போல, கால மாற்றத்திலே — வளர்ச்சியிலே மக்கள் அத்தகையதோர் மன வளம் பெற்று விட்டார்கள்” என்றே மதிப்பிட்டாலும்......

பூமி நூல் பற்றி பூரணமாகப் புரிந்திருப்போரும் ‘இன்ன இன்ன’ நாட்டிலே இன்னார் ‘இன்ன’ துறையிலே உலகோர் இதயம் கவர்ந்தவர்கள்-செயற்கரிய சாதனைகளைச் செயல் முறைப் படுத்திய செம்மல்கள் எனக் கண்டு பிடிப்பது முற்றிலும் முடியாத ஒன்றாகும். அவ்வாறே தேர்ந்தெடுக்கும் திறம் பெற்றாலும், அவர்கள் அத்தனை பேரையும் வரிசைப் படுத்தி, சீர் தூக்கி மேதைக்குள் மேதைகளை—அந்த ஐவரைத் தேர்ந்தெடுப்பதும் எளிதோ!

—மாமதி,
16, பிச்சு பிள்ளை தெரு, சென்னை-4.

கரும்பாம்பு ஒன்று கண் சிமிட்டிக் கதை பேசி மயக்க, கனியை உண்டாள் கணவன் சொல்லைக் கடந்து ஆதிப்பெண் ஏவாள். அவள் பெற்ற காயின், ஆபேலைக் கொன்றான்—காய்மகாரத்தால்—இப்படிக் கிருத்தவம்! ஆசைப்பட்டால் ஆண்டவர்களையும் அடைந்து மகிழ அருமருந்து பெற்ற பட்டியலிலே, ஒரு இந்து மதம்! மதத்திற்காக எதையும் செய்யும் மதவாதிகளை உற்பத்தி செய்யும் மருதி! இப்படி முக்குக்கு முப்பது தெய்வங்கள்; அவைகளின் மூச்சுக்கு முன்னூறு பிறப்புகள்! இதனால் மூவாயிரக்கணக்கான சாதிகள்! இப்படிக் குருட்டு நம்பிக்கைகளின் குப்பை மேடாய் உள்ள குவலயம் மீண்டும் இருக்கக் கூடாது! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கை வைரம் பதிக்கப்பட்ட குவளை மலர்த் தொட்டிலிலே என் தாய் தாலாட்டி ஆளாக்கும் அருமைக் காளைகளுக்குத் தேவையான பகுதி, **ஏன்?** ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதுதான் ஏன் பகுதியின் தலை சிறந்த கருத்தாகும்.

—ஆசீர்-எஸ். பிரகாசம்,
டி. யூ. சி முதலைக்குளம்.

* *

அணுகுண்டு வீசப்பட்டு உலகம் அழிந்த பின்பு உயிருடன் இருக்கக் கூடியவர்களின் வரிசையில், தானும் தன்னைச் சார்ந்தவர்களும் வாழ வேண்டுமென்று

விரும்பக்கூடிய 'சுயநலம்' கொண்ட வாசகர்களுடைய விடைகளும், முகவரிகளும் கீழே தரப்பட்டுள்ளன:—

(1) **விஞ்ஞானி:**—புதியன கண்டு பிடித்து, நாடு முன்னேற்ற மடையவும், விஞ்ஞான சம்பந்தமான புதிய முயற்சிகள் ஏற்படுத்தி உலகு செழிக்கவும்;

(2) **நான்:**—எவனும் தன்னுயிர் வாழ விரும்புவானே அல்லாது சாக விரும்ப மாட்டான். எதை இழக்க நேரிடினும் உயிரை இழக்க விரும்பாது—உயிருக்காகப் போராடத் தயங்க மாட்டான். ஆகையால் நான்;

(3) **தாய்:**—பத்து மாதம் கஷ்டப்பட்டுச் சுமந்து, பிறகு சிறு வயதிலிருந்து பெரியவனாகும்வரை பாராட்டிச் சீராட்டி வளர்த்து ஆளாக்கி என்னை நன்னிலைக்குக் கொண்டு வரும்படி செய்ததற்காக, என் தாயும்;

(4) **தந்தை:**—என் குடும்பம் வாழ்வதற்கு வழி காட்டியாகவும், பிறரை எதிர் பார்க்காது தானே உழைத்து வாழும் நிலைக்கு என்னை மனிதத்தன்மையுடன் வாழ வழி வகுத்துக் கொடுத்ததற்காகவும், சிறு வயதில் கெட்டழிந்து விடாது அடக்கி ஒடுக்கி மேன்மையுறச் செய்ததற்காக, என் தந்தையும்;

(5) **மனைவி:**—நான் பெரியவனான பிறகு வாழ்வில் என் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு யோசனை கூறுவதிலும், குடும்பம் நடத்துவதில் வரவுக்குத் தக்க செலவு செய்து, எனக்காகவே வாழும் துணைவியும்; ஆக **நாங்கள்** ஐவரும் உயிர் வாழ நான் விரும்புகிறேன்.

**—ஆர். பரமசிவம்.**
1455, பி, வடக்கு 2 வது தெரு,
**புதுக்கோட்டை.**

* * *

1. **நான்** (ஆண்)
2. **எனது மனைவி** (பெண்)
3. **எனது ஆண் மகன்** (ஆண்)
4. **உயிர் நண்பன்** (ஆண்)
5. **உயிர்நண்பனின் மனைவி** (பெண்)

ஆக மேற்குறிப்பிட்டுள்ள ஐந்து பேர்கள் மட்டுமே உயிர் வாழ வேண்டும் என்று நான் பிரியப்படுகிறேன். ஏன் என்றால், மனித வர்க்கமே பூராவும் அழிந்து விட்டாலும் எங்கள் ஐந்து பேர்களினால் காலப் போக்கில் ஜன விருத்தி செய்து கொள்ள முடியும். இந்த மாதிரியான சாதி, மதம் என்ற வித்தியாசங்கள் இல்லாமல் எங்களுக்குப் பின் ஏற்படும் சந்ததிகள் பாகுபாடு இல்லாமல் ஒரே இனமாக வாழ்வார்கள். இவ்வாறான நல்லாராய்ச்சிக்குச் சந்தர்ப்ப மளித்த தங்களுக் கொரு ஞாபகச் சின்னம நிறுவி, வருங்காலச் சந்ததிகளுக்கு நினைவூட்டும் படியான வழி செய்வோம்.

**—எம். ஈசுவரன்,**
அவினாசி ரோடு,
**திருப்பூர்.**

* *

1. **நான்,** 2. **என் மனைவி,** 3. **என் தங்கை,** 4. **என் மைத்துனர்,** 5. புதுச் சாதனம் கண்ட அந்த விஞ்ஞானி.

இந்நீள் வையத்தில் வளம் பெருக்கி இன்றைய நிலைக்குக் கொண்டு வந்துவிடுவோம். எனவே நாங்கள் வாழத்தான் வேண்டும்.

**—டி. விசுவநாதன்,**
நியூஸ் ஏஜெண்ட், **சூலூர்.**
கோவை.

* *

## மஞ்சள் மழை!

கண்டி நகரையடுத்துள்ள சிற்சில பகுதிகளில் மஞ்சள் மழை பொழிந்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இந்த மஞ்சள் மழை சில நிமிட நேரம் வரைதான் பெய்ததாம்.

மழையில் நனைந்தவர்களுடைய உடலிலும் ஆடைகளிலும் மஞ்சள் நிறக் கறைபட்டிருப்பதாகவும், தெருக்களெல்லாம், மஞ்சள் நீர் கொட்டப்பட்டவை போல் காணப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது.

1. அந்த விஞ்ஞானி, 2. **நான், எனது மைத்துனர்**, 4. என் ஆசைநாயகி, எனது சகோதரி.

இந்த ஐவரும் 2000 வருடங்களில் இப்போ திருக்கும் பரந்த உலக நாகரிகத்தையே வென்று விடுவார்கள்.

**—எஸ். பி. பொன்னுசாமி,**
20, எச். இ. டி. டபிள்யூ. எஸ்.
**மேட்டூர்.**

* *

அறிஞர் அண்ணா, அணுகுண்டு அபாயத்திலிருந்து உயிர் காக்கும் புதுச் சாதனம் கண்ட அருளாளனான அந்த விஞ்ஞானி, **நான்** ஆகிய மூன்று ஆண்களும், டாக்டர் ஹெலன் கெல்லர், என் **அன்புக் காதலியான அழகி** ஆகிய இரு பெண்களும் அமைந்த ஐவர்கொண்ட குழுவே அப்புத உலகில் வாழ வேண்டும்.

**—கா. சி. சாமுவேல் ராசன்**
சித்த வைத்தியசாலை,
காந்திஜி ரோடு,
**ஈரோடு.**

* *

உயிர் பிழைக்க வைத்த விஞ்ஞானி அறிஞன், அறிஞனின் மனைவி, **நான், என் காதலி** ஆக நாங்கள் ஐவரும் புதியதோர் உலகு செய்வதற்கு, வாழ வேண்டும்.


**—சர்தார் பாஷா,**
செல்வம் டீ ஸ்டால்,
**பொள்ளாச்சி.**

---


*விற்பனையாகிறது!*

அழகிய முகப்பு

# வாழ்க்கைப் போர்




## மா. தங்கவேலரின் கற்பனைக் கருவூலம்

இன்றைய சமூகம் ஒரு சதிக்கூடம்! ஏமாற்று லீலையால் ஏற்றங்கொண்டவன். கோமான் நிலையிலே பரவசப் பண்பாடிக் களிக்கின்றான்; சூதுத் திட்டத்துக்கு; சூழ்ச்சி வலைக்கு ஆளானோர் வஞ்சகத்தால் சிறை பிடிக்கப்படுகின்றனர். சமூகமென்னும் சதிக் கூட்டத்திலே-வஞ்சகச் சிறையிலேகைதியாகி கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பவர்களிலே சிலரை இங்கு படம் பிடித்துக் காட்டப் படுகிறது. அந்த சமூகக் கைதிகளின் வேதனைக்குரலைத்தான் உங்களுக்கு வேதனை விருந்தாக்கித் தருகிறார் ஆசிரியர் தங்கவேலர்.

**விலை ரூபாய் 1—0—0**

**தனிப்பிரதிக்கு ரூ. 1—2—0 ஸ்டாம்பு அனுப்பு.**

**ஸ்ரீ மகள் கம்பெனி, த. பெ. எண். 275, சென்னை-1.**

# இதயப்புண்

☆மெய்யன்பன்☆



பச்சைப் பசு மரங்கள் பரவிக் கிடந்தன அந்தப் பள்ளத்தாக்கில்; கொடிகளெல்லாம் கொம்புகளை அணைந்து செழிப்புற்றுக் கிடந்தன. மலரினங்கள் தங்கள் இதழ் விரித்து நகைத்து நாலா புறங்களிலும் நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தன.

மாலைச் சூரியன் நாள் முழுதும் கனல் கக்கிக் கக்கி அனற்பிழம்பாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தான். வீசிக் கொண்டிருந்த தென்றல் அங்கிருந்த மரம் செடி கொடிகளின் இலைகளோடு இன்பமாகப் பேசிக்கொண்டிருந்தது. அப் பள்ளத்தாக்கின் ஒரு மூலையிலே அழகான ஒரு சிறு கிராமமும் மிளிர்ந்து கொண்டிருந்தது.

அந்தக் கிராமத்தை நோக்கிப் பள்ளத்தாக்கின் வழியே வீரன் ஒருவன் தன்னந்தனியே நடந்து கொண்டிருந்தான். அவன் பருத்த தோளினனாய்—சிரித்த முகத்தினனாய்க் காட்சியளித்தான்; வேலைத் தாங்கிக் கொண்டிருந்த அவனது கைகள் இரும்பென உரமேறப் பெற்றவையாய்க் காட்சியளித்தன; அவனது கால்கள் கடுகி நடந்து கொண்டிருந்தன.

திடீரென்று, காற்றிலே மிதந்து வந்த இன்பமயமான கீதமொன்று கேட்டு நின்றான் அந்த மாவீரன்.

அப்படியே அசையாது நின்றான்; பின் இசை வந்த திசையை நோக்கினான்; அவனையறியாமலே கால்களும் நகர்ந்தன.

அங்கே—சோலையொன்றிலே சிங்காரப் பெண்ணொருத்தி சிரித்த முகத்துடனே ஊஞ்சலாடிக் கொண்டே கீதமிசைத்துக் கொண்டிருந்தாள்; ஊஞ்சலசைத்துக் கொண்டே அவளது தோழி பின்பாட்டு இசைத்துக் கொண்டிருந்தாள்.

மாவீரன் மரமொன்றின் மறைவிலே மறைந்து நின்றான். போர்க்களத்திலே ஒளி விட்டுப் பிரகாசிக்கும் மாற்றாருடைய வேலின் கூர்மைக்கும் அஞ்சாத அவன் இந்தச் சேல் விழியாளின் பார்வைக்கு அஞ்சி நின்றான். அவளது இனிய கீதத்திலே தன் உள்ளத்தையே பறிகொடுத்து விட்டான் அவன்; கொவ்வைக் கனியதரங்களின் அசைவிலே அழியாத பேரின்பம் கண்டான்; ரோஜா மலர்க் கன்னக் கதுப்பிலே சொக்கிப் போனான்; பவளச் செவ்வாயின் அழகை அசையாது நின்று பருகிக் கொண்டிருந்தான்.

அவளது அழகிலே இமையசைக்காது ஈடுபட்டுவிட்டான்.

நிர்மலமான நீல வானத்திலே நீந்துகின்ற வெண்மதியைக் கரு

மேகம் சூழ்வதைப்போல் திடீரென அந்தச் சிற்றிடையாளின் முகத்தைப் பெரும் பீதி சூழ்ந்து கொண்டது. கீதமிசைத்துக் கொண்டிருந்த அவள்து பவளச் செவ்வாய் கீச்சுக் குரலெழுப்பியது.

வீரன் திகைத்தான்; அவளது மூகத்திலே படர்ந்து விட்ட பீதிக்கும் பவளச் செவ்வாய் எழுப்பிய கீச்சுக் குரலுக்கும் காரணமறியாமல் திண்டாடினன்; தித்திக்கும் தேன் மொழியாளின் இனிய கீதத்தைப் பருகவிடாமல் தன்னைத் தடுத்தது எது என்பதைக் காண்பதற்காகத் தன் கண்களை அந்தக் காரிகையின் கண்கள் சென்ற பக்கம் திருப்பினன்.

புதரொன்றின் மறைவிலிருந்து புலியொன்று வந்து கொண்டிருந்தது. அந்தப் புலியின் கண்கள் இந்த மீன்விழிப் பெண்களின் மேலேயே பதிந்திருந்தன. அவளும் அவளது தோழியும் பயத்தால் கவ்வப்பட்டு உடலெல்லாம் நடுங்க செய்வதறியாது திகைத்து நின்று விட்டார்கள். வெம்பகையை நொடிப்பொழுதில் முடிக்கின்ற தடந் தோளான்—ஆம். அந்த மாவீரனும் ஒருகணம் செயல் மறந்து திகைத்துத்தான்—நின்ருன்.

ஆனல் மறுகணம்......வில்லிலிருந்து கிளம்பும் அம்பைப்போல அவனது கையிலிருந்த வேல் விர்ரென்று கிளம்பியது; வேகமாக அந்தப் புலியின் விலாப்புறத்தைத் தாக்கியது.

திடீரென வேல் வந்து தாக்கவே புலியும் ஒருகணம் நிலைத்து நின்றுவிட்டது. பின் வீரன் பக்கமாகத் திரும்பி நின்றது அந்தப் புலி; வேதனை தாங்காமல் தன் கோரப் பற்களைக் காட்டி உறுமிற்று; தன்னைத் தாக்கிய அந்த வீரனின் உடலைக் கிழித்தெறிந்து, இரத்தத்தை உறிஞ்ச வேண்டும் என்னும் ஆக்கிரோஷத்தோடு நின்றது புலி.

வீரனும் வீணே நின்றிருக்கவில்லை; புலி திரும்பி நின்ற மறுகணமே அதன்மேல் பாய்ந்தான். வீரனுக்கும் புலிக்கும் கடும் போர் நிகழ்ந்தது. அந்தக் கொடும் புலியின் கர்ஜனை அந்தப் பள்ளத்தாக்கு முழுவதிலுமே எதிரொலித்தது. தன் கூரிய நகங்களால் கீரி அந்த வீரனின் உடலெங்கும் காயங்களை ஏற்படுத்தியது அந்தப் புலி. மறவனின் உடலிலிருந்து இரத்தம் சொட்டுச் சொட்டாய்க் கொட்டிக் கொண்டிருந்தது.

உக்கிரத்துடன் அந்தப் புலி பொங்கி எழுந்தது; உதடுகள் துடித்தன; மீசை மயிர்கள் படபடத்தன.

நடுங்கும் கால்களுடன் வீரனைக் குறி பார்த்து நின்றது அந்தப் புலி; பிளந்த வாயுடன் முன்னங் கால்களைத் தூக்கிற்று; வீரனைத் தாக்கிற்று; வீரனே...புலியின் பாய்ச்சலுக்குச் சிறிது விலகி நின்ருன். குறி தவறிய புலி கீழே விழுந்து உருண்டது; அதன் மேலே வீரன் பாய்ந்தான். அவனது இரும்புக் கரங்கள் புலியின் தாடைகளிரண்டையும் இறுகப் பற்றின; வேதனை தாங்காமல் புலி உறுமிற்று; காற்றிலே படபடக்கும் குத்து விளக்கொளியின் ஜுவாலையைப் போல அவர்களின் அழகுருவங்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

வீரன் தனக்குக் கிடைத்த

பிடியை விட்டானில்லை; வெறி பிடித்தவனைப் போல் அதன் தாடைகளைப் பற்றிக் கொண்டிருந்தான் அவன்; நீண்ட நேரப் போராட்டத்திற்குப் பின் புலியின் வாயைக் கிழித்தெறிந்தான் மாவீரன்.

இரத்த வெள்ளத்திலே மிதந்து கொண்டிருந்தது அந்தப் புலி; மரணத் துன்பத்தோடு துடிதுடித்துக் கொண்டிருந்த அந்தப் புலியை உடலெல்லாம் காயத்தோடு பயங்கரப் பார்வையுடன் நோக்கிக் கொண்டிருந்தான்.

இரத்தம் படிந்த வீரனது உடல் நினைவிற்கு வரவே துடியாய்த் துடித்து விட்டாள் அந்த இசைக் குயிலாள்; வீரனை ஊஞ்சலருகே அழைத்து வந்து அதிலே அமரச் செய்தாள்; தன் தோழியை உடனே தண்ணீர் கொண்டு வரச் செய்தாள்; தன் சீலைத் தலைப்பிலே ஒரு பாகத்தைக் கிழித்தெடுத்துச் சில பச்சிலை மூலிகைகளுடன் அவனது காயங்களுக்கெல்லாம் கட்டுக்கள் கட்டினாள்; வீரன் அவளது உடலசைவிலே தன் உள்ளத்தைப் பறிகொடுத்து அவளையே கண்ணிமைக்காது வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

"உங்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்; தக்க சமயத்திலே உதவி செய்தீர்கள்." அவளது கொவ்வைக் கனியதரங்கள் இந்த வார்த்தைகளை உதிர்த்தன.

தன் உள்ளத்தை அவளது பேரழகிலே பதித்திருந்த அவன் பதில் சொல்லத் தடுமாறினான். "ஆம்... வாய்ப்புக் கிடைத்தது...கடமையைச் செய்தேன்" என வாய் குழறக் கூறி முடித்தான்.

வீரனின் முகத்திலே நீர்த்திவலைகள் துளிர்த்தன, மங்கையும் அவனது வியர்த்த முகத்தை உலர்த்தினாள். மாதவளின் பொன் முகத்திலே ஒரு புன்னகை பளிச்சிட்டு நெளிந்தோடியது. வீரனின் கண்களினின்றும் வெளிப்பட்ட ஒளித்தாக்குதலைத் தாங்காத அவளது கண்கள், தம் ஒளியினை நிலத்தின்மேல் பாய்ச்சி அதனிடம் அடைக்கலம் புகுந்தன. இன்பப் பார்வையைத் தன்பால் இழுத்துக் கொண்டு விட்டதே என்ற எண்ணத்தோடு வெறித்து நோக்கினான் நிலத்தை.

சிறிது நேரத்திற்குப் பின் களைப்பு நீங்கி எழுந்து நின்றான் மாவீரன்; வீரன் வீடு செல்லத் தயாராகி விட்டான் என்பதைக் குறிப்பால் உணர்ந்து கொண்டாள் ஒண்தொடி.

"இன்று எங்கள் வீட்டிலே தங்கிச் சென்றால்—அது எங்கள் பேறு" என்று அவள் நாணத் தோடியைந்த குரலில் வீரனிடம் கூறினாள். வீரன் ஒரு கணம் யோசித்தான்; தந்தை தன் வரவுக்காகக் காத்துக் கொண்டிருப்பார் என்ற நினைவு வரவே, "இல்லை; இன்று நான் விரைவில் வீடு செல்ல வேண்டும்; முடிந்தால் நாளை வருகிறேன்" என்று பதிலிறுத்தான் வீரன்; அந்த மங்கையும் வடித்து வைத்த பளிங்குச் சிலைபோல் அசைவற்று நின்று கொண்டிருந்தாள்.

செக்கர் வானில் புகழுடன் விளங்கிக் கொண்டிருந்த சூரியன் மேற்றிசையிலே சிறிது சிறிதாய் மறைந்து கொண்டிருந்தான்; அந்தக் கதிரவனின் பொன்னொளி பட்டுப் பிரகாசித்துக் கொண்

டிருந்த அந்தத் தங்க நிற மேனியளை விட்டுப் பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றான் அவன்.

* * *

வீரன் அன்றிரவு நிலா முற்றத்திலே நடை பழகிக் கொண்டிருந்தான்; நடந்து நடந்து அவனது கால்களும் அலுத்து விட்டன; உள்ளத்துப் போராட்டம் கண்களின் உறக்கத்தைத் தடுத்து நிறுத்தின; சோலைக் குயிலாளின் இன்னிசை கீதம் இன்னும் அவனது காதுகளிலே இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தது.

"வீரம் செறிந்த பெரும்
தீரரையே
விழைந்தார்கள் கன்னியர்கள்—
நம் நாட்டில்
தீரம்தனைக் காட்டிப் பெரும்
புலியைக்
கொன்றிடிலே புகழ்பெற்றார்
வீரர்களும்"

ஆம்; அவனும் கொடும் புலியைக் கொன்று பெரும் புகழ் கொண்டு விட்டானல்லவா? அவள் அவனை மணந்து கொள்ள மறுப்பாளோ? வீரங்காட்டி விழுப்புண் பெற்ற அவனை மணந்துகொள்ள அவளுக்கென்ன தடை?

அவனது உடல் முழுவதும் உணர்ச்சி வசப்பட்டிருந்தது. பிரகாசமான அவனது கண்கள் இப்போது ஒளியிழந்து நின்றன; எப்போதும் துரு துருவென்றிருக்கும் அவனது கைகள் அடங்கிக் கிடந்தன; அவனது உள்ளம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டும் வண்ணமாய் அவனது கால்கள் ஒரு நிலையில் நில்லாமல் நிலா முற்றத்தையே சுற்றிக்கொண்டிருந்தன. இனம் தெரியாத ஒரு அமானுஷ்யமான அமைதி சூழ்ந்திருக்கும் சூனியப் பிரதேசத்திலே தன் உள்ளம் சஞ்சரித்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தான் அவன்

சலிப்புக் கலந்த சிந்தனைக் கிடையில் சிக்கிக் கொண்டிருந்த அவனது முகம் திடீரென்று மலர்ச்சியுற்றது; கண்களிலே ஒரு புத்தொளி வீச ஆரம்பித்தது.

சிறிது நேரத்திலே சித்திரம் தீட்டத் திரையொன்று கொண்டு வந்தான்; வகை வகையான வண்ணக் குழம்பிலே துவைத்தெடுத்து லாவகமாகத் திரையிலே வைத்தான். தூரிகையும் தங்குதடையின்றித் தன் பிரயாணத்தைத் தொடர்ந்தது. முகத்திலே புன்சிரிப்புத் தவழ—உள்ளத்திலே உவகை பொங்கியெழ—நரம்புகளிலே புத்துணர்ச்சி வழிந்தோட அவன் சித்திரம் தீட்டுவதிலே மூழ்ந்து விட்டான்.


## ஸ்ரீமகள் கம்பெனி

எவருமே மறக்க முடியாத அளவில் புத்தகங்களை வெளியிடுகிறார்கள். அதுவும் உயர்ந்த பதிப்புகளைக், குறைந்த விலையில்.

படித்து மகிழவோ, பரிசு கொடுத்து வாழ்த்தவோ உங்களுக்கு நல்ல நாவல்கள், நாடகங்கள், இலக்கியங்கள் தேவையானால், உடனே எழுதுங்கள். குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் கரங்களிலே தவழும்.

மானேஜர்
ஸ்ரீமகள் கம்பெனி
122 வரதாமுத்தியப்பன் தெரு,
சென்னை 1.

அவனது பழகிய கைகளும் பல முறை பரிதவித்தன. தன் உள்ளத்திலே பதித்திருந்த அந்த இசைக் குயிலாளின் மனோகர உருவத்தை, மனக் கண்ணால் பார்த்துப் பார்த்து, திரையிலே தீட்டுவதற்குத் தன் கைகளை ஏவி விட்டான் வீரன்; அந்தக் கைகள் கட்டளையை விரைந்து நிறைவேற்றிக் கொண்டிருந்தன.

"அவளது அருவிக் கூந்தலை இப்படி எழுதினால் நன்றாயிருக்குமே...தேன் மொழி பேசும் மீன்விழிக் கண்களை அப்படி எழுதினால் நன்றாயிருக்குமே...சே... அவளது ரோஜாக் கன்னத்தை இப்படியா வரைவது?......கொவ்வை வயதரங்கள்—கொடியென்னும் துடியிடை...இவைகள் இப்போதுதான் நன்றாயிருக்கின்றன" இவ்விதமாய்த் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே சித்திரம் தீட்டிக் கொண்டிருந்தான் வீரன்.

நடு இரவு கழிந்தது; அவன் தான் ஈடுபட்டிருந்த வேலையிலே முழு வெற்றியும் கண்டு விட்டான்; அவனது உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது; நீர்த் திவலைகளைத் துடைத்துக் கொண்டான்; எழுதி முடித்த படத்தைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்தான்; சூழ்ந்திருக்கும் துன்பத்திற்கெல்லாம் அஞ்சாமல் சுரங்கம் தோண்டுபவன் தகத்தகவென மின்னிக்கொண்டிருக்கும் தங்கப் பாளங்களைக் காண்பதைப்போல— ஆழ்கடலில், போனால் வராத பொன்னான உயிரையும் மதியாது மூச்சடக்கி மூழ்குவோன் ஓர் முத்துக் குவியலைக் காண்பதைப் போல—அவன் தான் உருவாக்கிய எழிலரசியின் உருவத்தைக் கண்டு பூரிப்பிலே மூழ்கிப் போனான்.

சந்திரனைக் கண்ட நீலக்கடல், அலை முகங்காட்டிப் பொங்கியெழுந்து ஆரவாரிப்பதைப்போல அந்த எழிலுருவைக் கண்ட அவனது உள்ளத்திலும் உணர்ச்சியலைகள் துள்ளிக் குதித்து ஆரவாரித்தன; அவனது உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சிகளெல்லாம் வார்த்தைகளாய் உருப்பெற்று வெளிப்பட்டன.

"சிந்தைக்கினியவளே! சிங்காரப் பைங்கிளியே! கன்னித் தமிழிசைத்து—மின்னலிடையசைத்து என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்டு எங்கோ சென்று விட்டாயே! புலியைக் கொன்றேன்; புண்ணானேன் உடலெல்லாம்; அவைகூட என் உள்ளத்தைத் துயரத்தில் ஆழ்த்தவில்லை; ஆனால் உன் மாறாத நினைவு என் இதயத்தைப் புண்ணாக்கி விட்டதே! தணியாத் தாபத்தை என் உள்ளத்திலே உண்டாக்கி விட்டாய்! தவிக்கிறேன் இப்போது. தங்கப் பதுமையே தவிக்கிறேன்."

தன் உள்ளத்தில் தோன்றியவற்றையெல்லாம் சொல்லடுக்காய்க் கொட்டினான் அவன்; கொட்டித் தன் உள்ளத்தை அழுத்திக்கொண்டிருந்த துயரத்தைக் குறைத்துக் கொண்டான்.

* * *

கதிரவன் கீழ்த் திசையிலே எழுந்தான் தன் பொற்கிரணங்களால் உறங்கிக் கொண்டிருந்த உலகத்தைக் குளிப்பாட்ட. பறவையினங்களெல்லாம் கூடுகளினின்றும் பறந்தோடின; ஆனால் அந்த வீரனின் முகத்தாமரை மட்டும் இன்னும் மலரவில்லை; அவன்